இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 32

சுடர் 32 | கதிர் 74 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 26, புதன்கிழமை 08.02.2017

## 10 இந்திய மீனவர் நெடுந்தீவில் கைது

யாழ்ப்பாணம், பெப். 8
இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 10 பேர் கடற்படையினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.
தமிழ் நாட்டின் இராமேஸ்வரம் பிரதேச மீனவர்கள் இரு விசைப் >> 28



## ராணுவ முகாமை அகற்றச் சகலரும் ஆதரவளியுங்கள்


### புதுக்குடியிருப்பில் போராட்டம் நடத்தும் பொதுமக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, பெப். 8
புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் அமைந்துள்ள 682ஆவது படைப் பிரிவின் முகாமை அங்கிருந்து அகற்றுவதற்கு அனைத்து மக்களும் முன்வரவேண்டும். புதுக் >> 28

## யாழ். குடாநாட்டில் அரிசி விலையில் மாற்றம் இல்லை

### வணிகர் கழகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 8
அரிசி விற்பனை தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் வெளியாகி அவற்றில் குறிப்பிடப்பட்டிருக்கும்விலை விற்பனைக்கு >> 04



## சசிகலா சதி

## கட்டாயப்படுத்தியே பதவி விலக வைத்தனர்

### 'ஜெ' சமாதி முன் போட்டுடைத்தார் ஓ.பி.எஸ்

கொழும்பு, பெப். 8
முதல்வர் பதவியிலிருந்து பதவி விலகுமாறு தான் கட்டாயப்படுத்தப்பட்டதாக ஓ. பன்னீர்செல்வம் பரபரப்புக் >> 04

முச்சந்தி முரளி



மகிந்த அணிக்கு ஊக்க மருந்து குடுக்கிறார் பாருங்கோ...

## வடக்கிலிருந்து இராணுவத்தை விரட்டும் சதியே மக்கள் போராட்டம்

### அரசியல் பின்புலமே காரணம் என பாதுகாப்புச் செயலர் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப்ரவரி 8
வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவதற்கான சதித் திட்டமே பிலக்குடியிருப்புப் போராட்டம். இதற்கு அஞ்சி - மசிந்து நாம் காணிகளை ஒப்படைக்க முடியாது. இந்தப் போராட்டத்தின் பின்புலத்தில் அரசியலே இருக்கின்றது.
இவ்வாறு குற்றஞ்சாட்டுகிறார் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி.
முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு பிலக்குடியிருப்பு மக்கள் தமது காணிகளை வான்படையினர் விடுவிக்க வேண்டும் எனக் கோரி நேற்று எட்டாவது நாளாகவும் போராட்டம் >> 28



## மண் மீட்பு போராட்டத்துக்கு தென் பகுதி மக்களும் ஆதரவு

### நீர்கொழும்பில் இன்று கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், பெப். 8
மண் மீட்புக்காகப் போராடும் முல்லைத்தீவு கேப்பாபிலவு மற்றும் புதுக்குடியிருப்பு மக்களுக்கு தென் பகுதி மக்களும் ஆதரவு தெரிவித் >> 04

## ஜெனிவா அமர்வில் பாதகமேதும் ஏற்படா

### கூட்டு அரசு நம்பிக்கை

கொழும்பு, பெப். 8
ஜெனிவா அமர்வில் இலங்கைக்குப் பாதகமான எந்த விடயமும் இடம்பெறாது. அதனை உறுதியாகக் கூற முடியும். இவ்வாறு பிரதி அயலுறவுத்துறை அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார். அவர் மேலும் தெரித்ததாவது:
இலங்கைக்குப் பாதகமாக மற் >> 28

## சைட்டம் அதிகாரியுடன் அலைபேசியில் பேசிய எமன்

கொழும்பு, பெப். 8
நான்எமன்பேசுகிறேன். உன்னைக் கொலை செய்யப் >> 28

### தொல்பொருள்முக்கியத்துவம்

## 759 இடங்கள் வடக்கு- கிழக்கில் அடையாளம்

கொழும்பு, பெப். 8
வடக்கு- கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த 759 இடங்கள் இனங் காணப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார். >> 26

## அரசிடம் இருந்து சாதகமான பதில் எதுவுமே இல்லை

### பிலக்குடியிருப்பில் 8ஆவது நாளாகவும் தொடர்கிறது மக்கள் போராட்டம்

முல்லைத்தீவு, பெப். 8
வன்னிப் பிராந்திய விமானப் படைத் தலைமையகத்தை அங்கிருந்து அகற்றித் தமது சொந்தக் காணிகளை விடுவிக்குமாறு கோரி பிலக்குடியிருப்பு மக்கள் மேற்கொண்டு வரும் போராட்டத்துக்கு இதுவரை >> 28

## முல்லைத்தீவு மக்கள் பிரச்சினை; விவரம் கோருகிறார் மைத்திரி

### அமைச்சர் ரிசாத் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 8
கேப்பாபிலவு மற்றும் புதுக்குடியிருப்பு மக்களின் காணிப் பிரச்சினைகளை எழுத்து மூலம் அறிக்கையிடுமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தன்னிடம் தெரிவித்ததாக, அமைச்சர் ரிசாத் பதியுதீன் குறிப்பிட்டார். >> 27

## மக்கள் போராட்டத்துக்கு பெருகுகிறது ஆதரவு


### பல்கலைச் சமூகமும் பங்கேற்பு அனைவருக்கும் அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 8
காணிகளை விடுவிக்குமாறுகோரி முல்லைத்தீவு கேப்பாபிலவு பிலக்குடியிருப்பு மக்கள் முன்னெடுத்துள்ள தொடர் போராட்டத்துக்கு சமூக அமைப்புகள், இளையோர், பாடசாலை மற்றும் பல்கலைக் கழக மாணவர்கள் அனைவரும் முழு ஆதரவு வழங்க வேண்டும்.
இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம் கோரியுள்ளது. >> 27

## பிலக்குடியிருப்புமக்கள் போராட்டம்; நாடாளுமன்றில் இன்று விவாதம்

யாழ்ப்பாணம், பெப். 8
கேப்பாபிலவு மக்களின் காணிகளை விடுவிப்பதற்கு அரசு இணங்கியிருந்தது. அதனைச் செயற்படுத்தவேண்டும் எனக் கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளைப் பிரேரணை மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் இன்று எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.
சபை ஒத்திவைப்புப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான பல்லாயிரம் ஏக்கர் காணிகளை 2009 ஆம் ஆண்டிலே >> 26





# குடிவரவு சட்டங்களைக் கடுமையாக்குக

*ஞானசாரர் கோரிக்கை*

கொழும்பு, பெப். 8

நாட்டின் குடிவரவு-குடியகல்வுச் சட்டங்களைக் கடுமையாக்க வேண்டும். அதற்கான அவசியம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

நாட்டின் குடிவரவு குடியகல்வு சட்டங்கள் தளர்வாக உள்ளன. இது இனவாதிகள் இலங்கைக்குள் நுழைய இந்தத் தளர்வு வாய்ப்பாக அமைந்துள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து தெளிவுபடுத்தப் பொதுபலசேனா அமைப்பு நேற்றுக் காலை குடிவரவு குடியகழ்வு கட்டுப்பாட்டாளர் நிமல் ரணசிங்கவைச் சந்தித்தது. இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே ஞானசார தேரர் மேற்கண்டவாறு கூறினார். (த-4)

# பொலிஸாரிடம் தகவல் வழங்க மக்கள் அச்சம்

## கிளிநொச்சி சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டத்தில் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, பெப். 8

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் குற்றச்செயல்கள் தொடர்பில் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று தகவல் வழங்கிவிட்டு வீடு செல்வதற்கு முன்பே, குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு நாம் வழங்கிய தகவல் தெரியப்படுத்தப்படுகிறது. இதனால் பொலிஸார் மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்.

இவ்வாறு நேற்றைய தினம் இடம்பெற்ற கிளிநொச்சி மாவட்ட சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் சிவில் சமூகப் பிரதிநிதிகளால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. சிவில் பாதுகாப்புக்குழுக் கூட்டம் நேற்றையதினம் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாருக்கு தகவல் வழங்கி ஒத்துழைக்குமாறு கோருகின்றனர். ஆனால் நாம் பொலிஸ் நிலையம் சென்று தகவல் வழங்கிவிட்டு வீடு செல்வதற்கு முன்பே, நாம் வழங்கிய தகவல் தொடர்பில் குற்றஞ்சாட்டப்படுபவர்களுக்கு தகவல் வழங்கப்படுகிறது. இந்தச் செயற்பாடு காரணமாக பொலிஸார் மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்.

இந்த நிலமையில் எந்த நம்பிக்கையில் பொலிஸாருக்குத் தகவல் வழங்க முடியும். அவ்வாறு வழங்கும் தகவலால் ஏற்படும் பாதக நிலமைக்கு யார் பொறுப்பு என்று சிவில் சமூகப் பிரதிநிதிகளால் பலமான கேள்விகள் முன்வைக்கபபட்டன.

இனிவரும் காலத்தில் தகவல்களை வழங்க முன்வர வேண்டும் . அவ்வாறு தகவல்களை பொலிஸ் நிலையம் சென்று தகவல் வழங்குவதனால் ஏற்படும் விளைவுகளுக்கு அச்சம் இருப்பின் பொது மக்கள் மாவட்டச் செயலாளரிடம் அல்லது பிரதேச செயலாளர்களிடமும் தகவல்களை வழங்க முடியும்.

அது மட்டுமன்றி பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளின் நேரடி தொலைபேசிகளுக்கும் தகவலை வழங்க முடியும் என்று மாவட்டச் செயலாளர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் குற்றச் செயல்களில் சிறுவர் மீதான வன்முறைகள் முக்கிய பிரச்சினையாக உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கான ஒத்துழைப்பும் கோரப்பட்டது. (வ-10)

*சைட்டம் அதிகாரியின் கார் மீது துப்பாக்கிச் சூடு*

# விசாரணை அறிக்கையை சபையில் முன்வைக்கக் கோருகிறது ஜே.வி.பி

கொழும்பு, பெப். 8

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியின் (சைட்டம்) நிறைவேற்று அதிகாரியை இலக்குவைத்து துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் உடனடி விசாரணைகளை நடத்தி அது தொடர்பான அறிக்கையை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்குமாறு மக்கள் விடுதலை முன்னணி அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சபையில் கேள்வி எழுப்பினார். சைட்டம் நிறைவேற்று அதிகாரியை இலக்குவைத்து துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது எனக் கூறப்படும் நிலையில், அது பற்றி பலகோணங்களில் கருத்துகள் வெளியிடப்பட்டு வருகின்றன. சைட்டத்துக்கு எதிரானவர்கள் இதைச் செய்திருக்கலாம் என்ற கோணத்தில் அரசிலுள்ள அமைச்சர்கள் சிலர் கருத்து வெளியிட்டு வருகின்றனர். சம்பவம் குறித்து உடனடியாக விசாரணை நடத்தப்பட்டு, அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் – என்றார்.

இதற்குப் பதிலளித்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. பொலிஸ் அறிக்கை கிடைத்ததும் அது சபையில் சமர்ப்பிக்கப்படும் – என்றார். (வ-5)



# கிராம அலுவலர்களுக்கும் கிடைக்கும் அரசின் 'ரப்'

*யாழ்ப்பாண மாவட்டச் செயலர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், பெப். 8

கிராம அலுவலர்கள் அனைவருக்கும் 'ரப்' வழங்கப்படவுள்ளதாக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

மறைந்த கிராம அலுவலர் கேமலதா செல்வராஜாவின் ஞாபகார்த்த தினமும் கிராம அலுவலர்கள் கௌரவிப்பு நிகழ்வும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் மாவட்டச் செயலர் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்நாட்டு அமைச்சு அனைத்துக் கிராம அலுவலர்களுக்கும் 'ரப்' வழங்குவதற்கு அனுமதியளித்துள்ளது. இதன்படி விரைவில் 'ரப்' வழங்கப்படும். அதன் ஊடாகப் பொதுமக்களுக்கு விரைவான சேவைகளைக் கிராம அலுவலர்கள் வழங்கவேண்டும்.

இன்று 30 வீதமான சேவைகளை மட்டுமே கிராம அலுவலர்கள் வழங்கி வருகின்றனர். மிகுதி 70வீதமான சேவைகள் மக்களுக்கு வழங்கப்படாமல் காணப்படுகின்றன.

தகவல் அறியும் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே அனைத்து உத்தியோகத்தர்களும் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படவேண்டும். மக்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்க வேண்டும்–என்றார்.

இந்த கௌரவிப்பு நிகழ்வில் சிறப்பாகச் செயற்பட்ட கிராம அலுவலர்கள் பாராட்டப்பட்டதுடன் அவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (த-8)

*தலை இருக்கும்போது வால் ஆடியதால்*

# நாடாளுமன்றில் மூண்டது சர்ச்சை

கொழும்பு, பெப். 8

சர்ச்சைக்குரிய திவுலப்பிட்டிய மண் விவகாரம் தொடர்பில் காணி அமைச்சரிடம் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு விடயதானத்துடன் தொடர்பற்ற பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க பதிலளிக்க முற்பட்டதால் ஆளும் – எதிரணி உறுப்பினர்களுக்கிடையில் சபையில் கடும் சொற்போர் மூண்டது.

மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக்க அனுருத்த, திவுலப்பிட்டிய தொகுதியில் உள்ள அரசுக்குச் சொந்தமான காணிகள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பியிருந்தார். காணி அமைச்சர் ஜோன் அமரதுங்க சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை என்பதால் திவுலப்பிட்டிய தொகுதி ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளரான பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க பதிலளிக்க முற்பட்டார்.

திவுலப்பிட்டிய தொகுதியில் மண் கொள்ளையில் ஈடுபட்டவர்கள் அரச காணிகள் குறித்து கேள்வி எழுப்புவது வேடிக்கையாகும் எனக் குறிப்பிட்டு தனது உரையை ரஞ்சன் ஆரம்பித்தார்.

இதன்போது குறுக்கீடு செய்த மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க, விடயப் பரப்புக்குப் பொறுப்பான அமைச்சர் இல்லையெனில் அதற்குப் பொறுப்பான பிரதி அமைச்சர், ஆளும் கட்சி முதன்மைக் கொறடா அல்லது சபை முதல்வர் ஆகியோரில் ஒருவரே பதில் வழங்க முடியும். மாறாக விடயப் பரப்புக்குப் பொறுப்பற்ற ஒருவர் பதில் வழங்குவது நாடாளுமன்றச் சம்பிரதாயத்துக்கு முரணானது என்று சுட்டிக்காட்டினார். மகிந்த அணியினரும் இதே தர்க்கத்தை முன்வைத்தனர்.

விடயப் பரப்புக்குப் பொறுப்பான அமைச்சர் இல்லையெனில் தலைமை அமைச்சர் என்ற ரீதியில் எனக்குப் பதிலளிக்க முடியும். அந்த வாய்ப்பை நான் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு வழங்குகின்றேன்' என்று ரணில் கூறினார். ஆளும் - எதிரணி உறுப்பினர்களுக்கிடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனால் கொதிப்படைந்த சபாநாயகர், நீங்களே, பேசிக்கொண்டிருந்தால் – சபாநாயகர் கதிரையில் நான் இருப்பதில் என்ன அர்த்தம் இருக்கின்றது' என்று கேள்வி எழுப்பியதுடன், 'நாடாளுமன்ற சம்பிரதாயத்துக்கு முரணாக செயற்படுவதற்கு அனுமதிக்க முடியாது' என்றார். ரஞ்சன் ராமநாயக்க பதிலளிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார். (வ-5)

*அனைத்துப் பல்கலை. மாணவர்களால்*

# ரணிலின் உருவப் பொம்மை யாழ்ப்பாண நகரில் தீ வைப்பு

யாழ்ப்பாணம், பெப்.8

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் உருவ பொம்மை யாழ்ப்பாண நகர மையப் பகுதியில் அமைந்துள்ள பொலிஸ் காவலரணுக்கு முன்பாக நேற்று மாலை எரியூட்டப்பட்டது.



மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு தடை விதிக்கக் கோரி மருத்துவ பீட மாணவர்கள் பல போராட்டங்களில் ஈடுபட்டுவந்தனர். இந்தநிலையில் யாழ்ப்பாண மையப் பேருந்து நிலையத்துக்கு அண்மையில் முற்பகல் மாலபே தனியார் மருத்துவ கல்லூரியை மூட வலியுறுத்தி கையெழுத்து போராட்டத்தை அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் முன்னெடுத் தனர்.

அதன் பின்னர் நேற்று மாலை யாழ்ப்பாண நகர் மையத்தில் அமைந்துள்ள பொலிஸ் காவலரணுக்கு முன்பாக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் உருவப் பொம்மையை பொதுமக்கள் முன்னிலையில் மாணவர்கள் தீயிட்டுக் கொளுத்தினார்கள். எனினும் சம்பவ இடத்துக்கு பொலிஸார் வருகைதர வில்லை. (வ-8)

# 10 கிலோ கஞ்சா வைத்திருந்தவருக்கு ரூபா 50, 000 தண்டப் பணம் அறவீடு

10 கிலோ 250 கிராம் கஞ்சாவை உடமையில் வைத்திருந்த குற்றத்துக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து உத்தரவிட்டது யாழ்ப்பாண மேல் நீதிமன்று.

கிளிநொச்சியில் 10 கிலோ 250 கிராம் கஞ்சா போதைப் பொருளை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் போதுறு கஸ்கானகம்கே நிவுரோ சிறிதுங்க என்ற நபர் 2011ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்கின் ஆரம்பகட்ட விசாரணைகள் கிளிநொச்சி நீதிவான் மன்றில் நடைபெற்று வந்தது. 2016ஆம் ஆண்டு ஜுலை மாதம் 14ஆம் திகதி சட்டமா அதிபரால் யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்த நிலையில், நேற்றுத் தீர்ப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. சந்தேகநபரை குற்றவாளியாக இனங்கண்டு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தீர்ப்பளித்தார்.

கஞ்சா விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டுக்கு 25ஆயிரம் ரூபா தண்டமாகவும் கஞ்சா வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டுக்கு 25ஆயிரம் ரூபா தண்டமாகவும் செலுத்தப்படவேண்டும். தண்டப்பணத்தை செலுத்தத் தவறின் ஒரு வருடகால கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று நீதிபதி தண்டத் தீர்ப்பில் உத்தரவிட்டார். (வ-ரி)

## சீன முதலீட்டாளர்களே இலங்கைக்கு வாருங்கள்

*பகிரங்க அழைப்பு விடுக்கிறார் ரணில்*

கொழும்பு, பெப். 8
சீனாவின் முதலீடுகள் இலங்கைக்குத் தேவைப்படுகின்றன. சீன முதலீட்டாளர்களை இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுக்கின்றேன். இவ்வாறு கொழும்பு அரசின்

>> 28

## பொய் கூறுவதே அரசின் வேலை

*மகிந்த அணி சாடல்*

கொழும்பு, பெப். 8
அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்தது பொய்யான தகவல். இன்று (நேற்று) கடைகளுக்குச் சென்று விலைகளை விசாரித்தேன். பழைய

>> 26

## சுமந்திரன் கொலைச் சதி சி.ஐ.டி.யினரின் நாடகமா?

*அரசிடம் விளக்கம் கேட்கிறார் சிறிதரன் எம்.பி.*

கொழும்பு, பெப். 8
நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மீதான கிளைமோர் தாக்குதல் நாடகத்தைப் புலனாய்வாளர்கள் அரங்கேற்றினார்களா? இது

>> 28

## தாதியர் சங்கத்தினர் 2 வாரக் கவனவீர்ப்பு

கொழும்பு, பெப்.8
பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஐக்கிய இலங்கைத் தாதியர் சங்கம் நேற்று முதல் அடுத்த இரு வாரங்களுக்குக் கவன வீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளது எனத் தெரி வித்துள்ளது.

தாதியர் சேவைக்கான தற்போதைய அரசமைப்பை மீளாய்வு செய் தல், சம்பள முரண்பாடுகளை நீக்குதல், ஒவ்வொரு ஐந்தாண்டுக்கும் பதவியுயர்வு வழங்கல், மேலதிக வேலைக்கான கொடுப்பன வுகளில் நிலவும் முரண்பாடுகளைத் தீர்த்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக் கைக்களை முன்வைத்தே இந்தப் போராட்டம் முன் னெடுக்கப்படுகிறது என சங்கத் தலைவர் காமினி குமாரசிங்க தெரிவித்தார்.

தங்களது பிரச்சினைகள் தொடர்பில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் சுகாதார அமைச்சு உய ரதிகாரிகளுடன் பல தடவைகள் கலந்துரையாடியுள்ள போதிலும் இதுவரை தீர்வு கிடைக்காத காரணத்தாலேயே இந்தக் கவன வீர்ப்புப் போராட்டத்தில் இறங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது எனவும், தங்களது சாத்வீகப் போராட்டம் புறக் கணிக்கப்பட்டால் தொழிற் சங்கப் போராட்டத்தில் ஈடுபடவேண்டி வரும் எனவும் அவர் கூறினார். (த)

# வருடம் தோறும் நாட்டில் 2 ஆயிரம் தொழுநோயாளர்

### கூறுகிறது சுகாதார அமைச்சு

கொழும்பு, பெப். 8
இலங்கையில் வருடம் தோறும் சுமார் 2 ஆயிரம் தொழு நோயாளர்கள் புதிதாக அடையாளம் காணப்படுகின்றனர் என்று சுகாதார அமைச்சுத் தெரி வித்தது.

கடந்த வருடம் மட்டும் ஆயிரத்து 850 புதிய நோயாளர்கள் கண்டறியப் பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேல் மாகாணத்திலே (43 வீதம்) கூடுதலான தொழுநோயாளர்கள் காணப் படுகின்றனர். அடுத்தபடியாகத் தென் மாகாணத்தில் 15 சத வீதமும் கிழக்கு மாகாணத்தில் 10 சத வீதமானோரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

1980 ஆம் ஆண்டு சுகாதார அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத் திட்டம் காரணமாக வருடாந்தம் சராசரி ஒரு லட்சம் பேருக்கு 19 பேர் என்று காணப்பட்ட தொழுநோயாளர்களின் எண்ணிக்கை 10 ஆக குறைவடைந்ததாகச் சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் மருத்துவர் ஜயசுந்தர பண்டார தெரிவித்தார்.

கடந்த சில வருடங்களாக மாற்றம் இன்றி இதேநிலை காணப்பட்டாலும், சுகாதாரத் துறையினரால் சமூக ஊடகங்களின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத் திட்டங்கள் காரணமாக இந்த எண்ணிக்கையை ஒரு மட்டத்தில் தொடர்ந்தும் அப்படியே வைத்திருக்க முடிகின்றது என்றும் அவர் கூறினார்.

உலக சுகாதார நிறுவனத்தின் தொழுநோய் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இடம் பெற்றுள்ள 22 முன்னுரிமை நாடுகளில் இலங்கையும் இடம்பெற்றுள்ளது. இலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளவர்களில் 10 சத வீதமானோர் சிறுவர்கள் என்று உலக சுகாதார நிறுவனம் சுட்டிக்காட்டுகின்றது. 2020 ஆம் ஆண்டு தொழு நோய் இல்லாத நாடு இலங்கை என்ற வேலைத் திட்டமொன்றும் தற்போது சுகாதார அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் மலேரியா இல்லாத நாடு மற்றும் யானைக்கால் நோய் இல்லாத நாடு என்று உலக சுகாதார நிறுவனத்தால் பட்டியல் இடப்பட்டுள்ள இலங்கை 2020 ஆம் ஆண்டில் தொழுநோய் இல்லாத நாடு என்ற இலக்கை அடையும் என்று சுகாதார துறை அதிகாரிகள் நம்பிக்கை கொண்டுள்ளனர். (த-4)

## வவுனியா வைத்தியசாலை தாதி உத்தியோகத்தர் கைது

யாழ்ப்பாணம், பெப். 8
வவுனியாவில் வைத்தியசாலையில் அரச வேலை வாய்ப்புப் பெற்றுத்தருவதாகக் கூறி பொதுமக்களிடம் பணம் பெற்று மோசடி செய்த குற்றச்சாட்டில் வவுனியாவைச் சேர்ந்த பெரும்பான்மையின தாதிய உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவிலுள்ள வைத்தியசாலையில் தாதியாக கடமையாற்றும் 35 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். 4 பேரிடம் அவ்வாறு ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபா பெற்று அவர் மோசடி செய்துள்ளார். ஏமாற்றப்பட்ட ஒருவர் நேற்றுக் காலை வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறையிட்டிருந்தார். அதன்படி குறித்த தாதி நேற்றுக் கைது செய்யப்பட்டு விசாரணையில் உள்ளார். நீதிமன்றில் முற்படுத்தப் படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4)

*இந்தியா - இலங்கை இடையே*

## சமுத்திர மின் கம்பிக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு தீர்மானம்

கொழும்பு, பெப். 8
சூரிய ஒளி மற்றும் காற்றின் விசை மூலம் மின் உற்பத்தி செய்து இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே சமுத்திர மின் கம்பிக் கருத்திட்டமொன்றை நடை முறைப் படுத்த உத்தேசித்துள்ளதாக மின் வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதியமைச்சர் அஜித் பி.பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எழுப் பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமுத்திர மின் கம்பிக் கருத்திட்டம் தொடர்பில் இலங்கை - இந்தியாவுக்கு இடையே 2010ஆம் ஆண்டு உடன்படிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. சூரிய ஒளி மற்றும் காற்றின் விசை மூலம் முதற் கட்டமாக 500 மெகா வோல்ட் மின் உற்பத்தியும் பின்னர் மேலும் 500 மெகாவோல்ட் மின் உற்பத்தியும் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் இந்தியாவுக்கு மின் தட்டுப்பாடு ஏற்படும்போது இலங்கையிலிருந்தும், இலங்கைக்கு மின் தட்டுப்பாடு ஏற்படும்போது இந்தியாவிலிருந்தும் மின் சக்தி பரிமாற்றம் செய்யப்படும். இதனால் எமக்கு இலாபத்தையும் ஈட்டமுடியும்.

இந்தத் திட்டத்தை நிறைவு செய்ய 554 மில்லியன் அமெரிக்க டொலர் தேவை என்று மதீப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதன் முதற் கட்டத்தை 372 மில்லியன் அமெரிக்க டொலர்களில் நிறைவு செய்யவும் முடியும். இதற்காக இரு நாடுகளும் தலா 50 வீத பங்களிப்பை வழங்க வேண்டும். இலங்கை அரசு இவ்வளவு பெரிய தொகையை அவசரமாக முதலீடு செய்யாது. இந்தத் திட்டத்தை 2020ஆம் ஆண்டுக்குள் நிறைவு செய்ய எம்மால் முடியாதுள்ளது. நாங்கள் இந்த விடயம் குறித்து முதலீட்டாளர்களுடன் கலந்துரையாடி வருகின்றோம் - என்றார். ஏற்கனவே 100 மெகா வோல்ட் உற்பத்திக்கான திட்டமொன்று முன்மொழியப்பட்ட போதிலும் நடைமுறைப் படுத்தப்படவில்லை. இந்த நிலையில் இந்தத் திட்டம் சாத்தியப்படுமா? என்று நாடாளு மன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க எழுப்பிய குறுக்குக் கேள்விக்குப் பதில் வழங்கிய பிரதி அமைச்சர் அஜித் பீ.பெரேரா, ஆசியாஅபிவிருத்திவங்கியின்உதவி இந்தத் திட்டத்துக்கு கிடைத்துள்ளது. விரைவில் நடைமுறைப்படுத் தப்படும் - என்றார். (வ-5)

## மோட்டார் சைக்கிளைத் திருடிச் சென்று சங்கிலி அறுத்த கில்லாடித் திருடர்கள்

*பொலிஸாரிடம் வசமாகச் சிக்கினர்*

யாழ்ப்பாணம், பெப். 8
நீர்வேலியில் மோட்டார் சைக்கிளைத் திருடி, அதே மோட்டார் சைக்கிளில் சென்று கோண்டாவிலில் சங்கிலி கொள்ளையடித்த குற்றச்சாட்டில் 2 பேர் கைது செய்யப்பட்டனர். திருடப்பட்ட மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நீர்வேலி பூதர் மடத்தை அண்மித்துள்ள குடும்பத் தலைவர் தனது வீட்டின் முன்பாக மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு அருகிலிருந்த கடையில் பொருள்கள் வாங்கித் திரும்புவதற்கிடையில் மோட்டார் சைக்கிள் காணாமல் போய்விட்டது.

அந்தப் பகுதியில் தேடுதல் நடத்திய போது மற்றொரு கடையில் சி.சி.ரி.வி. கமரா பொருத்தப்பட்டிருந்தமை தெரியவந்தது. அதன் காணொலிப் பதிவைப் பார்த்தபோது மோட்டார் சைக்கிள் ஒன்றில் வரும் 2 பேர் வீட்டின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளைத் திருடிச் செல்கின்றமை தெரியவந்தது. அது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒரு மாதத்துக்கு முன்னரே கொள்வனவு செய்யப்புட்டிருந்ததாகத் தெரிவிக்கப் பட்டது.

இந்த நிலையில் சங்கிலியைக் கொள்ளையடித்த குற்றச்சாட்டில் பொலிஸார் 2 பேரைக் கைது செய்திருந்தனர். அவர்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணையில் உள்ளனர். மோட்டார் சைக்கிளைப் பறிகொடுத்தவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றபோது தனது மோட்டார் சைக்கிளைக் கண்டு பொலிஸாருக்குத் தெரிவிக்கவே நடந்த சம்பவம் தெரியவந்தது. அவர்கள் விசாரணைக்குட்படுத் தப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4,10)

## மருதடி விநாயகர் ஆலயக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 8
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய கடன் மீளளிப்பு தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று பிரதேச செயலர் யு.யசோதா அறிவித்தார்.

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயக் கட்டுமரனப் பணிக்கு என வழங்கப்பட்ட கடன் தொகையை வழங்காதிருக்கும் ஆலய தர்மகர்த்தா சபைக்கு எதிராக குற்றவியல் வழக்கு தொடருமாறு தொழிலாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் கடந்த 19ஆம் திகதி நடந்த வழக்கில் நீதிபதியினால் அறிவுறுத்தப்பட்டது. இதற்கமையவே இந்தக் கலந்துரையாடல் நடைபெறுகிறது என்று அவர் தெரிவித்தார். (வ-10)

## சைட்டம் நிறுவனத்துக்கு 600 மில்லியன் ரூபாவை வழங்கியவர் மகிந்தவே

*கூறுகிறார் கிரியெல்ல*

கொழும்பு, பெப். 8
சைட்டம் வைத்தியசாலையை ஆரம்பிப்பதற்காக அதன் தலைவர் நெவில் பெர்னாண்டோவுக்கு 600 மில்லியனை வழங்கி அதனை ஆரம்பித்து வைத்ததே முன்னாள் அரச தலைவர் மகிந்ததான்.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்

>> 28

## குடமுழுக்கு நாளை

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய தெற்கு வாசல் கோபுர குட முழுக்கு நாளை வியாழக்கிழமை காலை 9.27 மணி முதல் 10. 08 மணி வரை நடை பெறும் என்று அறி விக்கப்பட்டது. (10)



## அச்சுறுத்தலாக உள்ள டெங்கு நோயை இல்லாது செய்வோம்

வீட்டில், பாடசாலைகளில், வேலைத்தளங்களில் சேரும் குப்பைகளைச் சரியான முறையில் வகைப்படுத்தித் தரம்பிரித்து முறையாக அகற்றிடுவோம். சிறுவர்களுக்கும் இதனை சொல்லித்தருவோம்.

**தகவல் - சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை - யாழ் . மாநகரசபை**

## மண்...

துள்ளதோடு, போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் முகமாக நீர்கொழும்பில் இன்று கவனவீர்ப்பு முன்னெடுக்கப் படும் என்று அறிவிக்கப்பட்டது.
இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிக்கக்கோரி மக் கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடு பட்டுள்ளனர். அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாகவே நீர் கொழும்பு பேருந்து நிலையத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் இன்று முன்னெடுக்கப்படவுள்ளது.
இந்த ஆர்ப்பாட்டத்தை ஒன்றிணைந்த ஊடகவியலாளர்கள் மற்றும் சிங்கள மக்கள் இணைந்து முன்னெடுக்க வுள்ளனர். இதற்கான நடவடிக்கை களை தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தினர் மேற்கொண்டுவருகின் றனர்.
இதுமட்டுமன்றி, கேப்பாபிலவு மக் களின் போராட்டத்துக்கு ஆதரவாக தென்னிலங்கை மக்கள் நேரடியாக வருகை தந்து ஆதரவு வழங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
கேப்பாபிலவுக்கு வருகைத்தந்த தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தி னர் மற்றும் பெரும்பான்மை இனத்தை சேர்ந்த சட்டத்தரணி சம்பத் புஸ்ப குமார மற்றும் மனித உரிமை செயற் பாட்டாளர் ருக்கி பர்னாந்து ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக் களுக்கு தமது ஆதரவை தெரிவித் துள்ளனர். (வ-4)

## கட்டாயப்படுத்தியே...

குற்றச்சாட்டுத் தெரிவித்தார். மக்கள், கட்சித் தொண்டர்கள் மற்றும் சட்ட மன்ற உறுப்பினர்கள் விரும்பினால் தனது பதவி விலகலைத் திரும்பப் பெறத் தயாராக இருப்பதாகவும் பன்னீர்செல்வம் தெரிவித்தார்.
இந்த அறிவிப்பு, தமிழக அரசியலில் பெரும்பரபரப்பைஏற்படுத்தியுள்ளது. அ.தி.மு.கவில் பெரும் அதிர்வலை களை ஏற்படுத்தியுள்ளது. இதனால் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் நேற்று நள்ளிரவு போயஸ் கார்டனில் அவசரமாகக் கூடி ஆராய்ந்தனர்.
ஓ. பன்னீர்செல்வம் மெரினாவில் உள்ள ஜெயலலிதா நினைவிடத்தில் நேற்றிரவு 9 மணிக்கு திடீரென சென் றார். ஜெயலலிதாவின் சமாதி முன் 40 நிமிடங்களுக்கு அமைதியாக கண் மூடி அமர்ந்து தியானம் செய்தார்.
முதலில் அ.தி.மு.க பொதுச் செயல ராக மதுசூதனனை நியமிக்கவேண் டும் என்று கூறினார்கள். அதற்கு நான் மறுத்தேன். பின்னர் சில காலத்துக்குப் பின் சசிகலாவை பொதுச் செயலராக்கவேண்டும் என்றனர். அதை நான் ஏற்றுக்கொண் டேன். ஆனால் ஜல்லிக்கட்டுபிரச்சினை யில் போராடி அரச தலைவர் ஒப்புத லோடு அவசர சட்டம் இயற்றப்பட்டது. மாணவர்கள் நிரந்தர சட்டம் கோரி னார்கள். சட்டமன்றத்தில் அவசர சட்டத்துக்கு சட்ட முன்வரைவு கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.
வர்தா புயல் நிவாரணப் பணி, ஜல் லிக்கட்டுப் போராட்டம் ஆகியவற்றை நான் சிறப்பாகக் கையாண்டது அவர் களுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது.
தலைமை அமைச்சர் மோடியை நான் சந்திக்கும் போது, துணை சபா நாயகர் தம்பிதுரையும் தனியாக நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சென்று மோடியைச் சந்திக்க முயன் றார். இது பற்றி கட்சித் தலைமை யிடம் சொன்ன போது நீதி கிடைக்க வில்லை.
சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடக்கிறது. பொதுச் செயலாளர்தான் முதல்வர் பதவியையும் வகிக்க வேண் டும். நீங்கள்தான் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று என்னிடம் சொன் னார்கள். கூட்டம் நடப்பதே எனக்குத் தெரியாது என்று சொன்னேன். எனது கையைப்பிடித்துக் கொண்டு, கட்சிக் கட்டுப்பாட்டைக் காப்பாற் றுங்கள், இதற்கு ஒத்துழைக்காவிட் டால் கட்சிக் கட்டுப்பாட்டை மீறிய தாகிவிடுவீர்கள் என்று கட்டாயப் படுத்தினார்கள். அதனால், எனது பதவி விலகலை கையொப்பமிடும் இக்கட்டான சூழலுக்கு ஆளாக்கப் பட்டேன்.
ஒட்டுமொத்த நாட்டு மக்களும், நம்மீது வருத்தத்தில் இருக்கிறார் கள். தொண்டர்களும் வருத்தத்தில் இருக்கிறார்கள், என்னை ஏன் அசிங்கப்படுத்துகிறார்கள், அவ மானப்படுத்துகிறார்கள் என்று கேட் டேன். தமிழகத்தை காப்பாற்ற தனித்து போட்டியிடுவேன் - என் றார் பன்னீர் செல்வம். (வ-4)

## யாழ்...

ஏற்றதாக உள்ளனவா என்பது தொடர்பில் கலந்துரையாடிய பின்னரே அரிசிக்கான நிர்ணய விலையைக் கூறமுடியும். அது வரை, முன்னைய விலையிலேயே அரிசி விற்பனை செய்ய அனும திக்கப்படும்.
இவ்வாறு கொழும்பிலுள்ள பாவ னையாளர் அலுவல்கள் அதிகார சபையின் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளதாக யாழ்ப்பாண வணிகர் கழகம் தெரிவித்தது.
அதிகார சபையின் அறிவுறுத்தல் கிடைக்கும் வரை யாழ். மாவட்டத் தில் அரிசி வகைகளின் விலைக ளில் மாற்றங்கள் எதுவும் வராது என்றும் யாழ்ப்பாண வணிகர் கழகம் தெரிவித்தது.
இது தொடர்பான கலந்துரையாடல் யாழ்ப்பாண வணிகர் கழகத்தில் நேற்று இடம்பெற்றது. அது தொடர்பில் யாழ்ப்பாணம் வணிகர் கழகம் தெரிவித்ததாவது:
அத்தியாவசியப் பொருள்களுக் கான அரசின் நிர்ணயித்த விலை கள் தெளிவு இல்லாமல் உள்ளன. நாட்டரிசி, சம்பா அரிசி என்பன பொதுவான விலை நிர்ணயமே நிர்ணயிக்கப்பட்டுள்ளன. சம்பா மற்றும் நாட்டரிசி ஆகிய ஒவ் வொன்றிலும் பல வகைகள் உள் ளன. அவை ஒவ்வொன்றும் விலை களில் மாற்றமடையும். ஆகவே பொதுவாக விலை நிர்ணயம் செய்தால் வணிகர்கள் மத்தியில் குழப்ப நிலை ஏற்படும்.
இது தொடர்பில் கொழும்பில் உள்ள பாவனையாளர் அலுவல் கள் அதிகார சபையின் தலைமை காரியாலயத்துடன் தொடர்பு கொண்டோம். இந்த விடயம் தொடர் பில் அதிகார சபை அறிவுறுத்தல் வழங்கியது.
'அரிசிக்கான நிர்ணய விலைகள் நிதியமைச்சால் நிர்ணயிக்கப்பட்ட போதிலும் வர்த்தமானி அறிவித் தல் இன்னும் வெளியிடப்பட வில்லை. அத்துடன் அரிசி வகை களின் விலைகள் தொடர்பிலும் தெளிவு தேவையாகவுள்ளது. வர்த்தமானி அறிவித்தல் கிடைத்த பின்னர் இந்த நிர்ணய விலை நடைமுறைக்கு ஏற்றதா? இல் லையா? என்பது தொடர்பில் கலந் துரையாடுவோம். அவை தொடர் பில் முழுமையாக ஆராய்ப்பட்டு அதன் பின்னர் தீர்மானம் எடுக்கப்படும். அதுவரை வணிகர்கள் முன் னைய காலத்தில் எந்த பெறுமதி யில் அரிசி விற்பனையில் ஈடுபட்ட னரோ அந்த விலையிலேயே விற்பனை செய்ய முடியும்.' என்று பாவனையாளர் அலுவல்கள் அதி கார சபை தெரிவித்தது.
அதிகார சபையின் அறிவுறுத்தல் கிடைக்கும் வரை யாழ். குடாநாட் டில் அரிசி வகைகளின் விலைக ளில் மாற்றங்கள் எதுவும் வராது என்று யாழ்ப்பாண வணிகர் கழகம் தெரிவித்தது. (வ-4,8)






திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் நேற்று கும்பாபிசேகம் நடைபெற்றது. பெரும் திரளான பக்தர்கள் அதில் கலந்துகொண்டனர். (ஐ)

## மனைப் பொருளியல் கண்காட்சி நாளை

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வேலணை பிரதேச செயலகத்தால் நடத்தப்படும் மண்டைதீவு மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஆடை வடிவமைத்தல், அழகுக்கலை, மனைப்பொருளியல் கண்காட்சி நாளை 9ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் இடம் பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

வேலணை பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகனும், வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினமும், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜே.ஜே.சி. பெலிசியனும், யாழ்ப்பாண மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் நா.பஞ்சலிங்கமும், கௌரவ விருந்தினர்களாக மண்டைதீவு மகா வித்தியாலய அதிபர் கே. எஸ். இளங்கோவும், கிராம உத்தியோகத்தர் எம்.சசிகாந் மற்றும் உதயராஜாவும் கலந்து கொள்ளவர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-ரி)

## மாவைக் கந்தனுக்கு திருமஞ்சம் நாளை

யாழ்ப்பாணம், பெப். 9

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை தைப்பூசத் திருநாள் சிறப்பு வழிபாடுகள் மற்றும் திருமஞ்ச வீதி உலாவும் இடம்பெறும் என்று ஆதீனகர்த்தாவும், முதன்மைக் குருவும் அறிவித்தனர்.

காலை 5 மணிக்கு திருப்பள்ளியெழுச்சியுடன் சிறப்பு முழுக்கு மற்றும் வழிபாடுகள் ஆரம்பமாகும். மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும் வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து இரவு 7.15 மணிக்கு சுவாமி திருமஞ்சத் தேரில் பவனி வருவார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

## கச்சதீவுத் திருவிழாவின் போது மலேரியாத் தொற்றுக்கு வாய்ப்பு

### தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சு அறிவுறுத்தல்

கொழும்பு, பெப். 8

கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவத்தில் இலங்கை - இந்தியப் பக்தர்கள் பல்லாயிரக் கணக்கில் கலந்து கொள்வர். இதன்போது மலேரியா நோய்த் தொற்றுப் பரவுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதால் அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மலேரியாத் தடுப்புத் திட்டமிடல் பணிப்பாளர் எச்.டி.பி.ஹேரத் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தின் பேசாலைப் பிரதேச கிணற்றில் புதிய வகையான மலேரியா நுளம்பு கடந்த ஆண்டு நடுப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. இதனை ஒழிப்பதற்குரிய சிறப்பு வேலைத் திட்டங்கள் மன்னார் மாவட்டச் செயலர் தலைமையில் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை, கச்சத்தீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் திருவிழா அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. இதில் இலங்கை - இந்தியப் பக்தர்கள் பல்லாயிரக்கணக்கில் கலந்து கொள்வார்கள். அவர்கள் மத்தியில் மலேரியா நோய் சுலபமாக பரவும் அபாயம் இருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதனைத் தடுப்பதற்கு நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு சுகாதார அமைச்சு சுகாதார அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் உற்சவத்துக்காக ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடலிலும் மலேரியாத் தொற்றுக் குறித்து சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதேவேளை, கடந்த மாதத்தில் நாடு முழுவதும் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்ட ஒன்பது பேர் வரை கண்டு பிடிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. இலங்கை, மலேரியா நோய்த் தொற்று முற்றாக தடுக்கப்பட்ட நாடாக உலக சுகாதார நிறுவனம் கடந்த ஆண்டு அறிவித்தது. (வ-5)

## புதிதாக நியமனம் பெற்ற அதிபர்களுக்கு அழுத்தம்

### இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

வடக்கு மாகாணப் பாடசாலைளில் புதிதாக நியமனம் பெற்ற தரம் 3 அதிபர்களுக்கு அரசியல்வாதிகளும் சில கல்வி அதிகாரிகளும் நெருக்கடி கொடுக்கின்றனர். வழங்கப்பட்ட பாடசாலைகளிலிருந்து விலகுமாறு அவர்கள் வற்புறுத்தப்படுகின்றனர் .

இவ்வாறு குற்றஞ்சாட்டுகின்றார் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின்.

அவ்வாறான வற்புறுத்தல் எங்காவது இடம்பெற்றால் இலங்கை ஆசிரியர் சங்கத்துக்கு உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

'வடக்கு மாகாண கல்வியமைச்சினால் இலங்கை அதிபர் சேவை தரம் 3க்குள் புதிதாக உள்ளீர்க்கப்பட்டவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டன.

தற்போது அதிபர் பதவிகளிலிருந்து பாடசாலைகளிலிருந்து அவர்களை விலகுமாறு அழுத்தம் கொடுக்கப்படுகிறது. அரசியல்வாதிகளும் வடக்கு மாகாணக் கல்வி அதிகாரிகளுமே இவ்வாறு வற்புறுத்துகின்றனர் என்று அதிபர்கள் சிலர் சங்கத்துக்கு முறையிட்டுள்ளனர்.

அவ்வாறு பதவி விலகிச் சென்று, தமக்கு வேண்டப்பட்டவர்களுக்குப் பாடசாலைகளை விட்டுக்கொடுக்குமாறும், அவ்வாறு விட்டுக்கொடுக்கும் பட்சத்தில் பதவி விலகும் அதிபர்களுக்கு, அவர்கள் விரும்பிய பாடசாலைகளை வழங்கப்படும் என்றும் அதிகாரிகளால் கூறப்படுகிறது. .

வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாக குறித்த அதிபர்களை அழைத்து பாடசாலைகளை விட்டுக்கொடுக்கும் சம்மதக் கடிதம் தருமாறு வற்புறுத்தும் செயற்பாடுகளிலும் சில வலயக் கல்விப் பணிப்பாளர்கள் செயற்பட்டு வருகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. இலங்கை ஆசிரியர் சங்கம், இத்தகைய செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கின்றது - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-4)

## சங்கு முழுக்கு நாளை

பருத்தித்துறை, பெப். 8

பருத்தித்துறை கோட்டு வாசல் ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்த மணவாளக்கோல சங்கு முழுக்கு நாளை வியாழக்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. அதிகாலை 4.30 மணிக்கு சிறப்புக் கிரியைகள் ஆரம்பமாகி, காலை 8.30 மணிக்கு வழிபாடுகளுடன் நடைபெற்று அம்பாள் வீதி உலாவந்து பக்தர்களுக்கு அருட்காட்சியை வழங்குவார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-173)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப். 8

வண்ணை. நாவலர் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று புதன்கிழமை பி.ப.1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

வித்தியாலய அதிபர் சு.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

+++++++++

யாழ்ப்பாணம், பெப். 8

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பி.ப.1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் மூத்த உதவி நிதியாளர் சி.சிவலிங்கம் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

+++++++++

யாழ்ப்பாணம், பெப். 8

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பி.ப. 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் அ.அருணந்திசிவம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

+++++++++

யாழ்ப்பாணம், பெப். 8

நீர்வேலி - அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வியாழக் கிழமை பி.ப. 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

வித்தியாலய அதிபர் சு.மோகனராஜன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சிவன் பவுண்டேசன் நிறுவுநர் க.வேலாயுதம் கலந்து கொள்வார் என்று அறிவிக்கப்பட்டது. (வ-10)

+++++++++

யாழ்ப்பாணம், பெப். 8

சண்டிலிப்பாய் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வியாழக் கிழமை பி.ப.1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் சி.தவநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண மாகாண சபைஉறுப்பினர்இஆனோல்ட் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)



வல்வெட்டித்துறை ஆதிகோயில் பகுதியில் தனியார் காணியில் இருந்து வெடிக்காத நிலையில் குண்டுகள் மீட்கப்பட்டன. வீடு கட்டுவதற்கு அத்திபாரம் வெட்டியபோதே அவை கண்டுபிடிக்கப்பட்டன. (ற-108,26)

## யாழ். குடாவில் நெல் அறுவடை ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.8

யாழ்.குடாநாட்டில் நெல் அறுவடை ஆரம்பித்துள்ளது.

தென்மராட்சி மற்றும் வலிகாமத்தில் வறட்சியால் நெற்பயிர்கள் பெருமளவில் அழிந்துள்ளன. கிணறுகளில் இருந்து தண்ணீர் இறைத்து பயிர்களைக் காப்பாற்றிக் கொண்ட விவசாயிகள் அறுவடையை ஆரம்பித்துள்ளனர்.

குடாநாட்டில் இந்தமுறை பெரும்போக நெற்செய்கையின் போது 10 ஆயிரத்து 419 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. (ற-17)

## மரண அறிவித்தல்கள்



### கணபதிப்பிள்ளை தங்கம்மா

தாளையம்பதி வீதி, நுணாவிலைப் பிறப்பிடமாகவும் கல்வயலை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தங்கம்மா 07.02.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பழனி- செல்லம்மா தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் சடாசிவம், தவமணி, காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு இராசம்மா, செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரவிகரன், சுதாமதி, சுகந்தி, சுதாகரன், சுரேஷ்கரன், சுகன்யா, சுமல்யா ஆகியோரின் அன்புத் தாயாரும் கனகராசா, சுந்தரம், பிறேமலதா, கமலாம்பிகை, பாலகிருஷ்ணன், சத்தியசீலன் ஆகியோரின் அன்பு மாமியாரும் அமிர்தன், நிகிந்தன், மதுஷாளின், டனுசன், பிரியதர்சினி, கபிலன், றொஷானி, றொஷாந்தன், லௌஷியா, அங்கிதா, நிவேதனா, வித்தகன், ஆராதனா, அபிஷேக், ஜாகீசன், கிருசானி, கர்சனா ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2017) புதன்கிழமை சுதாமதி (மகள்) இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தாளையம்பதி வீதி,
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.**

**தகவல்:
குடும்பத்தினர்**

**077 893 5698**

## மரண அறிவித்தல்கள்



### குமாரசாமி விசாகன்

**(சடையாளி, காரைநகர்)
(யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவன் .
கணினிப் பொறியியலாளர்- மலேசியா )**

காரைநகர், சடையாளியைப் பிறப்பிடமாகவும், மலேசியாவை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி விசாகன் 06.02.2017 திங்கட்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் குமாரசாமி (ஓய்வுநிலைக் கணக்காளர்) - சிவபூரணி தம்பதிகளின் அன்புப் புதல்வனும், நித்தியானந்தன் (பிரபல வர்த்தகர்- நொச்சிகாமம்) - நாகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், மாலாவின் அன்புக் கணவரும், ஆதிரையின் பாசமிகு தந்தையும், சேந்தனின் அன்புச் சகோதரனும், மயூரனின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2017) வியாழக்கிழமை காரைநகர் சடையாளி இல்லத்தில் காலை 7 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 277 7131, 077 664 3183,
021 221 1440**

(J/7970)
(11,17,18)

## செய்த குற்றத்துக்குத் தண்டனையாக மயானத்தில் வாழும் முதியவர்



கொழும்பு,பெப்.8

தனது பணிக்காலத்தில் செய்த குற்றத்துக்குத் தண்டனையாக, 20 வருடங்களாக முதியவர் ஒருவர் குருநாகல் கல்லே வெலப் பகுதியிலுள்ள மயானம் ஒன்றில் வாழ்ந்து வருகிறார்.

75 வயதுடைய ரணவிர ஆராச்சி தொன் டேவிட் என்பவரே இவ்வாறு மயா னத்தில் வாழ்ந்து வரு கிறார்.

குறித்த நபர் தனக்கு ஏற்பட்ட சம்பவம் தொடர்பில் தெரிவித்ததாவது:

'நான் நாட்டின் பல பகுதிகளில் பொதுச் சுகாதாரப் பரிசோதகராக பணியாற்றி வந்தேன். அநுராத புரத்தில் கடமையாற்றிக்கொண்டிருந்த போது, எனது அலுவலகத்தில் வைத்து மாட்டிறைச்சி கடை உரிமையாளரிடம் 300 ரூபாவை இலஞ்சமாகப் பெற்றேன். அந்தக் காலத்தில் 300 ரூபா என்பது மிகப்பெரிய பணத் தொகையாகும். இப்போது என்றால் சாதாரண ஒரு தொகை. இலஞ்சம் வாங்கியபோது அந்த இடத்துக்கு வந்த இலஞ்ச ஊழல் ஆணைக் குழு அதிகாரிகளிடம் மாட்டிக்கொண்டேன். இதனையடுத்து அவர்கள் என்னைக் கைதுசெய்தார்கள். பொலிஸார் ஊடாக என்னை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தியபோது, எனக்கு இரண்டு வருடங்கள் சிறைத் தண்டனையும், அபராத தொகையும் விதிக்கப்பட்டது. இரண்டு வருடங்கள் சிறையில் இருந்தமையால் தொழிலை இழந்தேன். மீண்டும் தொழிலைக் கேட்டு நீதிமன்றில் மேன் முறையீடு செய்தும் எனது நியாயங்களை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனையடுத்து திருமணம் செய்துகொள்ளாமல், உறவினர்களை விட்டுப் பிரிந்து சென்று நாட்டின் சில இடங்களில் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றினேன். பின்னர் நான் செய்த குற்றத்துக்குத் தண்டனை அனுபவிப்பதற்காக மயானத்தில் 20 வருடமாக வசித்து வருகின்றேன். அயலவர்கள் வழங்கும் உணவுகளை உண்டு வாழ்ந்து வருகின்றேன் - என்றார். (ஐ)



### ராசா தம்பித்துரை (தம்பிப்பிள்ளை)

**தோற்றம்
06.07.1934**

**மறைவு
06.02.2017**

யாழ்.பலாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி தோப்பு, சரஸ்வதி அம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட ராசா தம்பித்துரை 06.02.2017 திங்கட்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான ராசா - இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை (சின்னத்தம்பி) - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், சிவஞானமங்கை (லண்டன்), செல்வநாதன் (லண்டன்), கணேசகுகநாதன் (லண்டன்), மங்கையர்க்கரசி (இலங்கை), கமலாதேவி (இலங்கை), இராஜகோபால் (சிலிங்கோ முகாமையாளர் - நெல்லியடி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பூமணி, சின்னம்மா, காலஞ்சென்ற சின்னத்தம்பி, பாக்கியம், செல்லம்மா, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவகுமார் (லண்டன்), விஜிதா (லண்டன்), சிவரஞ்சினி (லண்டன்), யோகேந்திரராஜா (பிரான்ஸ்), ஆனந்தராஜா (டோகா), சாலினி (இலங்கை) ஆகியோரின் அன்பு மாமனாரும், அரவிந்தன், விஸ்ணு, அஸ்வினி, அனுஷன், சர்வினா, அஜந்தாஸ், சஜிந்தா, சங்கமி, அபிநயா, சகினா, அனோச்சியா, அஸ்வின், அனுஸ்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2017) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தோப்பு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அச்சுவேலி.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(J/7966)(11,17,18) **077 859 9473**



### சின்னத்தம்பி முருகேசு

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட 'சின்னத்தம்பி முருகேசு 05.02.2017 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னதம்பி - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பராசக்தியின் பாசமிகு கணவரும் கணேஸ்வரி, விக்கினேஸ்வரி (ஓய்வு நிலை ஆசிரியர் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி), தில்லை நாயகி (கனடா), காலஞ்சென்ற சிவபாலன் (கனடா) மற்றும் சிவநாயகி, அருள்நாயகி (வவுனியா), கருணாகரன் (லண்டன்), காளிதாசன்(லண்டன்) ஆகி யோரின் பாச மிகு தந்தையும் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் சந்திரசேகரம் (ஓய்வு பெற்ற ஆசிரியர் - நவீல்ட் பாடசாலை கைதடி), இராஜசிங்கம் (கனடா), ஞானேஸ்வரி (கனடா), இராமச்சந்திரன், அருந்தவராசா (ஐங்கரன் எண்ணெய் ஆலை - கற்குழி வவுனியா), ரஜிகலா (லண்டன்), ஜெயலஷ்மி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ராகவன் - நந்தினி . சுரேசன் - சர்மிளா, சிறீபவன் - கமலாயினி, பவகுமாரி - மயூரன், கபிலன் - வித்தியா, மிதிலன், சகிலா - தினேஸ், சஞ்சுகன் , சங்கீதா, சர்மிலா , விபுலன், விதுஷா, அரிகரன், அகல்யா, அபிசன், அபிரா, அஞ்சுகன், அபினன் ஆகியோரின் அன்புப் பேரனும் தஜீவ், அபிராம், சுஜீனா, சரணி, சசிராம், விஜேராம், தருண்ராம், லக்ஸ்மிதா, மதுமிதா, கிருத்திக், கிரிசன், கவினன், காவியா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2017) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காந்தாளம் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.**

**தகவல்:
குடும்பத்தினர்**

077 672 8386,077 373 9912, 077 352 1908

## மரண அறிவித்தல்

தோற்றம்
18
.
04
.
1958



மறைவு
05
.
02
.
2017

### பொன்னம்பலம் அமிர்தலிங்கம்

**(அதிபர் - யா/ நடேஸ்வராக் கல்லூரி,
காங்கேசன்துறை.
SLPS -II B.A.Dip. IN Edu,M.Phil**

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் சுதுமலை மத்தி மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் அமிர்தலிங்கம் 05.02.2017 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான செல்லையா -யோகரட்ணம் தம்பதியரின் மருமகனும் சந்திரகுமாரியின் (பிரதி அதிபர் - மானிப்பாய் இந்து கல்லூரி) அன்புக் கணவரும் அபிராமியின் (மருத்துவபீட 4 ஆம் வருட மாணவி - யாழ்பல்கலைக்கழகம்) அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சுந்தரலிங்கத்தின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2017) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று இறுதிக்கிரியைக்காக பூதவுடல் தாவடி இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சுதுமலை மத்தி,
மானிப்பாய்.**

**தகவல்:
மனைவி , மகள்**

## கால்கோள் விழா

கரணவாய், பெப். 8

நெல்லியடி சன்மார்க்க சபை பாலர் பாடசாலையின் கால்கோள் விழா நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. பாடசாலை பொறுப்பாசிரியர் சிவகணேசமூர்த்தி கௌரி தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமராட்சி கல்வி வலய இணைப்பாளர் (ஆரம்பக் கல்வி, செயற்பட்டு மகிழ்வோம்) கனகசபை சத்தியசீலன் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-35)

## நீர்வேலி கந்தனின் குடமுழுக்கு நாளை

நீர்வேலி கந்தசுவாமி ஆலய குடமுழுக்குப் பெரும் சாந்தி நாளை நண்பகல் 12 மணிக்கும் பி.ப.2 மணிக்கும் இடையில் சுபவேளையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு வழிபாடுகள் ஆரம்பமாகும். தொடர்ந்து இரவு திருக்கல்யாணம் இடம்பெற்று சுவாமி பூந்தண்டிகையில் வீதிவலம் வருவார்.

தலைமைக் குரு ஸ்தானீக சிவாச்சாரியார் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதன் குருக்கள் குடமுழுக்கு வழிபாடுகளை நடத்தி வைப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-17)

## டெங்கு நோய்த் தொற்று விழிப்புணர்வு செயற்பாடு

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை பிரதேசத்தில் டெங்கு நோய்த் தொற்றுத் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வளன்புரம், அமலமரி தியாகிகள் சபையின் மண்டபத்தில் விழிப்புணர்வு கருத்தரங்கு இடம்பெற்றது.

பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜே. ராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சபையின் குருமட மாணவர்கள் கலந்துகொண்டனர். டெங்கு நோய்த் தொற்றிலிருந்து எவ்வாறு பாதுகாப்பாக இருப்பது என்பது தொடர்பாக கருத்தரங்கில் எடுத்துக் கூறப்பட்டது.

அத்துடன் இந்தப் பிரதேசத்தில் டெங்கு நோய்த் தொற்றுத் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளும் தொடர்ந்து முன்னெடுக் கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.(வ-17)

## வீணை இசை நிகழ்வு

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமசைவ கலைபண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் வாராந்த ஆன்மிக நிகழ்வு வரிசையில் எதிர்வரும்10ஆம் திகதி வெள்ளிக்கிழமை சங்கீத விரிவுரையாளர் திருமதி ஜனனி நடேசமூர்த்தி வழங்கும் வீணை இசைநிகழ்வு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-173)

## சாவகச்சேரி வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சர் நேற்று வருகை

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு நேற்று முதன்முறையாக வருகை தந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் மற்றும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் க. நந்தகுமாரன் ஆகியோருடன் நேற்றுப் பி.ப. 3 மணிக்கு வைத்தியசாலைக்கு வருகை தந்த வடக்கு மாகாண சுகாதார அமைச்சர், அங்கு விடுதிகளைப் பார்வையிட்டார்.

தொடர்ந்து வைத்தியசாலையில் கடமையாற்றுவோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறிந்து அதற்கான அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பான ஆலோசனைகளையும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் பா.சத்தியலிங்கம் தெரிவித்தார். (வ- 9)

## ஓட்டோ சாரதிகள் மூவருக்குத் தண்டம்

பாடசாலை மாணவர்களை ஏற்றிக் கொண்டு ஆபத்தான முறையில் முச்சக்கர வண்டியைச் செலுத்திய குற்றச்சாட்டில் சாரதிகள் மூவருக்கு சாவகச்சேரி நீதிவான் மன்றினால் நேற்று தண்டம் அறவிடப்பட்டது.

குறித்த சாரதிகளுக்கு எதிராக சாவகச்சேரிப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை தனித்தனியாக விசாரித்த நீதிவான் மூவருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதித்தார். (வ- 9)

## சந்நிதியில் நாளை சிறப்பு வழிபாடுகள்

தொண்டமானாறு, பெப். 8

வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் தைப்பூச சிறப்பு வழிபாடுகள் நாளை வியாழக்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

முருகப் பெருமானுக்கு சிறப்பு முழுக்கு, ஆராதனைகள் இடம்பெற்று சுவாமி வெளிவீதி உலா வருவார்.

தைப்பூசத் திருநாளில் குழந்தைகளுக்குக் காது குத்துதல், முடி இறக்குதல், பால் ஊட்டுதல், திருமணங்கள் போன்ற சுபகாரியங்களைப் பக்தர்கள் மேற்கொள்வர். அத்துடன் காவடிகள், கற்பூரச் சட்டிகள் என்பவற்றை எடுத்து பக்தர்கள் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவார்கள்.

சூழலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரமம்உட்படபலமடங்களில்அன்னதானம்வழங்கஏற்பாடாகியுள்ளது.

இந்த உற்சவத்தை ஒட்டித் தொண்டமானாறு ஊடாக இடம்பெறும் பேருந்து சேவைகள் அனைத்தும் செல்வச்சந்நிதி ஊடாக இடம் பெறும் என்று தெரிவிக் க ப் ப ட் டது. (வ-173)

THE HALO TRUST

**ADVERTISEMENT FOR THE POSITION OF RADIO OPERATOR**

The HALO Trust is a British Mineclearance NGO working in fourteen countries worldwide. The HALO Trust have been working in Sri Lanka since 2002 clearing mines and other explosive remnants of war.

The applicant will work in the Kilinochchi compound although the applicant is not required to live nearby. NOTE: this position involved shift work and so the applicant must be able to attend work outside of normal office hours.

Duties include:

- Be available for operations staff to communicate at all times during the shift
- Deliver messages to Task Commanders, from Programme Manager, Operations Manager and Office Manager
- Responsible to the Operations Manager and/ or the Office Manager
- Preparation of daily statistical report
- Communicate will all minefields, especially in the event of an emergency
- Collecting the leave forms from operations staff
- Record staff leave information
- Issue of batteries, radios and test mines to minefields at the start of the day and collect them after work
- Accident or incidents information pass to Operations Manager and Programme Manager immediately
- All batteries and Radios charging daily
- Maintain Radio Room related document
- Any other duties as required by the Programme Manager

Essential:

- Spoken English language
- Written English language

Desirable:

- Computer MS Office

Interested candidates should submit their bio-data and contact details and a brief summary of their experience to:

**The HALO Trust, 450, Thirunagar west Road, Kilinochchi.**

**All applications must be submitted no later than Tuesday 14 February 2017.**
**Only successful candidates will be contacted. The interviews will take place in Kilinochchi**

### ஆள்கள் தேவை

கோண்டாவிலில் இயங்கி வரும் மில் (அரிசி ஆலை) ஒன்றிற்கு ஆண் வேலையாள்கள் தேவை.

**077 957 4934**

### மணமகள் தேவை

★85 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 13½ பாவமுடைய சுவிஸ் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது)

★85 இல் பிறந்த 12 இல் சூரியன் செவ்வாய் 14 பாவமுடைய பிரான்ஸ் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

★86 இல் பிறந்த 12 இல் செவ்வாய் 29 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

★84 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 25 பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

★85 இல் பிறந்த 8 இல் செவ்வாய் 26½ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

★88 இல் பிறந்த 8 இல் செவ்வாய் 30¼ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்று இங்கு வந்துள்ள மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.

★85 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 13½ பாவமுடைய சுவிஸ் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு அழகான மணமகள் தேவை.

★87 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 28½ பாவமுடைய எலற்ரோனிக்கல் இஞ்சினியருக்கு MSc IT இஞ்சினியர் மணமகள் தேவை.

தொடர்பு: கமலக்கண்ணன் திருமணசேவை
இல 62, இராமலிங்கம் வீதி,
பூங்கனிச்சோலையடி, முடமாவடி.
077 607 0862

### மணமகள் தேவை

இந்து குடும்பம்.34 வயது. அத்தம். உயரம் 5' 10" PR உள்ள லண்டனில் வேலை செய்யும் மணமகனுக்கு உயரமான படித்த வடிவான மணமகள் தேவை.

**076 354 8798**
**இம்மாதம் 14 ஆம் திகதிக்குப் பின்னர்**
**004 474 244 06501**

### மணமகன் தேவை

இந்து குடும்பம்.31 வயது.உயரம் 5' 1" சதயம் PR உள்ள லண்டனில் வசிக்கும் Nures வேலை செய்யும் மண மகளுக்கு படித்த வடிவான மணமகன் தேவை.

**076 354 8798**
**இம்மாதம் 14 ஆம் திகதிக்குப் பின்னர்**
**004 474 244 06501**

### காயத்திரி திருமண சேவை

சுவிஸில் 25 வருடமாக இயங்கி வரும் எமது ஸ்தாபனத்தின் கிளை நிறுவனம் யாழ்ப்பாணத்திலும் ஆரம்பிக்கப்பட உள்ளது. உங்களது பிள்ளைகளின் திருமண ஒழுங்குகளை சிறந்த முறையில் தெரிவு செய்ய எம்மை நாடுங்கள்.

**தொலைபேசி இலக்கங்கள்:**
(0041)615544242 (சுவிஸ்)
(0041)768185443 (சுவிஸ்)
(0094)776856072 (ஸ்ரீலங்கா)

### குத்தகைக்கு விடுதல்

யா/நெல்லியடி மத்திய கல்லூரியின் சிற்றுண்டிச்சாலை குத்தகைக்கு வழங்கப்படவுள்ளது. குத்தகைக்குப் பெற விரும்புவோர் இதற்குரிய விண்ணப்பப்படிவத்தை பாடசாலை அலுவலகத்தில் பெற்று 18.02.2017 இற்கு முன் ஒப்படைக்கவும்.

அதிபர்/ தலைவர்
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்
யா/நெல்லியடி மத்திய கல்லூரி, கரவெட்டி.

### காணி விற்பனைக்கு

யாழ்.மீசாலை வடக்கு, வேம்பிராய் பகுதியில் 6½ பரப்பு தோட்டக்காணி விற்பனைக்குள்ளது. (குடியிருக்க உகந்த காணி)

**077 218 7480**

### JCB வாடகைக்குண்டு



JCB வேலைகளுக்கு வாடகைக்கு உண்டு.

**077 860 0093**

### முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை (திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட) வழிகாட்டல் கருத்தரங்கு

இடம் :- IQ Center வவுனியா
திகதி :- 11.02.2017 (சனிக்கிழமை)
நேரம் :- பிற்பகல் 4.00 மணி - 6.00 மணிவரை.
மேலதிக தொடர்பு :- ஜெனி

**077 928 8233**

### சாரதி தேவை

டிப்பர் ஓடிய அனுபவமுள்ள சாரதி தேவை.

**077 239 2626, 076 828 0402**

### பணியாளர் தேவை

நெல்லியடியிலுள்ள போட்டோ கொப்பி நிலையத்துக்கு பணியாளர் தேவை. வயதெல்லை 30 இற்கு உட்பட்டவர்.

தொடர்பு:- **077 988 9278**

### பணிப்பெண் தேவை

கொழும்பு வெள்ளவத்தையில் வயோதிப பெண் ஒருவரை பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.

**071 860 9149**

### தவறவிடப்பட்டுள்ளது

04.02.2017 அன்று வைரமுத்து சத்தியானந்தன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை, இ.மி.ச. உடைய அடையாள அட்டையும் பேர்ஸுடன் (பணமும்) தவறவிடப்பட்டுள்ளது.

தொடர்பு: அம்மன் கோயிலடி, சூராவத்தை சுன்னாகம்.
077 613 8917

### 40 வருடங்களுக்கு மேலாக மக்களின் நன்மதிப்பை வென்ற 'றோயல் குளுக்கோஸ்'

தற்போது புதிய வடிவில்!!

இழந்த சக்தியை உடனடியாக மீண்டும் பெற்றிட பாவியுங்கள்

" றோயல் குளுக்கோஸ்"

Packed By:
Royal Industries, Colombo - 13.
077 727 7670




**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
**021 222 2567**

# கஞ்சா வைத்திருந்தவருக்கு 2 வருடங்கள் கடூழியச் சிறை

யாழ்ப்பாணம், பெப். 8
127 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருளை விற்பனை செய்வதற்காக வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் மாதகலைச் சேர்ந்த நபருக்கு 2 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம்.

2014ஆம் ஆண்டு ஜுன் மாதம் 19ஆம் திகதி மாதகலில் 127 கிலோ 695 கிராம் கஞ்சா பேதைப் பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மாதகலைச் சேர்ந்த மிலிதியதாஸ் அன்ரன் றொபின்தாஸ் மற்றும் ஜெ. அன்ரனி விமலராஜ் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்களுக்கு எதிரான ஆரம்ப கட்ட விசாரணைகள் மல்லாகம் நீதிவான் மன்றில் இடம்பெற்றன. இந்த வழக்குச் சட்டமா அதிபரால் 2016ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி யாழ்ப்பாண மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் வழக்கு ஆரம்பமாகியது. பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த இரண்டாவது சந்தேகநபரான ஜெ. அன்ரனி விமலராஜ் மன்றுக்கு சமுகமளிக்காது தலைமறைவாகியிருந்தார். அவருக்கு மன்று பகிரங்கப் பிடியாணை பிறப்பித்திருந்தது.

வழக்கு விசாரணையின்போது இருவரும் குற்றவாளிகளாக நீதிமன்றினால் கண்டறியப்பட்டனர். முதலாவது குற்றவாளியான மிலிதியதாஸ் அன்ரன் றொபின்தாஸ் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டது. அவருக்கு, கஞ்சா வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்த குற்றங்களுக்காக 75 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. தண்டம் செலுத்தத் தவறின் 9 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் கடந்த ஒக்ரோபர் 24ஆம் திகதி தீர்ப்பளித்தது.

இந்த நிலையில், தலைமறைவாகியிருந்த குற்றவாளி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் குறித்த குற்றவாளி நேற்று முற்படுத்தப்பட்டார். அவருக்கான தண்டனைத் தீர்ப்பை யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் நேற்று வழங்கினார். கஞ்சா வைத்திருந்த குற்றத்துக்காக ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனையும் கஞ்சா விற்பனை செய்த குற்றத்துக்காக ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனையும் மேல் நீதிமன்றால் விதிக்கப்பட்டது. தண்டனைகளை ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என்று மன்று அறிவித்தது.
(வ-4,ரி)

# மெய்வன்மைப் போட்டிகள்

கரணவாய், பெப். 8
கரணவாய் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பி.ப 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் ச.சண்முகநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பழைய மாணவரும் சிவன் அறக்கட்டளையின் நிறுவுநருமான வேலாயுதம் கணேஸ்வரன் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-35)

❖ ❖ ❖

யாழ்ப்பாணம்,பெப்.8
யாழ். சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பி.ப 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் க.கலியுகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக லீட்ஸ் அமைப்பின் வடக்குத் திட்ட முகாமையாளர் ஜீ.வோற்கின்சனும் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.வசந்தனும் கௌரவ விருந்தினர்களாக யாழ். வளர்பிறை அமைப்பின் பணிப்பாளர் தி. ஜெனீஸ்ரன், குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் எல். அமலராஜ் ஆகியோர் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-51)

❖ ❖ ❖

அல்வாய், பெப். 8
அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பி.ப.1.30 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் எஸ்.செல்வானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது.
(வ-173)

❖ ❖ ❖

அல்வாய், பெப். 8
கற்கோவளம் புனித நகரில் அமைந்துள்ள நாகர்கோயில் அ.மி.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பி.ப.1.30 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் செ.செல்வச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகனும் சிறப்பு விருந்தினராக மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி ச.திரவியராசாவும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது.
(வ-173)

❖ ❖ ❖

கரவெட்டி, பெப். 8
கரவெட்டி ஸ்ரீநாரதா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை 9ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் கே.கிரிதரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-173)

## தைப்பூச வழிபாடு

அல்வாய், பெப். 8
அல்வாய் கிளானை மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீடத்தில் தைப்பூசத் தினச் சிறப்பு முழுக்கு, வழிபாடுகள் என்பன நாளை வியாழக்கிழமை காலை 7மணி முதல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-173)

# ஒரே இலக்கத்தில் இரு அ.அட்டைகள்

கொழும்பு,பெப்.8
ஒரே இலக்கத்தைக் கொண்ட இரண்டு அடையாள அட்டைகள் ஆள்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப் பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கித்துல்கல பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்கும், நாரவெல பிரதேசத்தை சேர்ந்த பெண் ஒருவருக்கும் ஒரே இலக்கத்தில் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.



கித்துல்கல பிரதேசத்தைச் சேர்ந்த பெண் 2014ஆம் ஆண்டு வங்கியில் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்குச் சென்றுள்ளார். இதன்போது அவரது அடையாள அட்டை இலக்கத்துக்கு வேறு ஒருவரின் பெயர் காட்டுவதாக வங்கியில் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் அவர் ஆட்பதிவு திணைக்களத்துக் குச் சென்று இரண்டு கடிதங்களை வழங்கியுள்ளார். மற்றைய பெண்ணுக்கும் இது தொடர்பில் அறிவித்து கடிதம் ஒன்றை அவர் அனுப்பியுள்ளார். எனினும் அண்மையில் கித்துல்கல பிரதேசத்தைச் சேர்ந்த பெண் வங்கியில் உத்தரவாதக் கையொப்பமிடுவதற்காக சென்ற சந்தர்ப் பத்தில், அதே இலக்கத்தில் வேறு ஒருவரின் அடையாள அட்டை உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து அவர் முறைப்பாடொன்றை பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்துள்ளார்.

“இந்தப் பிரச்சினை காரணமாக வங்கியில் கொடுக்கல் வாங்கல் மற்றும் கடன் வசதிகள் எதுவும் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு உரிய நடவடிக்கையை விரைவில் பொலிஸார் பெற்றுத் தர வேண்டும்” என்று இரண்டு பெண்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ)

## பதினைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி (04.02.2017)




அமரர் கந்தையா சத்தியசீலன்
(கிளை முகாமையாளர் ,பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்,மானிப்பாய்)

பாசத்தின் உறைவிடமாய் பாரில் வாழ்ந்த-தங்கள்
பாசத்தைக் காணாது ஏங்கி நிற்கின்றோம்
பதினைந்து ஆண்டுகள் பறந்தோடினாலும்
நீங்கள் எம்முடன் இருந்த பாசத்தின்
நாள்கள் என்றும் எம் கண்முன்னே!

தோற்றம் 1953. 12.05 மறைவு 2002.02.04

நினைவுகளுடன், குடும்பத்தினர்.
டச்சுறோட், சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



வையத்துள் வாழ்வாங்கு வாழ
வைத்த எமது அன்பு அப்பா
அமரர் கிருஸ்ணபிள்ளை காசிலிங்கம்

தோற்றம் 28.03.1933
மறைவு 09.01.2017

09.01.2017 சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி அறிந்து நேரடியாக வந்தும்,தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் உதவியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

மகன் - கிருபா
குடும்பத்தினர்.
077 646 2291

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15 . 03 . 1921
மறைவு 19 . 02 . 2016

தருமலிங்கம் குணமணி
திதி : பூர்வபட்ச துவாதசி


கலங்காத நெஞ்சுடனே காலமெல்லாம் வாழ்ந்தாய் அம்மா
கலங்கவிட்டு எங்களையே பிரிந்து சென்றாய் ஏனம்மா !
பார்த்த உங்கள் முகம் கண்ணை விட்டு அகலவில்லை
ஓராண்டு ஆனாலும் உங்கள் நினைவு ஒருபோதும் மாறாது

காளிகோயிலடி,
கோப்பாய் மத்தி.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
மாணிக்கம் கிருஷ்ணன்



தோற்றம் 1944.05.10
மறைவு 2016.01.21

திதி : 08.02.2017

மாணிக்கம் இலட்சுமி பெற்ற
முத்து கிருஷ்ணபூவே !
உதிர்ந்து விட்ட எம் உதிரிப்பூவே
எட்டாத தொலைவிற்கு போய்
விட்ட எம் கிருஷ்ணா கொஞ்சம் கூட எம்மை நினைக்கவில்லை
உங்கள் வாழ்வை இடையில் முடித்துக் கொண்டு சென்று ஓராண்டுகள் ஆகியும்
மறையாத உம் மீசை முறுக்கும், வீரநடையும் விண்ணேறிச் சென்றாய்
ஆண்டுகள் பல போனாலும் ஆறாதையா உங்கள் நினைவு

குமரநகர்,
கைதடிமத்தி, கைதடி.

குடும்பத்தினர்.



# மூங்கிலாறில் வீடு தீக்கிரை

யாழ்ப்பாணம், பெப்.8
புதுக்குடியிருப்பு, உடையார்கட்டு, மூங்கிலாறு கிராமத்தில் வீடு ஒன்று தீக்கிரையாகியுள்ளது. இனந்தெரியாதவர்கள் வீட்டுக்குத் தீ வைத்தார்கள் என்று வீட்டின் உரிமையாளரான பெண் தெரிவித்தார்.
நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் நடந்துள்ளது.
குடும்பத் தலைவர் போரில் உயிரிழந்ததை அடுத்து குறித்த பெண் தனது பிள்ளைகளுடன் தனித்து வாழ்கின்றார். இரவு நேரத்தில் உறவினர் ஒருவரின் வீட்டிலேயே தங்குகின்றனர். அன்றும் வழமைபோன்று இரவு உறவினர் வீட்டுக்குச் சென்றுள்ளனர். வீட்டில் யாருமில்லாத சமயம் தீ வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பாக புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.
வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டார். (ற-10)

# புலனாய்வுப் பிரிவு என்ற போர்வையில் கொள்ளையிட்ட குழு சிக்கியது!

வவுனியா, பெப்.8
புலனாய்வுப் பிரிவினர் என்று அடையாளப்படுத்தி வவுனியாவில் கொள்ளைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூவர் செட்டிகுளம் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், 15 லட்சம் ரூபா கொள்ளையிட்டதை ஒப்புக் கொண்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.



வாரிக்குட்டியூர், செட்டிகுளம், முதலியார்குளம் பகுதிகளில் கடந்த சில மாதங்களாகக் கொள்ளைகள் தொடர்ந்தன. புலனாய்வுப் பிரிவினர் என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு வீட்டைச் சோதனையிட வேண்டும் என்று கூறும் குழுவொன்று பின்னர் வீட்டிலிருப்போரைக் கத்தியைக் காட்டி மிரட்டிக் கொள்ளையிட்டுத் தப்பி வந்தது. தொடர்ச்சியான கொள்ளைச் சம்பவங்களால் அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பெரும் அச்சமடைந்திருந்தனர்.
கொள்ளைகள் தொடர்பாக செட்டிகுளம், பூவரசங்குளம் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பொலிஸார் விசாரணைகளை முடுக்கி விட்டிருந்தனர்.
செட்டிகுளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இடமொன்றில் இந்தக் கொள்ளைக் குழுவினர் உள்ளனர் என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. கடந்த சனிக்கிழமை அந்த இடத்தைச் சுற்றி வளைத்த பொலிஸார் சந்தேகநபர்களைக் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து கத்தி, தொப்பி, தங்க நகைகள், கருப்புச் சட்டை, தொலைபேசி என்பன கைப்பற்றப்பட்டன.
ஹேரத் கார்திக்கே கிருஸ்ணகுமார (வயது-38), ஜானக ரணவீர (வயது-22), சமிந்த சந்திரவன்ச சில்வா (வயது-45) ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-5)

# சட்டவிரோத மதுப் பாவனை: ஜனவரி மாதம் 128 வழக்குகள்

யாழ்ப்பாணம், பெப்.8
யாழ். மாவட்டத்தில் கடந்த மாதம் மட்டும் சட்டவிரோத மதுப் பாவனை தொடர்பாக 128 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன. இவ்வாறு மது வரித் திணைக்களத்தில் வடக்கு மாகா ணப் பொறுப்பதிகாரி எஸ்.சோதிநாதன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது-
யாழ்ப்பாண்த்தில் அதிகரித்து வரும் சட்டவிரோத மது மற்றும் போதைப் பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.
யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 5 மதுவரிக் திணைக்கள அலுவலகங்களின் நடவடிக்கையில் கடந்த மாதம் 128 முறைப்பாடுகள் நீதிவான் மன்றங்களில் பதிவு செய்யப்பட்டன.
முறைப்பாடுகளின் அடிப்படையில் 1 லட்சத்து ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. யாழ்ப்பாண அலுவலகத்தால் 7 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு 40 ஆயிரம் ரூபாவும், சாவகச்சேரி அலுவலகத்தால் 10 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு 6 ஆயிரம் ரூபாவும், சங்கானை அலுவலகத்தால் 14 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு 6 ஆயிரம் ரூபாவும், மல்லாகம் அலுவலகத்தால் 57 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு 7 ஆயிரம் ரூபாவும், பருத்தித்துறை அலுவலகத்தால் 40 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு 42 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது.
சட்டவிரோத மதுப் பாவனைகள் தொடர்பாக எதிர்காலத்தில் அதிக கவனம் செலுத்தப்படும். அனுமதி இன்றி சுருட்டு, பீடி தயாரித்தல் மற்றும் சிறுவர்களுக்கு புகைத்தல் பொருள் விற்பனை செய்தல் தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகளுக்கு அமைய கடைகள் சோதனை செய்யப்பட்டு நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்படும்- என்றார். (ற-10)

# மின்னொழுக்கால் தீ விபத்து: வடலியடைப்பில் வீடு நாசம்

யாழ்ப்பாணம், பெப்.8
பண்டத்தரிப்பு, வடலியடைப்பு அரசடி வீதியில் உள்ள வீடொன்றில் தீ விபத்து ஏற்பட்டது. மின்னொழுக்காலேயே தீ விபத்து ஏற்பட்டுள்ளது என்று இளவாலைப் பொலிஸார் தெரிவத்தனர்.
நேற்று முற்பகல் 11 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்தது. வீட்டு உரிமையாளரின் தங்கை மட்டுமே வீட்டில் இருந்துள்ளார். தீயில் கருகும் வாசனையை உணர்ந்து அவர் வீட்டின் பின்புறம் சென்று பார்த்தபோது வீடு தீப்பற்றியுள்ளதை அவர் கண்டார். தீயணைப்புப் பிரிவுக்குத் தகவல் வழங்கப்பட்டது. அயலவர்கள் தீயைக் கட்டுப்படுத்த முயன்றபோதும் அது பயனளிக்கவில்லை.
தீயணைப்புப் பிரிவினர் சம்பவ இடத்துக்கு சிறிது நேரத்துக்குப் பின்னர் வந்தனர். தீப்பற்றி எரியும் இடத்துக்கு தீயணைப்பு வாகனம் செல்லப் போதிய இடவசதி இல்லை. மாற்றுப் பாதையால் வாகனம் கொண்டு வரப்பட்டுத் தீ அணைக்கப்பட்டது. அதற்கிடையே வீட்டின் பெரும் பகுதி தீயால் எரிந்து நாசமானது.
வீட்டின் கூரையின் ஒரு பகுதி முற்றாக எரிந்துள்ளது. வீட்டின் சுவர்களும் வெப்பத்தால் வெடித்துள்ளன. வீட்டில் இருந்த பொருள்களும் தீயால் அழிந்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனார்.





மின்னொழுக்கே தீ விபத்துக்குக் காரணம் என்று தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ற-5,10)

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் நயினாதீவு



தைப்பூச விழா - 09.02.2017 வியாழக்கிழமை

நயினாதீவு
ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
கோயில்



இவ்வருடமும் வழமைபோல்
தைப்பூசவிழா
மிகவும் சிறப்பாக
நடைபெறவுள்ளது

முற்பகல் 10.30 மணிக்கு - 108 சங்காபிஷேகம்
நண்பகல் 12.00 மணிக்கு - உச்சிக்காலப்பூசை
பி.ப. 12.30 மணிக்கு - விஷேட வசந்த மண்டப பூசை
பி.ப. 1.30 மணிக்கு - அம்பாள் அழகிய திருமஞ்சத்தில் வீதியுலா வருதல்

அன்றையதினம்
★ விஷேட மங்கல வாத்தியம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது
★ விஷேட பேருந்துப் போக்குவரத்துச் சேவையும், விஷேட படகுச்சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
★ அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கு நயினாதீவு அமுதசுரபி அன்னதான சபையால் ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
★ தம்பையா தாகசாந்தி நிலையத்தாரால் ஆலய வளாகத்துள் தாகசாந்தி சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பால், இளநீர், ஏனைய அபிஷேகப் பொருள்கள் கொண்டுவரும் அடியார்கள் முற்பகல் 11.00 மணிக்கு முன்னர் கோயிலுக்கு வருகை தரல் வேண்டும்.

தைப்பூச நன்நாளில் கோயிலுக்கு வருகை தந்து ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் பேரருளைப் பெற்றேகுமாறு அடியார்களை அன்போடு அழைக்கின்றோம்.
அன்னையின் பணியில்
பொ. அன்பரசன் (செயலாளர்)
அறங்காவலர் சபை, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் நயினாதீவு.
(சி.23882)
(13.18)

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரனின்

# கொடும்பாவி எரித்ததை கண்டித்துப் போராட்டம்

### தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.8

"வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனின் உருவப்பொம்மை எரிக்கப்பட்டமைக்குக் கண்டனம் தெரிவித்து நாளை பெரும் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படும்."

இவ்வாறு தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்தது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய ஊழியர்கள் கடந்தவாரம் பணிப் புறக்கணிப்பு நடத்தினர். அதில் அவர்கள் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சரின் உருவப்பொம்மைக்குத் தீயிட்டனர்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதிநிதிகள் அந்தச் செயலுக்குக்காக வடக்கு அமைச்சரிடம் மன்னிப்புக் கோரினர்.

தற்போது தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் உருவப் பொம்மை எரிப்பைக் கண்டித்து போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று அறிவித்துள்ளது.

"கடந்த 3ஆம் திகதி வடக்கு மாகாணத்தில் உள்ள இ.போ.ச. சாலைகளில் வடக்கு போக்குவரத்து அமைச்சரின் உருவப் பொம்மை கொள்ளிக்குடம் உடைத்து எரிக்கப்பட்டது. இவ்வாறான செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம். மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு மாகாண மக்கள் பிரதிநிதிகளின் உருவப் பொம்மைகளை எதிர்காலத்தில் எரியூட்டும் நடைமுறை இருக்கக் கூடாது.

எமது எதிர்ப்பை வெளிகாட்டும் வகையில் நாளை வியாழக்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தவுள்ளோம். காலை 7 மணிக்கு வவுனியாவில் இருந்து பேருந்தில் பேரணியாகப் புறப்படுவோம். யாழ்ப்பாணம் சென்று புனித அடைக்கலமாதா ஆலய முன்றிலில் வடக்கு மாகாண தனியார் பேருந்துச் சங்கங்கள் ஒன்றையும். வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகங்களுக்குப் பேரணியாகச் சென்று மனு கொடுக்கவுள்ளோம்.

கவனவீர்ப்புப் பேரணியில் தனியார் பேருந்துச் சாரதிகள், நடத்துநர்கள், பணியாளர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். கவனவீர்ப்புப் போராட்டத்தால் பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரிங்களுக்கு மனம் வருந்துகின்றோம்" என்று வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் எஸ்.இராஜேஸ்வரன் தெரிவித்தார். (ற-5)



மலபே சைட்டம் மருத்துவக் கல்லூரியைத் தடைசெய்ய வேண்டும் என்று வலியுறுத்தி மருத்துவ பீட மாணவர்களால் கையெழுத்துப் போராட்டம் நடத்தப்படுகின்றது. யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் நேற்றுமுன்தினம் கையெழுத்து திரட்டப்பட்டது. (ற-8)

# நுண்கடன் பெற்றவர்களுக்கு சமுர்த்தியை நிறுத்தத் திட்டம்

### துணுக்காய் பிரதேச செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.8

நுண்கடன் பெற்றுக்கொள்ளும் சமுர்த்திப் பயனாளிகளின் கொடுப்பனவுகளை எதிர்காலத்தில் நிறுத்துவது தொடர்பாக ஆராயப்படுகின்றது.

இவ்வாறு துணுக்காய் பிரதேச செயலர் இ.பிரதாபன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:


பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலேயே இப்போது நுண்கடன் வழங்கல் இடம்பெறுகின்றது. நுண் கடன்கனுக்காக பயனாளிகளிடம் இருந்து 24 சதவீத வட்டி அறவிடப்படுகின்றது. இது சட்டத்தின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா என்பதும் ஆராயப்பட வேண்டும்.

சமுர்த்திக் கொடுப்பனவுகளைப் பெறுவோர் இவ்வாறு அதிக கடன்களைப் பெற முடியாது. அவர்கள் கடன் பெற்றமை நிரூபிக்கப்பட்டால் நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் எம்மிடம் இல்லை. அவர்களுக்கான சமுர்த்திக் கொடுப்பனவை நிறுத்தும் அதிகாரம் உண்டு. சமுர்த்திக் கொடுப்பனவுகள் வறுமைக் கோட்டிக் கீழ் வாழ்பவர்கள் என்று கணிக்கப்பட்டவர்களுக்கே வழங்கப்படுகின்றன. அதிக கடன்களைப் பெறுவோர் வறுமைக் கோடு என்ற நிலையைத் தாண்டியவர்களாகவே கருதப்படுவார்கள். துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் நுண்கடன் பெற்றவர்களின் பட்டியலைத் திரட்டியுள்ளோம். இதுவரை 196 பேர் நுண் கடன் பெற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் சமுர்த்திப் பயனாளிகள் உள்ளனரா என்பது ஆராயப்படுகின்றது. அதன்பின்னர் அடுத் தகட்ட நடவடிக்கை தொடர்பாக முடிவெடுக்கப்படும் - என்றார். (ற-5,10)

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் சுப்பிரமணியம்



தோற்றம் :-23.03.1932
மறைவு :- 03.02.2017

யாழ்.கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வதிவிடமாகவும், கனல்லேன், வெள்ளவத்தையை வசிப்பிட மாகவும் கொண்ட மாணிக்கம் சுப்பிரமணியம் 03.02.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - தங்கம்மா தம்பதிகளின் மூத்தபுதல்வரும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சுப்பிரமணியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், பாலசற்குணதேவியின் அன்புக் கணவரும், தமிழ்ச்செல்வி, காலஞ்சென்ற இராஜேந்திரன் மற்றும் கலைச்செல்வி, சுரேந்திரன் (ஜேர்மனி), பாலலேந்திரன் (கனடா), ஜெயச்சந்திரன் (ஜேர்மனி), சுதாகரன் (பிரான்ஸ்), பிரபாகரன் (லண்டன்), சுமதினி (நோர்வே), ரவிகரன் (பிரான்ஸ்), தாரணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசலட்சுமி, மனோன்மணி, காலஞ்சென்ற இராசநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வகுமார் (இளைப்பாறிய தபால் ஊழியர்- கொக்குவில்) , ஸ்ரீகுமார்(கமத்தொழில் காப்புறுதிச்சபை, யாழ்ப் பாணம்), வினோதா (ஜேர்மனி), பிறேமலதா (கனடா), நளாயினி (ஜேர்மனி), நிரஜா (பிரான்ஸ்), சிவாஜினி (லண்டன்), பார்த்தீபன் (நோர்வே), நிஷாந்தினி (பிரான்ஸ்), பத்மச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கனகரட்ணம், மகாதேவன் மற்றும் பொன்னாபரணம், பாலசண்முகநாதன், பாலாம்பிகை, நித்தியானந்ததேவி, சுபத்திராதேவி, விஜயலட்சுமி, விமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவயோகேஸ்வரி, சிவகுமார், காலஞ்சென்றவர்களான அமுதலிங்கம், வரதராஜா மற்றும் சிவபாலசுந்தரம், ஆனந்தவடிவேல் ஆகியோரின் அன்புச் சகலனும், டிலானி (Micro PC System Jaffna), துளசிகா (மு/ மல்லாவி மத்திய கல்லூரி ஆசிரியர்), லக்ஷிகா(இரஜரட்டை பல்கலைக் கழகம், ICT 2nd Year Student) , குகதர்சன் (Abans, Customer Care Service), சஜீவன் (இரஜரட்டை பல்கலைக் கழகம், ICT 2nd Year Student) ஆகாஷ் (ஜேர்மனி), ஆரவி (ஜேர்மனி), ஹர்சா (கனடா), திவாகர் (ஜேர்மனி), ஜெசிகா (ஜேர்மனி), நிருசுதன் (பிரான்ஸ்),சுயன் (பிரான்ஸ்),சேயோன் (பிரான்ஸ்), வைஷ்ணவி (லண்டன்), பிரவீன் (நோர்வே), ராகவி (நோர்வே), அனுசியா (பிரான்ஸ்), ஜெனீரா (பிரான்ஸ்), விதுஷன் (லண்டன்), ஜெதுஷன் (லண்டன்), சாருஷன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2017) புதன் கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று பின்னர் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(J/7936)(11,18)

ரஞ்சி - (மகள்- இலங்கை- 021 225 5209)
ரூபா - (மகள்- இலங்கை- 077 986 1147)

## விபத்தில் இறந்தாலும் சகாய நல திட்ட உதவி

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச சகாய நலத் திட்டத்தில் அங்கத்தவர்களுக்கு நன்கொடை நிதி வழங்கப்படும். தொழில் நடவடிக்கையிலும், விபத்துக்களிலும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இந்த நிதி வழங்கப்படும். இவ்வாறு சமாசத் தலைவர் என். கணேசன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கோண்டாவில், தெல்லிபழை, சாவகச்சேரி பனை, தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் நான்கு அங்கத்தவர்கள் இந்த ஆண்டு விபத்துக்களில் இறந்துள்ளனர். அவர்களின் குடும்பங்களுக்கு சகாய நல நிதியத்தின் கீழ் 2 லட்சம் ரூபா வழங்கப்படும். கடந்த ஆண்டு விபத்தில் இறந்த 6 பேரின் குடும்பங்களுக்கு நிதி வழங்கப்பட்டது. இந்தத் திட்டம் இந்த ஆண்டு மேலும் விரிவாக்கப்படும் - என்றார். (ற-17)

# விளையாட்டில் ஈடுபடுவது மாணவர்களுக்கு அவசியம்

### நல்லூர் கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.எச்.அன்ரன் சுட்டிக்காட்டு

தற்போது மாணவர்களை விளையாட்டுப் போட்டிகளில் மட்டுமே மைதானத்தில் காணக்கூடியதாவுள்ளது. பெற்றோரும், மாணவர்களும் விளையாட்டு வேறு, கல்வி வேறு என்ற எண்ணத்தைக் கைவிட வேண்டும். இவ்வாறு நல்லூர் கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.எச். அன்ரன் தெரிவித்தார்.

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய மெய்வன்மைப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அதில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மாணவர்கள் விளையாட்டு மைதானங்களுக்குச் செல்லாது மாலை நேரங்களில் தனியார் கல்வி நிலையங் களுக்குச் செல்கின்றனர். விளையாட்டு மைதானம் வாழ்க்கைக்கு அடிப்படையானது. விளையாட்டில் ஈடுபடுபவர்கள் நல் ஒழுக்கமும், உடல் ஆரோக்கியம் கொண்டவர்களாகவும் இருப்பர். பெற்றோர் தம் பிள்ளைகளின் பரீட்சை அடைவுகளை மட்டுமே பார்க் கின்றனர் - என்றார். (ற-5)

## லூர்து அன்னை ஆலய வருடாந்த திருவிழா

யாழ்ப்பாணம் சிறுத்தீவு லூர்து அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும் என்று குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை வண.பிதா இ.ம.இரவிச்சந்திரன் அடிகளார் அறிவித்துள்ளார்.

குருநகரில் இருந்து சுமார் ஒருகிலோ மீற்றர் தூரமுள்ள இந்தத் தீவு மக்கள் குடியிருப்பற்ற தீவாகும். இந்தத் தீவில் கடற்தாழைகளும், நீர் நிரம்பிய ஓடைகளும் உள்ளன. பறவைகள் தங்கும் தீவாக உள்ளது. குருநகருக்கும் மண்டைதீவுக்குமிடையில் இந்தத் தீவு அமைந்துள்ளது. (ற-5)

## கச்சதீவில் வியாபாரம் செய்ய விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம் பெப். 8

கச்சதீவு பெருநாளின் போது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட விரும்புவோர் அதற்கான அனுமதிகளை பெறுவதற்கு எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் நெடுந்தீவு பிரதேச சபையிடம் விண்ணப்பிக்க வேண்டும் என்று பிரதேச சபைச் செயலர் அறிவித்தார்.

"கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் பெருநாள் அடுத்த மாதம் 12ஆம் திகதி இடம்பெறவுள்ளது. பெருநாளின் போது கச்சதீவில் வியாபார நடவடிக்கையில் ஈடுபட விரும்புவோர் பிரதேச அனுமதியை பெற்று, கச்சதீவில் வியாபாரத்தில் ஈடுபட முடியும்.

உணவு தொடர்பான வியாபாரத்தில் ஈடுபட விரும்புபவர்கள் சுகாதார மருத்துவ அதிகாரியின் அத்தாட்சி சான்றிதழை பெற்றே உணவுப் பொருள்களை விற்பனை செய்ய முடியும். உணவக வியாபாரிகள் சம்பந்தப்பட்ட சுகாதார அதிகாரிகளு டன் தொடர்புகளை மேற் கொண்டு, அதற்கான அனு மதிகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும்" என்று அவர் தெரிவித்தார். (ற-8)

# கிழக்குக்கு இன்னமும் 20,000 வீடுகள் தேவை

## முதலமைச்சர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, பெப்.8



கிழக்கு மாகாண மக்களின் வீடில்லாப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதாயின், குறைந்தபட்சம் 20 ஆயிரம் வீடுகளாவது தேவை. இதனைத் தந்துதவுமாறு நான் மத்திய அரசைக் கேட்டிருக்கிறேன். -இவ்வாறு கிழக்கு முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாணத்தின் ஒட்டுமொத்த அபிவிருத்திக்கு வீடமைப்பு முக்கிய தேவையாகவுள்ளது. இந்த மாகாணத்தில் வாழ்கின்ற மக்கள் கடந்த 30 வருடப் போரில், அதிகமான இழப்புக்களைச் சந்தித்ததோடு, தமது வீடுகளையும் இழந்திருக்கிறார்கள்.

எனவே, அவர்களுக்கு குடியிருக்கவீடுகள்தேவை. கடந்த வாரம் அரச தலைவரின் ஏறாவூர் விஜயத்தின் போது, ஆயிரத்து 762 பேருக்கு 8 லட்சம் ரூபா பெறுமதியான வீடுகளும், 862 குடும்பங்களுக்கு வீடு திருத்துவதற்காக 2 லட்சம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

இது நாம் எடுத்துக் கொண்ட அயராத முயற்சியின் பலாபலனாகும். ஆயினும் இதற்கும் மேலதிகமாக இன்னமும் கிழக்கு மகாணத்தில் போரால் பாதிக்கப்பட்டவர்களின் வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாயின், குறைந்தபட்சம் 20 ஆயிரம் வீடுகள் தேவை. அதில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 10 ஆயிரம் வீடுகள் தேவை. 2017 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் முடிந்தளவு மக்களின் வீடில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மாகாணசபை அர்ப்பணிப்புடன் திட்டங்களை வகுத்து வருகிறது.

போரால் சகலதையும் இழந்த மக்களுக்கு, குறைந்தபட்சம் அவர்கள் நிம்மதியாக கால்நீட்டித் தூங்குவதற்கு ஒரு குடிமனை தேவை. இந்த விடயத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளேன்.

வீடமைப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தும் போது, கிழக்கு மாகாண மக்களது வீடில்லாப் பிரச்சினையைத் தீர்க்குமாறு நான் எப்பொழுதும் வலியுறுத்தி வந்திருக்கின்றேன்.- என்றார். (ஐ-ய-46)

# இளைஞர்களுக்கு முதியவர்கள் அரசியலை புகட்ட வேண்டும்

## மாகாணசபை உறுப்பினர் கருத்து

எருவில், பெப்.8



தமிழர்களது அரசியல் சார்ந்த விடயங்களை தற்காலத்து இளைஞர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டியது, அனுபவ முதிர்ச்சியுடைய முதியோர்களது கடமையாகும். -இவ்வாறு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

கல்முனை சேனைக்குடியிருப்பு முதியோர் சங்கத்துக்கு உபகரணங்களை வழங்கி வைத்து உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முதியவர்களுக்கு எமது மக்களின் வரலாறுகள் நன்றாகத் தெரிந்திருக்கும். அவ்வாறான அனைத்துச் சம்பவங்களையும், தற்காலத்து இளைஞர்கள் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அதனைத் தெரியப்படுத்த வேண்டியது ஒவ்வொரு முதியோர்களதும் கடமையும், பொறுப்புமாகும்.

கல்முனையில் நகர அபிவிருத்தித் திட்டம் என்ற ஒரு திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான வேலைப்பாடுகள் நடைபெற்று வருவதாக அறியமுடி கின்றது.

அவ்வாறான திட்டங்கள் மூலம் தமிழர்களது இடங்கள் திட்டமிட்டு அழிக்கப்படுவதுடன், சுவீகரிப்பதற்கான ஏது நிலைகளும் காணப்படுகின்றன.

இந்த விடயங்களில் நாம் ஒவ்வொருவரும் மிகுந்த அவதானத்துடன் இருந்து செயற்பட வேண்டும்.- என்றார். (ஐ-ய)

# மாணவனைத் தாக்கிய ஆசிரியருக்கு மறியல்

மட்டக்களப்பு,பெப்.8

மட்டக்களப்பு - காத்தான்குடி பாடசாலை ஒன்றில் மாணவன் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த ஆசிரியரை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டார்.

கடந்த முதலாம் திகதி குறிப்பிட்ட பாடசாலை ஒன்றில், வகுப்பறையில் வைத்து ஆசிரியரால் தாக்கப்பட்ட மாணவன், காயங்களுக் குள்ளான நிலையில் காத்தான்குடி ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட் டார்.

பின்னர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு தற்போது சிகிச்சை பெற்று வருகிறார்.

மாணவனைத் தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் குறித்த ஆசிரியரை காத்தான்குடி பொலிஸார் தேடி வந்த நிலையில், அந்த ஆசிரியர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் சரணடைந் தார் என பொலிஸார் தெரி வித்தனர். (ய-46)

# கழிவறையில் சிசு மீட்பு

கொழும்பு,பெப்.8

இறக்குவானை பிரதேச செய லகத்துக்குச் சொந்தமான கழிவறையில் இருந்து சிசு ஒன்று உயிரிழந்த நிலையில் நேற்று பொலிஸார் மீட்டனர்.

எனினும் சிசுவின் தாயார் யார் என்பது தொடர்பான தகவல் தெரியவில்லை. தற்போது சிசுவின் தாயாரைத் தேடி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஜனநாயகத்துக்குப் பலம் சேர்க்கும்

## அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தெரிவிப்பு

மட்டக்களப்பு, பெ.08

கூட்டு அரசு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய, தகவல் அறியும் உரிமைச்சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது. இது ஜனநாயகத்துக்கு பலம் சேர்க்கும் மாபெரும் வெற்றியாகும். ஆயினும் இந்தச் சட்டம் பற்றி எதுவுமே அறியாதவர்களாக முஸ்லிம் சமூகம் இருப்பது கவலையளிக்கிறது.-இவ்வாறு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனநாயகத்துக்குப் பலம் சேர்க்கும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஊடகவியலாளர்களுக்கு மாத்திரம் உரித்தான ஒன்றல்ல. அது அனைத்து மக்களுக்கும் பொதுவான சட்டம். ஆனால், துரதிர்ஷ்டவசமாக இது குறித்து முஸ்லிம் சமூகம் விழிப்பாக இல்லை. இந்தச் சட்டத்தின் பயன்பாடுகள் தொடர்பில் சிறுபான்மைச் சமூகத்துக்கு தெளிவூட்ட வேண்டும்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் வழங்கியுள்ள சலுகைகளை,உரிமைகளைசரியான முறையில்அனைவரும்பயன்படுத்த வேண்டும். மாறாக, அந்தச்சட்டத்தைத்தவறான வழியில் பயன்படுத்துவது அதன் செயற்பாடுகளுக்கு பாதிப்பாக அமையும்.- என்றார். (ஐ-ய-46)


# மரண அறிவித்தல்

## தம்பையா திருநீலகண்டன்

**(முன்னைனாள் பிரபல கொழும்பு வர்த்தகர்)**



சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும், சரவணை கிழக்கை வாழ்விடமாகவும், இல.11, பரமேஸ்வராவீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணத்தை (துபாற் பெட்டிச்சந்தி) தற்போதய வதிவிடமாகவும் கொண்ட தம்பையா திருநீலகண்டன் 05.02.2017 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - திருமேனிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பராசக்தியின் அன்புக் கணவரும் கணேசமூர்த்தி (ஞானம்), ஞானசோதி, புஸ்பலதா, ஞானசொரூபன், திருஞானசம்பந்தன், ஜெயகௌரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஸ்பராணி, தனேஸ்வரி, தயாபரன், வசந்தி, வாகினி,ஞானச்செல்வன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பராசக்தி, பூமணி,பூரணம், பொன்னுச்சாமி இலிங்கப்பிள்ளை, சோமசுந்தரம் மற்றும் மகேஸ்வரி, இராசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரும்,காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு, திருநாவுக்கரசு, காசிப்பிள்ளை மற்றும் விசாலாட்சி காலஞ்சென்ற கனகம்மா மற்றும் புஸ்பராணி, காலஞ்சென்ற இராஜகோபால் மற்றும் பரிமளாதேவி காலஞ்சென்றவர்களான நடராஜா, தவநிதிப்பிள்ளை, விசாலாட்சி, குமரையா, படிகலிங்கம் மற்றும் சௌந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,காலஞ்சென்றவர்களான பார்வதிப்பிள்ளை, சின்னத்துரை, கந்தையா, சொர்ணகாந்தி, விநாயகமூர்த்தி, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகலனும் ஜனகன், மயூரவர்ணன், லக்சுஜா, அரவிந், சுயந், சுபானி, திவாகரன்,கிருஸாந்தி, கஜகரன், கனிஷா வனேஷா, இராகுலன், ரஜினா, மதுஷன், சிந்துயா, ஷர்மிலி, ஆரணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.02.2017) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சரவணை புன்னன்கண்டு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**11, பரமேஸ்வரா வீதி,**
**திருநெல்வேலி,**
**யாழ்ப்பாணம்.(துபாற்பெட்டிச்சந்தி)**

(J/7934)(11,18)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 349 1771, 077 036 8598**

# அர்ஜுன் மகேந்திரனுக்கு எதிராக உடனடி நடவடிக்கை தேவை

## பந்துல குணவர்தன கோரிக்கை

கொழும்பு,பெப்.8

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்தக் கோரிக் கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மத்திய வங்கிக்குச் சொந்தமான 662 மில்லியன் ரூபா பணத்தை அர்ஜுன் மகேந்திரன் மோசடி செய்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. மத்திய வங்கியின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளின் மூலம், இந்த விடயம் தெரியவந்தது.

இந்த விடயம் தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். சட்டத்தை நடைமுறைப் படுத்துவதுடன், மோசடி செய் யப்பட்ட பணத் தையும் அர்ஜுன் மகேந் திர னிடமிருந்து அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். 662 மில்லியன் ரூபா



மோசடி குறித்த தகவல்கள் அடங்கிய ஆவணங்கள், பதிவுத் தபால் மூலம் அரச தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளேன். மத்திய வங்கிப் பிணை முறி மோசடியுடன் தொடர்புடைய அனைவரையும் கைது செய்து உரிய சட்ட நடவடிக் கைகளை எடுக்குமாறு நான் கடிதமொன்றின் மூலம் அரச தலைவரிடம் கோரி யுள்ளேன்.

2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10 ஆம் திகதி வரையில் மத்திய வங்கியின் ஆளுனராக பதவி வகித்த அர்ஜுன் மகேந்திரன் நிதி மோசடிகளில் ஈடுபட்டுள்ளமை உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இவ்வாறு 163 சந்தர்ப்பங்களில் அர்ஜுன் மகேந்திரன் மோசடிகளில் ஈடுபட்டுள்ளார்.-என்றார். (ஐ)

# சு.கவுடன் இணைய மகிந்தவுக்கு அழைப்பு

கொழும்பு,பெப்.8

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீது, அன்பு இருந்தால் கட்சியுடன் இணைந்து செயற்பட மகிந்த ராஜபக்ச முன்வர வேண்டும். அதனை விடுத்து, கட்சியைப் பிளவுபடுத்த நினைத்தால் அது தவறு. கட்சியை அடிமட்டத்திலிருந்து பலப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இப்போதும் கட்சி பலமாக இருப்பதால் எதிர்வரும் தேர்தல்களில் தனித்தே போட்டியிடும். - இவ்வாறு விஞ்ஞானம், தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன, தெரிவித்தார்.

அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் மீதும், கட்சி மீதும் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை நான் மறுக்கின்றேன். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வலுப்படுத்தி முன்னோக்கிச் செல்வோம். நள்ளிரவில் விழித்து சூரியன் உதிக்க வேண்டும் என்று நினைப்பதைப் போன்று தான் மகிந்த ராஜபக்சவின் எதிர்பார்ப்பு உள்ளது. நடக்க வேண்டியவை உரிய காலத்தில் நடக்கும். அதனை மாற்ற முடியாது.



சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுப்படுத்த 80 சதவீதமான உறுப்பினர்களுக்குச் சம்மதம் இல்லை. கட்சியை இரண்டாகப் பிளந்து புதிய கட்சியை ஆரம்பிக்க மகிந்த நினைத்தால், அது சாத்தியப்படாத ஒன்றாகும். கட்சிகளைப் பிளவு படுத்தி, உருவாக்கப்பட்ட புதிய கட்சிக ளால் கொஞ்சக் காலம் கூடத் தாக்குப் பிடிக்க முடியாது என்பதைக் கடந்த காலங்களில் நாம் கண்டுள்ளோம்.

சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்த விமல் வீரவன்ச போன்றவர்களுக்கே தேவை உள்ளது. கட்சியில் ஏற்பட்ட பிளவால், ஐக்கியத் தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பல வருடங்களாக அதிகாரத்துக்கு வர முடியாமல் எதிர்க்கட்சிகளாக இருந்தன. தற்போது, சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்தினால், அதே நிலை தான் ஏற்படும். இது ஐக்கிய தேசியக் கட்சிக்குத்தான் நன்மையாக அமையும்.

இதேவேளை, நாடாளுமன்றத்திலும், கட்சிக்குள்ளும், வெளியேயும் ஜனநாயகம் தாராளமாக உள்ளது. தேவையை விட அதிகமாக ஜனநாயகம் இருந்தால் என்ன நடக்கும் என்பது இப்போது புரிகின்றது.

அத்துடன், இணைந்து போட்டியிட்டமை கடந்த பொதுத் தேர்தலோடு முடிந்து விட்டது. இனி எல்லாத் தேர்தல்களிலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனித்துத்தான் போட்டியிடும். எதிர்வரும் ஜூன் அல்லது ஜூலை மாதம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் என்று நம்பிக்கையுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் தற்போது தனித்து ஆட்சியமைக்க முடியாது. அதற்கான ஆணையை ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட எவருக்கும், மக்கள் தரவில்லை. அதனால் தான் இணைந்து ஆட்சியமைத்தோம். கட்சியைப் பிளவுப்படுத்தினால் பழைய நிலைக்குச் சென்று விடுவோம். -என்றார். (ஐ)




- காலை : 5 மணிக்கு பூஜை ஆரம்பம் 6 மணிக்கு பால்குடம் பவனி ஆரம்பம் (1008) 8.00 மணிக்கு ஆறுமுகப் பெருமானுக்கு மகா அபிஷேகம் இடம் பெறும்
- முற்பகல் : 10 மணிக்கு 1008 பானைப் பொங்கல் ஆரம்பம்
- நண்பகல்: விஷேட பூஜை வழிபாடுகளும், அன்னதானமும் இடம்பெறும். ஒரு மணி தொடக்கம் 4 மணிவரை புகழ்பூத்த கலைஞர்களின் புல்லாங்குழல் கச்சேரி இடம்பெறும்
- மாலை: 5.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசை 7.00 மணிக்கு நூற்றாண்டு பழமைவாய்ந்த உலகப்பெருமஞ்சத்தில் முருகப் பெருமான் வீதிவலம் வருவார்.

பாரம்பரிய கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.
யாத்திரிகர்கள் தங்கி நின்று செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

விளம்பரம் அனுசரணையாளர்கள்

**குமரன் கட்டடப் பொருள்கள்**
விற்பனையாளர்கள் கல், மணல், சிமெந்து, கம்பி, பெயின்ற் வகைகளைப் பெற்றிட
கந்தசுவாமி கோயிலடி, இணுவில்.
தொ.பே. 077 400 2263, 077 175 4667

**லது டிஜிற்றல் வீடியோ & போட்டோ**
LATHU DIGITAL VIDEO & PHOTO
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
K.K.S.ROAD, INUVIL
Professional Video Filming & Video Coverage, Digital Photo Graphing, DVD Conversion, Diary Album Making.
E.Mail:lathushan@gmail.com,Web:www.lathudigital.com

# இராணுவம் கட்டிய வீடுகளில் வெடிப்புகள்

## நல்லிணக்கபுரம் கிராம மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், பெப்.8
இராணுவத்தினரின் பொறியியல் பிரிவால் அமைக்கப்பட்டு, வழங்கப்பட்ட வீடுகளில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன.
இவ்வாறு கீரிமலை, நல்லிணக்கபுரம் கிராம மக்கள் விசனம் தெரிவித்தனர்.
வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டனர். அவர்களில் சொந்தக் காணிகள் இல்லாதவர்களுக்கு கீரிமலையில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. வீடமைப்புக்கு மீள்குடியேற்ற அமைச்சு நிதி வழங்கியது. இராணுவப் பொறியியல் பிரிவு 130 வீடுகளை அமைத்தது. கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி அரச தலைவர் மைத்திரி பால சிறி சேன அவற்றை மக்களுக்குக் கையளித்தார்.
வீடுகள் கையளிக்கப்பட்டு 3 மாதங்களே ஆகியுள்ள நிலையில் அவற்றில் வெடிப்புகள் ஏற்படத் தொடங்கியுள்ளன. நாளுக்கு நாள் அவை அதிகரிக்கின்றன. கதவு, ஜன்னல் நிலைகளில் வெடிப்புகளை அதிகம் அவதானிக்க முடிகின்றது. வீட்டின் புகைக் கூடு ஊடாக மழை காலத்தில் நீர் வடிகின்றது.- என்று கிராம மக்கள் கூறுகின்றனர்.
இவ்வாறான பிரச்சினைகளால் வீடுகளில் அசௌகரியங்களுக்கு மத்தியில் வாழ வேண்டியுள்ளது. இவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.
அதேவேளை-
சில ஆண்டுகளுக்கு முன்னர் முல்லைத் தீவு, ஆரோக்கியபுரத்திலும் இராணுவத்தால் மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகளில் வெடிப்புகள் ஏற்பட்டன என்று பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர். தாம் அமைத்துக் கொடுத்திருந்த வீடுகள் பாதிப்படைந்துள்ளன என்று இராணுவத்தினரும் ஒப்புக்கொண்டிருந்தனர். (ற-5,8)





## முதிரைக் குற்றியோடு இருவர் முத்தையன்கட்டில் சிக்கினர்

யாழ்ப்பாணம், பெப்.8
ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டில் சட்டவிரோதமாகத் தறிக்கப்பட்ட முதிரை மரக் குற்றிகளுடன் இருவர் கைது செய்யப்பட்டனர் என ஒட்டுசுட்டான் பொலிஸார் தெரிவித்தனர்.
நேற்றுமுன்தினம் அதிகாலை காட்டுப் பகுதியில் ஹையேஸ் வாகனத்தில் மரக்குற்றிகளை ஏற்றிக் கொண்டிருந்த சமயம் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். முல்லைத்தீவு மாவட்ட சட்டவிரோத நடவடிக்கைகள், போதைத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி உதயானந்தன் தலைமையிலான பொலிஸ் குழு அவர்களைக் கைது செய்தது.
கைது செய்யப்பட்டவர்கள் முல்லைத்தீவு நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 20 ஆம் திகதிவரை நீதிமன்று விளக்கமறியலில் வைத்தது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-10,26)

## கடற்படையினரின் கண்காணிப்புடன் ஊறணியில் மீன்பிடி

யாழ்ப்பாணம், பெப்.8
ஊறணியில் சில நாள்களுக்கு முன்னர் விடுவிக்கப்பட்டபகுதியில்கடற்படையினரின் தீவிர கண்காணிப்புடனான மீன்பிடிக்கு அனுமதி வழங்கப்பட்டது.
ஊறணிக் கடற்கரைப் பகுதியில் 500 மீற்றர் பிரதேசம் அண்மையில் விடுவிக்கப்பட்டது. தேசிய ஒருங்கிணைப்புக்கும், நல்லிணக்கத்துக்குமான அமைச்சால் பிரகடனப்படுத்தப்பட்ட நல்லிணக்க வாரத்தை முன்னிட்டு இந்தப் பிரதேசம் விடுவிக்கப்பட்டது. விடுவிக்கப்பட்ட கடற்கரையை அண்டிய பகுதிகளில் கூடாரங்களை அமைத்துக்கடற்படையினர் தீவிர கண்காணிப்பை மேற்கொண்டுள்ளனர். கட்டுமரங்கள், வீச்சுவலைகள் மூலம் தொழில் செய்கின்றோம். விடுவிக்கப்பட்ட பகுதி குறுகியது. சீராக நாம் தொழிலைச் செய்ய முடியாதுள்ளது. வலைகளையும், கட்டுமரங்களையும் பராமரிப்பதற்கு உகந்த வசதிகள் இல்லை.- என்று மீனவர்கள் தெரிவித்தனர். (ற-9



## உ.கிழங்கு அறுவடை ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.8
யாழ். மாவட்டத்தில் செய்கை செய்யப்பட்ட உருளைக்கிழக்கு அறுவடை ஆரம்பித்துள்ளது. அவற்றைத் தம்புள்ள மத்திய சந்தை, கொழும்பு புறக்கோட்டைச் சந்தைக்குக் கொண்டு சென்று விவசாயிகள் விற்பனை செய்கின்றனர்.
உருளைக்கிழங்கு ஒரு கிலோ 70 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. நோய்த்தாக்கமின்மை, பனியுடனான காலநிலையால் அதிக விளைச்சல் கிடைத்துள்ளது.
புன்னாலைக்கட்டுவன், ஈவினை, குப்பிளான், குட்டியப்புலம், உள்ளிட்ட பகுதியில் தற்பொழுது உருளைங்கிழங்கு அறுவடை செய்யப்படுகின்றது.
உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு 50 வீத மானிய விலையில் விதை உருளைக்கிழங்கு வழங்கப்பட்டது. உற்பத்திச் செலவு குறைவாக உள்ள நிலையில் உருளைக்கிழங்கு விற்பனை விலையும் குறைவுபடாமல் கணிசமான அளவு விளைச்சலும் கிடைத்துள்ளது. உருளைக்கிழங்கு செய்கையில் ஆர்வமும், உற்சாகமான நிலையும் ஏற்பட்டுள்ளது. - என்று விவசாயிகள் தெரிவித்தனர். (ற-10,11)




## பல்கலைகளின் கல்விசரா ஊழியர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப்.8
பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். யாழ்ப்பாணம், வவுனியா பல்கலைக் கழங்கங்களிலும் பணிப்புறக்கணிப்பு நடத்தப்பட்டது. நடப்பு ஆண்டுக்கான பாதீட்டில் தெரிவிக்கப்பட்டவாறு வேதன உயர்வு வழங்கப்படவில்லை என்று தெரிவித்தே அவர்கள் பணிப் புறக்கணிப்பு நடத்தினர்.
கடந்த ஆண்டு தொழிற்சங்கக் கூட்டு முயற்சியில் சம்மேளனங்களுடன் நடத்தப்பட்ட பேச்சில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் சரிவர நடைமுறைப்படுத்தப்படவில்லை. அரசு தனது தவறுகளை உணர்ந்து எமக்கு உரிய தீர்வு தரவேண்டும். இல்லையேல் எமது போராட்டங்களை விரிவு படுத்துவோம். வாக்குறுதிகளை நிறைவேற்றாமையாலே இந்த நிலை ஏற்பட்டள்ளது.
எமது கோரிக்கைகளை நிறைவேற்றாவிடில் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் தொடர்ச்சியான பணிப்புறக்கணிப்பை முன்னெடுப்பது என்று அனைத்து தொழிற் சங்கங்களின் கூட்டு சம்மேளனம் தீர்மானித்துள்ளது.- என்று யாழ்ப்பாணம், வவுனியா பல்கலைக் கழங்கங்களின் ஊழியர் சங்கம் தெரிவித்தது.(ற-8)



## மரண அறிவித்தல்

### திருமதி இராசமணி சண்முகம்பிள்ளை
(சின்னத்துரை)


தோற்றம் 20.02.1935 மறைவு 07.02.2017

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி சண்முகம்பிள்ளை 07.02.2017 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சௌந்தரம் தம்பதியரின் அன்பு மகளும் செல்லப்பா - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சண்முகம்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவபாதசிங்கம், நடராசா அன்னலட்சுமி, காலஞ்சென்ற செல்லப்பாபிள்ளை, வேலாயுதபிள்ளை (ஓய்வு நிலை உத்தியோகத்தர் - கமநல சேவைத்திணைக்களம், யாழ்ப்பாணம்), கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற இராசதுரை(சின்னக்கிளி) அவர்களின் மைத்துனியும் உத்திரம் அவர்களின் உடன்பிறவாச் சகோதரியும்.தவபாலன் பாமினி(ஆஸ்திரேலியா), தயாபரன் கிரிஜா, பிரபாகரன் (ஆஸ்திரேலியா), சுரேஸ்குமார், திருமதி கலைச்செல்வி - ராகவன்(ஆசிரியர், ஆனைக் கோட்டைறோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை), சதீஸ்குமார், லக்சனா, ஆரண்யா, திவ்யா (கலைப்பீட உளவியல்துறை யாழ் பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்பு பெரியதாயாரும் சிவாஜினி, சிவாஸ்கரன், சிவானந்தி, சிவாஞ் சலி, சிவகரன், சுபாசினி, சுபத்திரா, மயூரதன் (எழுதுநர், கமநலசேவை நிலையம், புங்குடு தீவு), மகிந்தன்(பிரதேசசபை வலிதெற்கு - சுன்னாகம்), கஜந்தன் ஆகியோரின் அன்பு மாமியும் சபேசன், விக்னகரன், சுஜித்தா, முரளி கிருஷ்ணா தாரணி(ஆஸ்திரேலியா), மதீபன் யாழினி(ஆசிரியர் - யாழ் இந்துக் கல்லூரி), பிரசாத், லக்ஸ்மன், கீர்த்திகன், சுவேதிகா(கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2017) புதன்கிழமை மு.ப. 10.00 மணிய ளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு.

தகவல்:
இராசதுரை தயாபரன்
(பெறாமகன்)
குடும்பத்தினர்.

# சசி பதவியேற்பதில் சிக்கல்

சென்னை, பெப். 8

தமிழ்நாட்டின் முதலமைச்சராக சசிகலா நாளை பதவியேற்பார் என்று அறிவிக்கப்பட்ட நிலையில், அவர் பதவியேற்பதில் சிக்கல்கள் ஏற்பட்டன.

தமிழகத்தின் ஆளுநர் வித்யாசாகர் ராவ், நேற்றுமுன்தினம் டெல்லி சென்றிருந்தார். டெல்லியில் இருந்து சென்னை திரும்பி சசிகலாவின் பதியேற்புக்கு திகதி வழங்குவார் என்று எதிர்பார்க்கையில், அவர் சென்னை செல்லாமல் மும்பைக்குச் சென்றார்.

அங்கு சில உயர்மட்ட ஆலோசனைகள் நடைபெற்று வருகின்றன என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. ஆளுநரின் திகதி கிடைக்காததால், பதிவியேற்கும் நிகழ்ச்சி தள்ளிப்போக வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. சசிகலா பதவியேற்கவிருந்த சென்னை பல்கலையில் போடப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பும் திரும்பப் பெறப்பட்டது.

வருமானத்துக்கு அதிகமான சொத்துக்களை குவித்தனர் எனத் தெரிவித்து, முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா, அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளர் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கு எதிரான வழக்கின் தீர்ப்பு இன்னும் சில நாள்களில் வெளியாகவுள்ள நிலையில், தீர்ப்பு வெளியான பின்னரே பதவியேற்பு நடைபெறும் என்றும் பொதுவான அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. (ம-எ)



ஜெயாவுக்கு வழங்கிய சிகிச்சை தொடர்பான

# மருத்துவர்கள் அறிக்கையில் சந்தேகங்கள் குவிகின்றன

ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட சிகிச்சைகள் தொடர்பில், பிரிட்டன் மருத்துவர் ரிச்சட் பீலே, டெல்லி எய்ம்ஸ் மருத்துவர்கள் உள்ளிட்ட குழு நேற்று முன்தினம் அறிக்கை வழங்கியுள்ள நிலையில், குறித்த அறிக்கையில் குறிப்பிட்ட விவரங்கள் நம்பும்படியாக இல்லை என்றும்– 10 சந்தேகங்கள் தோன்றுகின்றன என்றும் பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் பட்டியலிட்டார்.

அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

அப்பலோ மருத்துவமனையில் கடந்த செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி ஜெயலலிதா சேர்க்கப்பட்ட போதே அவருக்கு செப்ரிசீமியா எனப்படும் கிருமித் தொற்று தாக்கியிருந்ததாகவும், அவர் சில நாள்களுக்கு முன்பே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் ரிச்சர்ட் பீலே தெரிவித்தார். மருத்துவமனையில் சேர்க்கப்படுவதற்கு முன்பே ஜெயலலிதாவுக்கு வீட்டில் வைத்து சசிகலாவின் உறவினரால் சிகிச்சை வழங்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. எனினும், மருத்துவமனையில் சேர்க்கப்படுவதற்கு முன்பாக அவரது இல்லத்தில் வைத்து எந்த நோய்க்கு சிகிச்சை அளிக்கப்பட்டது?

ஜெயலலிதாவுக்கு செப்ரிசீமியா தாக்குதல் இருந்தது அப்போதே தெரியுமா? தமிழகத்தின் முதல்வரான ஜெயலலிதாவுக்கு வீட்டில் அளிக்கப்பட்ட சிகிச்சைகள் குறித்து எவருக்கும் தெரிவிக்கப்படாதது ஏன்?

ஜெயலலிதா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதே அவருக்கு செப்சிஸ் தொற்று இருந்திருந்தால் அது குறித்து உடனடியாக தெரிவிக்கப்படாதது ஏன்?

ஜெயலலிதாவுக்கு காய்ச்சலும், நீர்ச்சத்துக் குறைவும் மட்டுமே இருந்ததாகவும், அதுவும் உடனடியாக குணப்படுத்தப்பட்டதால் அவர் வழக்கமான உணவுகளை உட்கொள்ளத் தொடங்கி விட்டதாகவும் மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டது ஏன்?

ஜெயலலிதாவுக்கு செப்சிஸ் நோய்த் தொற்றுக்கு சிகிச்சை அளிப்பதற்காகத்தான் ஒக்ரோபர் முதல் வாரத்தில் ரிச்சர்ட் பீலே சென்னை வந்திருப்பதாக ஊடகங்களில் செய்தி வெளிவந்த போதும்கூட, அடுத்தடுத்து அப்பலோ மருத்துவமனை சார்பில் வெளியிடப்பட்ட மருத்துவ அறிக்கைகளில் செப்சிஸ் கிருமித் தாக்குதல் குறித்து குறிப்பிடப்படாதது ஏன்?

ஜெயலலிதாவுக்கு செப்சிஸ் உள்ளிட்ட அனைத்து நோய்களும் கட்டுப்படுத்தப்பட்டு விட்டதாகவும், மாரடைப்பு மட்டும் ஏற்படாவிட்டால் வீடு திரும்பியிருப்பார் என்றும் ஓரிடத்தில் ரிச்சர்ட் பீலே கூறினார். மற்றொரு இடத்தில் செப்சிஸ் கிருமித் தொற்று இதயத்தைத் தாக்கியதால்தான் மாரடைப்பு ஏற்பட்டதாகக் கூறுகிறார். ரிச்சர்ட் பீலே கூறும் இந்த இரு விடயங்களும் முன்னுக்குப் பின் முரணாக இல்லையா?


அப்பலோ மருத்துவமனையில் ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள் குறித்த மர்மங்களை போக்கும்வகையில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்படும் காட்சிகள் அடங்கிய காணொலி பதிவுகள் வெளியிடப்படாதது ஏன்?

காணொலி வெளியிட விடாமல் அப்பலோ நிர்வாகத்தை எவராவது தடுத்தார்களா?

மருத்துவமனையில் அளிக்கப்பட்ட சிகிச்சைகளின் காரணமாக சில அடி தூரம் நடக்கும் அளவுக்கு ஜெயலலிதா தேறியிருந்தார் என்று மருத்துவர் பாபு ஆபிரகாம் தெரிவித்தார். மிகவும் ஆபத்தான நிலையில் இருந்தவர் இந்த அளவுக்கு தேறினால், மருத்துவமனையின் சாதனை என பதிவு செய்வதற்காகவாவது, அதை காணொலி பதிவு செய்வது வழக்கம். அதுவும் ஒரு முதல்வரின் உடல்நிலை இந்த அளவுக்கு தேறியிருந்தால் அது நிச்சயம் ஆவணப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அதை செய்ய அப்பலோ நிர்வாகம் தவறியது ஏன்? போன்ற சந்தேகங்களையும், கேள்விகளையும் ராமதாஸ் அடுக்கினார். (ம-எ)

# அமெரிக்காவின் பாதுகாப்புக்கு நீதித்துறையே முழுப்பொறுப்பு

ட்ரம்ப் கொதிப்பு



அமெரிக்காவின் சுயபாதுகாப்புக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தால், அமெரிக்க நீதித்துறையே அதற்கு முழுப் பொறுப்பு என்று தெரிவித்தார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். ஈராக், ஈரான், சிரியா, லிபியா, சோமாலியா, சூடான் மற்றும் ஏமனில் இருந்து அமெரிக்காவுக்கு பயணிப்பவர்களுக்கு 90 நாள்கள் நுழைவிசைவுத் தடை விதித்தார் ட்ரம்ப். இந்தத் தடை நடைமுறையில் இருந்துவந்த நிலையில் ஒபாமாவின் காலத்தில் நுழைவுச்சீட்டுக்கு விண்ணப்பித்திருந்த 60 ஆயிரம் பேருக்கு அமெரிக்காவுக்குள் நுழைய அனுமதி வழங்கியது உச்ச நீதிமன்றம். உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட பொது நல வழக்கொன்றின் அடிப்படையிலேயே குறித்த 60 ஆயிரம் பேர் மட்டில் இந்தத் தடை திரும்பப் பெறப்படுகிறது என்று உச்ச நீதிமன்ற நீதிபதி ஜேம்ஸ் றொபாட் அறிவித்தார். மன்றின் முடிவுக்கு ட்ரம்ப் கடும் எதிர்ப்பை வெளியிட்டார். முன்னதாக, அதிபரின் ஆணையை நீதிமன்றம் மீறுவது கேலிக்குரியது என்று ட்ரம்ப் சாடியிருந்தார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அவர் தனது ருவிற்றர் பக்கத்தில், நமது நாட்டை நீதித்துறை ஆபத்தில் சிக்க வைத்துள்ளதை என்னால் நம்ப முடியவில்லை. அமெரிக்காவின் பாதுகாப்புக்கு ஏதேனும் நேர்ந்தால் அதற்கு நீதித்துறையே பொறுப்பு. அமெரிக்கா வருபவர்களை உள்நாட்டு பாதுகாப்பு அதிகாரிகள் மிகக் கவனமாக பரிசோதிக்க வேண்டும். நீதிமன்றம் எமது பணியை மேலும் கடினமாக்கியுள்ளது என்று குறிப்பிட்டார். (ம-எ)

# ஜெயலலிதா சாவில் சசியிடம் விசாரணை


பாண்டியன் வலியுறுத்தல்

ஜெயலலிதா சாவு தொடர்பில், சசிகலாவிடம் விசாரணை வேண்டும் என்று அ.தி.மு.க. பிரமுகரும் முன்னாள் சபாநாயகருமான பி.எச். பாண்டியன் நேற்று வலியுறுத்தினார். ஜெயா சாவடைந்த போது சசிகலாவின் கண்களில் இருந்து சொட்டு கண்ணீர்கூட வரவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-எ)

# ஆப்கானிஸ்தானில் பனிச் சரிவுகள் நூற்றுக்கணக்கானோர் உயிரிழப்பு

காபூல், பெப். 8

ஆப்கானிஸ்தானில் கடந்த 5 நாள்களாக கடும் பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. பனிச்சரிவு அசம்பாவிதங்களும் பரவலாக நடைபெறுகிறது. நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்திருக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. நூரிஸ்தான் மாகாணம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இங்கு தொடர்ந்து பனிச் சரிவுகள் ஏற்படுகின்றன. அதன் இடிபாடுகள் வீடுகளின் மீது சரிகின்றன. இதனால் வீடுகள் பனிக்கட்டிக்குள் மூழ்கி கிடக்கின்றன. வீதிகளும் அடைபட்டு போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. பனிச்சரிவில் சிக்கி இதுவரை நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் சாவடைந்துள்ளனர். உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம-எ)





# அரசுக்கு எதிரான கருத்தையுடைய 13,000 பேருக்கு சிரியாவில் தூக்கு

டமஸ்கஸ், பெப். 8
சிரியாவின் சைபிட்னயா சிறைச்சாலையில் மட்டும் கடந்த 6 வருடங்களில், 13 ஆயிரம் பேருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. எதிரான நிலைப் பாட்டை உடையவர்கள் என்று பன்னாட்டு மன் னிப்புச் சபை குற்றஞ்சாட்டியது. சாவுத்தண்டனை விதிக்கப்பட்டவர்களைவிட, 17 ஆயிரம் பேர் பட்டினி போடப்பட்டு உயிர்துறந்தனர் என்றும் சொல்லப்பட்டது. (ம-எ)

# 4 ஆயிரத்து 400 ஆஸ்திரேலியச் சிறுவர்கள் கத்தோலிக்கப் பாதிரியர்களால் பாதிப்பு

ஆஸ்திரேலியாவில் கத்தோலிக்கப் பாதிரியர்களால் 4 ஆயிரத்து 400 சிறுவர்கள் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.
கடந்த 1980 ஆம் ஆண்டில் இருந்து, 2015 ஆம் ஆண்டு வரை பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையிலேயே இந்த அதிர்ச்சித் தகவல்கள் அம்பலமாகின.
ஆஸ்திரேலியாவில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கத்தோலிக்க கல்வி நிறுவணங்கள் உள்ளன. இவ்வாறான கல்வி நிறுவணங்களில் கல்வி பயிலும் சிறுவர்களே துர்நடத்தைக்கு உட்படுத்தப்பட்டனர் எனவும் அந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.
சிறுவர்களைப் பாதுகாக்கும் அமைப்பொன்று குறித்த தகவல்களைத் திரட்டியதுடன், பாதிக்கப்பட்ட சிறுவர்களை சந்தித்து சாட்சியத்தையும் பெற்றது. இவற்றின் அடிப்படையில் அதிர்ச்சிக்குரிய தகவல் திரட்டையும் வெளியிட்டது. பன்னாட்டு ஊடகங்கள் சிறுவர்களின் கருத்துக்களையும் பதிவிட்டன. இந்த அறிக்கையை ஆராய்ந்த ஆஸ்திரே லிய நீதித்துறை அதிகாரிகள் தமது கண்டனத்தையும், கவலையையும் தெரிவித்தனர். (ம-எ)



உருகுவே தலைநகர் மொன்ரவீடோவில் உலகின் மிகப்பெரிய கானிவேல் ஊர்வலம் அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ஆயிரக்கணக்கான நடனக்கலைஞர்கள் பங்கு கொண்டனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம



சுவிற்சர்லாந்தின் சூரிச் நகரை சேர்ந்தவர் டிம்ஸ்டெய்னர். இவர் தனது உடலில் பச்சை குத்திக் கொள்வதில் அதிக ஆர்வம் மிகுந்தவர். உடலில் பல இடங்களிலும் ஓவியங்களை பச்சை குத்தியுள்ளார். கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு பெல்ஜியத்தைச் சேர்ந்த ஓவியர் விம் டெல்வாயிடம் தனது முதுகுப் பகுதியில் பலவிதமான பச்சை குத்திக் கொண்டார்.
2008 ஆம் ஆண்டில், ஜேர்மனி கண்காட்சி அமைப்பாளர் ரிக் ரெயின்கிங் என்பவரிடம் பச்சை குத்திய தனது தோலை விற்பனை செய்து விட்டார். இதனால், கண்காட்சி எங்கு நடந்தாலும், அங்கு டிம்ஸ்டெய்னர் நேரில் சென்று பச்சை குத்திய தனது உடம்பை காட்சி பொருளாக்கி வருகின்றார்.
தற்போது தற்காலிக காட்சி பொருளாக இருக்கும் அவரது பச்சை குத்திய தோல் அவர் சாவடைந்த பிறகு நிரந்தரமான காட்சி பொருளாகவுள்ளதாம். இந்தத் தகவலையும் அவரே தெரிவித்தார். (ம-எ)

# குடியிருப்பு விவகாரம் இஸ்ரேல் விடாப்பிடி

ஜெருசலேம், பெப். 8
ஐக்கிய நாடுகள் சபையின் கருத்துப்படி, பலஸ்தீனத்துக்கு நெருக்கமாக வும், அதன் சுய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும் அமைக்கும் வீடுகளின் எண்ணிக்கையை 4 ஆயிரமாக உயர்த்தியது இஸ்ரேல்.
ஆரம்பத்தில் 2 ஆயிரத்து 500 வீடுகளை அமைப்பதற்கே இஸ்ரேல் திட்டமிட்டது. பின்னர் அந்த எண்ணிக்கை 3 ஆயிரமாக அதிகரிக்கப்பட்டது. தற்போது 4 ஆயிரமாக மீண்டும் அதிகரிக்கப்பட்டது.
பஸ்தீனத்திடமிருந்து கிழக்கு ஜெருசலேம் உப்பப் பல பகுதிகளை ஆக்கிரமித்து வைத்துள்ளது இஸ்ரேல் அரசு. குறித்த பகுதிகளிலும் பலஸ்தீனத்துக்கு, மிக நெருக்கமாகவும், குடியிருப்புக்களையும் கட்டத் தொகுதிகளையும் அமைப்பதில் இஸ்ரேல் தீவிரம் காட்டியது. ஐ.நாவின் கண்டனத்தால் இஸ்ரேலின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. எனினும் ட்ரம்பின் ஆதரவுடன் குடியிருப்புக்களை அமைப்பதில் மீண்டும் முனைப்புக் காட்டுகிறது. (ம-எ)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தகவல் அறியும் உரிமை சட்டத்தைப் பயன்படுத்துவோம்

தகவல் அறியும் உரிமைச் சட்டம், கடந்த மூன்றாம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. அரசு வெளிப்படைத் தன்மையுடன் நடந்துகொள்வதை வெளிப்படுத்தும் வகையில் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்தச் சட்டத்தைப் பயன்படுத்திப் பொதுமக்கள் தமக்குத் தேவையான தகவல்களை அரச அலுவலகங்களில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

ஊழல், மோசடிகளைத் தடுப்பதற்கும், அதிகார வரன்முறை மீறல்களை ஒடுக்குவதற்கும் இந்தச் சட்டம் துணைபுரியும் என்று ஆழமாக நம்பப்படுகிறது. அதன் மூலம் ஜனநாயம் பலப்படுத்தப்படுகின்றது என்பதும் எதிர்பார்ப்பு.

இந்தச் சட்டப்படி, அரசு வேலைகளைக் கண்காணிக்கலாம், ஆவணங்களைச் சரிபார்க்கலாம், அலுவலகங்களைச் சோதனையிடலாம். அதெப்படி, இப்படியொரு சட்டத்தை எமது அரசியல்வாதிகள் அனுமதித்தார்கள். தங்களுக்குத் தாங்களே குழிபறித்துக் கொண்டதெப்படி? அவர்கள் சிக்கிக்கொள்ள அவர்களே வலை தயாரித்தது ஏன் என்பவை போன்ற சந்தேகங்களெல்லாம் ஏற்படுவது இயற்கைதான். இருந்தாலும் இந்தச் சட்டத்தை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் அரசியல்வாதிகளுக்கு உண்மையான சவாலை ஏற்படுத்த முடியும்.

தெற்காசியாவில் இந்தச் சட்டத்தை இயற்றிய 7ஆவது நாடு இலங்கை. "நல்லாட்சி" என்ற முழக்கத்தின்கீழ் இந்தச் சட்டம் தெரிந்தோ தெரியாமலோ இயற்றப்பட்டுவிட்டது. ஆரம்பத்திலேயே அது அரசியல்வாதிகளைச் சீண்டிப் பார்த்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் தீர்வையற்ற வாகன இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரங்களை யார் யார் எல்லாம் வேறு ஆள்களுக்கு விற்றார்கள் என்ற விவரம், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்டுப் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

இது ஒரு நல்ல ஆரம்பமாக இருக்கிறது. இந்தச் சட்டம் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தவதற்கு உதவியாக இருக்கிறது. இருந்தாலும் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது அவ்வளவு இலகுவானதல்ல என்கின்றன ஆய்வுகள். தெற்காசியாவின் ஏனைய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில், இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் காணப்பட்ட சவால்களில் மிக முக்கியமானது மக்களிடம் அது பற்றிய விழிப்புணர்வின்மையே!

சட்டம் குறித்து மக்கள் விழிப்படைந்துவிடாமலும், அப்படியே விழிப்படைந்து அவர்கள் தகவல்களைக் கேட்டால், அவற்றைக் கொடுத்துவிடாமல் இருப்பதற்கு வேண்டிய தடைகளை ஏற்படுத்துவத்திலும் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் முனைப்பாகவே இருப்பார்கள். ஏனைய நாடுகளின் அனுபவங்கள் இதற்கான சான்றுகள்.

இங்கும், குறிப்பாக வடக்கில், இந்தச் சட்டம் குறித்த விழிப்புணர்வு மக்களிடம் மட்டுமல்லாமல் அதிகாரிகள் மட்டத்திலும்சவ பெருமளவில் ஏற்பட்டுள்ளதாகக் கருதமுடியவில்லை. சட்டம் நடைமுறைக்கு வந்த பெப்ரவரி 3ஆம் திகதிக்குப் பின்னரும், பல அரச அலுவலகங்கள் தகவல்களை மக்களுக்கு வழங்குவதற்கான பொறிமுறையை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரியவில்லை. இந்த விடயத்தில் அதிகாரிகள் பலர் தெளிவற்று இருக்கிறார்கள் என்பதும் தெரிகிறது.


பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் போன்ற நாடுகளிலும் இதே நிலமை அவதானிக்கப்பட்டிருக்கிறது. சட்டம் எவ்வளவுதான் சிறந்ததாக இருந்தாலும், பயன்படுத்தப்படும்போதுதான் அதன் மதிப்புத் தெரியும்; புரியும். அதன் மூலம் சிறந்த பயனையும் அடைய முடியும். பயன்படுத்தப்படாத சட்டம் இருப்பதும் ஒன்றுதான், இல்லாமல் இருப்பதும் ஒன்றுதான்.

எனவே பொதுமக்கள் அனைவரும் இந்தச் சட்டத்தைப் பற்றிய விழிப்புணர்வைப் பெற்றுக்கொண்டு அதனைப் பயன்படுத்த முன்வரவேண்டும். பொது அமைப்புகளும், தொண்டு நிறுவனங்களும், சனசமூக நிலயங்களும், ஆலயங்களும் மக்களிடம் அந்த விழிப்புணர்வை ஏற்படுத்தப் பாடுபடவேண்டும். அப்போதுதான் வெளிப்படையான, நேர்மையான, ஊழலற்ற ஆட்சி ஒன்றை நாட்டில் ஏற்படுத்த முடியும். அதன் ஊடாகத்தான் இந்த அரசியல்வாதிகளையும், அதிகாரிகளையும் ஒழுங்குபடுத்தவும் அவர்களை வழிப்படுத்தவும், பொதுமக்களுக்குப் பொறுப்புக்கூறுபவர்களாக நெறிப்படுத்தவும் முடியும். அதற்காக, இந்தச் சட்டத்தை அதிகளவில் பயன்படுத்தப் பொதுமக்கள் முன்வரவேண்டும்.

# உண்மையைக் கண்டறிவது மட்டுமே விசாரணை ஆணையத்தின் நோக்கம்

## குற்றவாளிகளைத் தண்டிப்பது பற்றி ஜனாதிபதி பின்னர் முடிவெடுப்பார்

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
ரெங்கன்



இலங்கை மத்திய வங்கியில் கடந்த 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் நடந்துள்ளதாகக் கூறப்படும் ஊழல்கள் தொடர்பாகக் கடந்த வாரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணையம், அதற்கான பணி நிபந்தனைகளின் படி உண்மையைக் கண்டறியும் ஓர் அமைப்பாக மட்டுமே செயற்படும் என்று தெரிய வருகின்றது. சட்டமீறல் எதனையும் செய்திருப்பதாக, விசாரணைகள் எதனையும் முன்னெடுக்கப் போவதில்லை. ஒழுங்கீனங்கள் மற்றும்செயற்பாடுகள் பற்றியதாகவே விசாரணைகள் அமையும்.

மத்திய வங்கியின் முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் காரிய செயற்பாடுகள் தொடர்பாக புலனாய்வு செய்வதும், விசாரணைகள் நடத்துவதும் மட்டுமே, கடந்த 27 ஆம் திகதி வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட ஆணையத்தின் பிரதான நோக்கமாக இருக்கும். ஜனாதிபதியின் கட்டளைப்படி ஆணையத்தின் பணி நிபந்தனைகளில் காணப்படும் இன்னொரு அம்சமானது, அதிகார துஷ்பிரயோகம் அல்லது தவறான பாவனை, செல்வாக்கு, தலையீடு, ஊழல், தவறான செயற்பாடு உறவினர்களுக்குச் சலுகை அல்லது ஊழல்கள் தொடர்பாகக் கண்டுகொள்ளாமல் இருப்பது போன்றவை இடம்பெற்றிருந்தனவா என்பது குறித்துக் கவனம் செலுத்துவதாகும். ஆணையத்தின் முன்தோன்றிச் சாட்சியளிப்பவர்கள் மற்றும் எழுத்து மூலம் தகவல் தருபவர்களுக்குப் பாதுகாப்பளிக்கும் பிரிவு குறித்தும் பணிப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. புலனாய்வுகளும் விசாரணைகளும் நிறைவுற்றவுடன், தனது கண்டுபிடிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளுடனான அறிக்கை ஒன்றை ஆணையம் ஜனாதிபதிக்கு வழங்கவேண்டும் என்பது பணிப்புரை. சாட்சியங்கள் தொடர்பான சட்டப்பிரிவு, இந்த ஆணையத்தைப்பொறுத்த வரை செல்லுபடியாகாது. அதாவது, சாதாரணமாக எந்த நீதிமன்றங்களாலும் ஏற்றுக் கொள்ளப்படாத சாட்சியம்- கேள்விப்பட்டது என்ற வகையிலானவையும் இந்த ஆணையத்தால் ஏற்றுக் கொள்ளப்படும். விசாரணையின் போது ஆவணங்களை முன்வைப்பதும்கூட நேரடியாகச் செய்திட முடியும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள்தான் அதனைச் செய்ய வேண்டும் என்பதில்லை.

மத்தியவங்கிப் பிணைமுறி ஊழல் தொடர்பாக, முன்னர் அரச நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றக் குழுவால் (கோப்) ஆராயப்பட்டிருந்தது. அதன் தலைவராக ஜே.வி.பி. உறுப்பினர் ஹந்துன்நெத்தி இருந்தார். இதில் பல விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. 17 மாதகாலமாக 14 தடவைகள் கூடியதன்பின்னர், அதன் அறிக்கை வெளியானது. குறித்த ஊழல்களில் அப்போதைய மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுக்கு நேரடிப் பொறுப்பு இருந்துள்ளது என அந்தக் குழு தெரிவித்திருந்தது. இதில் அர்ஜுன் மகேந்திரனின் மருமகன், அர்ஜுன் அலோசியஸ் தொடர்பு கொண்டுள்ள பேர்பேச்சுவல் ட்ரெசரிஸ் நிறுவனம் பிணைமுறிகள் மூல



மாக பெருமளவில் வருமானம் பெற்றுள்ளது என்று குழு குற்றஞ் சாட்டியிருந்தது. அவர்கள் மீதும், வேறு சில வங்கி அதிகாரிகள் மீதும் சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று குழு கேட்டிருந்தது.

கடந்த ஜனவரி மாதம் நாரஹேன்பிட்டி அபயராம விகாரையில் உரை நிகழ்த்திய ஜனாதிபதி சிறிசேன இதுபற்றிக் கீழ்க்கண்டவாறு கருத்து வெளியிட்டிருந்தார். "கோப் குழு அறிக்கையானது, சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும், பின்னர் பொலிஸ்மா அதிபருக்கும், நாடாளுமன்றுக்குச் சமர்ப்பிக்கும் முன்னரே அவர்களின் கருத்தை அறிவதற்காக அனுப்பப்பட்டிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது. ஏற்கனவே நடத்தப்பட்டுள்ள விசாரணைகளின்படி, இது ஒரு குற்றவியல் விசாரணையாகவன்றி, சிவில் வழக்காகவே விசாரிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் விதப்புரை செய்துள்ளதாகவும், அறிகிறேன். இதில் எனக்குச் சம்மதம் இல்லை. இது சரியாகச் செய்யப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இதை நாட்டுக்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்" என்று ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

எனவேதான் விசாரணை ஆணையத்துக்கான ஜனாதிபதியின் பணிப்புரையில், இலங்கை மத்திய வங்கி உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமது சட்டபூர்வமான பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றபோது எடுக்கக்கூடிய, அல்லது எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு பாரபட்சமின்றி, ஆணையமானது தனது பணியைச் செய்வதாக இருக்கும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

**தவறான கருத்து**

இந்த விசாரணை ஆணையம் தொடர்பாக அரசு தரப்பில் சில பாரதூரமான தவறான கருத்துக்கள் நிலவுகின்றன. கடந்த வாரம் ஊடகச் சந்திப்பின் போது விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகர கூறுகையில்; விசாரணையில் எவராவது குற்றம் இழைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அவ்வாறான நபர்களுக்குத் தண்டனை வழங்குவதற்கான பரிந்துரைகளைச் செய்வது ஆணையத்தின் கட்டாய கடமையாக இருக்கும் என்று தெரிவித்திருந்தார். ஆனால் சட்ட மீறல்கள் ஏதும் இடம்பெற்றனவா என்பது பற்றி ஆராய்வது 'கட்டாயம்' என்ற வகையில், ஜனாதிபதியின் பணிப்புரையில் குறிப்பிட்டிருக்கவில்லை. எனவே குற்றச் செயல்களை ஆராய்வது அல்லது எவரையும் குற்றவாளிகளாகக் கண்டுபிடிப்பது என்பவை கேள்விக்கு அப்பாற்பட்ட விடயமே.

**மத்தியவங்கி ஊழல் குறித்த தகவல்களை ஜனாதிபதி பெற்ற பின்னரே நடவடிக்கை**


விசாரணை ஆணையம் நியமிக்கப்படுவது தொடர்பில் மிக நெருக்கமாகச் செயற்பட்ட தரப்பினர், இந்தப் புதிய செயற்பாடுகள் பற்றித் தெரிவிக்கையில், இந்த மத்திய வங்கி ஊழல் எவ்வாறு ஆரம்பித்தது, அரசியல்வாதிகள் உட்பட அதில் சம்பந்தப்பட்டிருப்பவர்கள் யார்? வேறு பல விடயங்களுடன் இதில் பெரும் நிதி மோசடி நிகழ்ந்திருப்பது எவ்வாறு என்பவை போன்ற விடயங்களை ஜனாதிபதி துல்லியமாக அறிந்து கொள்வதற்கான தகவல்கள் கிடைக்கும் என்று கூறுகின்றார்கள். அதன் பின்னர்தான், ஜனாதிபதி அறிவித்திருப்பதுபோல் என்னவிதமான நடவடிக்கைகளை எடுப்பார் என்பதும் தெரியவரும். மேற்கொண்டும் அவ்வாறான ஊழல்கள் நிகழாமல் தவிர்க்கவும் வழிபிறக்கும்.

> மத்திய வங்கி ஊழல் எவ்வாறு ஆரம்பித்தது, அரசியல்வாதிகள் உட்பட அதில் சம்பந்தப்பட்டிருப்பவர்கள் யார்? வேறு பல விடயங்களுடன் இதில் பெரும் நிதி மோசடி நிகழ்ந்திருப்பது எவ்வாறு என்பவை போன்ற விடயங்களை ஜனாதிபதி துல்லியமாக அறிந்து கொள்வதற்கான தகவல்கள் கிடைக்கும் என்று கூறுகின்றார்கள். அதன் பின்னர்தான், ஜனாதிபதி அறிவித்திருப்பதுபோல் என்ன விதமான நடவடிக்கைகளை எடுப்பார் என்பதும் தெரிய வரும். மேற்கொண்டும் அவ்வாறான ஊழல்கள் நிகழாமல் தவிர்க்கவும் வழிபிறக்கும். இலங்கை தனது 69ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகின்ற காலகட்டத்தில், சிறிசேன பதவியில் அமர்ந்த தன் பின்னர் நியமித்துள்ள முதலாவது விசாரணை ஆணையம் இதுவாகும்.

இலங்கை தனது 69ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகின்ற காலகட்டத்தில், சிறிசேன பதவியில் அமர்ந்ததன் பின்னர் நியமித்துள்ள முதலாவது விசாரணை ஆணையம் இதுவாகும். சில முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு, சிறிசேனவின் மனதில் முக்கியத்துவம் பெற்றுள்ளதாகத் தெரிகின்றது. தேர்தல் வாக்குறுதிகளில் பெரும் எடுப்பிலான ஊழல் குற்றச்சாட்டுக்கள் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டு மேலோங்கி இருப்பதால், பல்வேறு பொலிஸ்முகவர் அமைப்புக்களையும் வேகமாகச் செயற்படும்படியாக ஜனாதிபதி பணிப்புரைகள் விடுத்துள்ளார். இதன் காரணமாகப் பொலிஸ் உயர்மட்ட அதிகாரிகள், வழக்குகள் பதிவு செய்வதற்கான உதவிகளை சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து பெறுவதற்குச் சுறுசுறுப்பாகச் செயற்படத் தொடங்கியுள்ளார்கள். இதுபற்றி அமைச்சர் ஒருவர் தெரிவிக்கையில், இரண்டு வருடங்களுக்கு மேலாக பொலிஸார் இந்த விடயங்களை இழுத்தடித்துள்ளார்கள். இனிமேலும் தாமதங்களை ஏற்படுத்துவதற்குக் காரணங்களைச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். பொதுமக்கள் அரசைத்தான் குறை சொல்வார்கள் - என்றார்.

இன்னொரு பிரச்சினை பொருளாதார மாகும். போதுமான அளவு நிதி வசதிகள் இல்லாமையால், அரசு இப்போது முக்கிய திட்டங்களுக்கான நிதிகளைப் பெற்றுக் கொள்ள மக்கள் வங்கியையும் தேசிய சேமிப்பு வங்கியையும், அணுகியிருக்கின்றது. தேசிய சேமிப்பு வங்கியில் இருந்தும், மக்கள் வங்கியிலிருந்தும் 23.20 பில்லியன் ரூபாவைப் பெற்றுக் கொள்ள நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க இந்த மாதம் அமைச்சரவை சகாக்களின் அங்கீகாரத்தைக் கோரியிருந்தார். மத்திய கடுகதிப்பாதையின் இரண்டாம் கட்டம் முழுமை செய்யப்படுவதற்கு இந்தப் பணம் தேவைப்படுகின்றது.

ஜனாதிபதி சிறிசேன விரைவில் அமைச்சரவையில் சில மாற்றங்களைச் செய்ய உத்தேசித்துள்ள அதே நேரம், வேறு முக்கிய பணிகளும் அவரை எதிர் நோக்கியுள்ளன. இதுவரை தமது சிறிலங்கா சுதந்திரக்கட்சியை அவரால் மீளிணைக்க முடியாமல் போய் விட்டது. சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் அவரை அடுத்து வரக்கூடிய ஜனாதிபதித் தேர்தலிலும் போட்டியிடும்படி கேட்டிருக்கிறார்கள். இந்த விடயத்தில் ஜனாதிபதியும் ஒன்றும் கூறாமல் மௌனம் காத்து வருகிறார். இந்த அமைச்சர்கள் நிறைவேற்று அதிகாரம் நீக்கப்படக்கூடாது என்பதிலும் கவனமாக இருக்கிறார்கள். சிறிசேனவுக்கு ஆதரவான அமைச்சர்கள் இப்போது மீண்டும் சில குறைபாடுகள் குறித்து ஜனாதிபதியிடம் முறையிடத் தொடங்கியிருக்கிறார்கள். இவர்களில் பலர் முன்னாள் ஆட்சியாளரின் கீழ் பணிபுரிந்தபோது, மேற்கொண்ட ஊழல்கள் குறித்து விசாரணைகளுக்குள்ளாகியிருப்பவர்கள். நிதிக் குற்ற விசாரணைத் திணைக்களத்தினர் தங்களை மட்டுமே விசாரணைக்குட்படுத்திவருகிறார்கள் என்றும், ஐ.தே.க.வைச் சேர்ந்தவர்கள் கவனிக்கப்படுவதில்லை என்றும் அவர்கள் ஜனாதிபதியிடம் கூறியுள்ளனர். எனவே தான் ஜனாதிபதி சிறிசேன மிகுந்த கவனமாக அரசியல் கயிற்றின் மேல் நடந்து தனது அரசின் எதிர்காலத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியவராய் இருக்கின்றார்.



## வாசகர் திருமுகம்

### மாணவர்களின் நலன்கள் கருத்தில் கொள்ளப்படுமா?

யாழ். மாவட்டப் பாடசாலைகள் தற்போது தினமும் காலை 7.30 மணிக்கு ஆரம்பிக்கப்படுகின்றன. ஆரம்பப் பிரிவுகளில் கல்வி கற்கின்ற மாணவர்களும்கூட இந்த நேரத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. இதனால் அவர்கள் அதிகாலையில் எழுந்து பாடசாலை செல்வதற்குத் தம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

ஆரம்பத்தில் கொஞ்சம் கஷ்டமாக இருந்திருந்தாலும், இப்போது மாணவர்களுக்கு அது மெல்ல மெல்லப் பழக்கமாகி விட்டது. ஆனால் பாடசாலைகளுக்கு மாதாந்த சேவை அடிப்படையில் மாணவர்களை ஏற்றிச் செல்கின்ற சில வாகனச் சாரதிகள், தினமும் ஒன்றுக்கு மேற்பட்ட பாடசாலைச் சேவைகளை மேற்கொள்வதால், அந்த வாகனங்களில் பயணங்களை மேற்கொள்ளும் மாணவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இத்தகைய வாகனச் சாரதிகள், தாம் ஏற்றிச் செல்கின்ற ஒரு தொகுதி மாணவர்களின் வீடுகளுக்கு குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பாகவே சென்று மாணவர்களை அவசரப்படுத்தி ஏற்றிச் சென்று உரிய பாடசாலைகளில் இறக்கி விடுகின்றனர். இதனால் அந்த மாணவர்கள் காலையில் பாடசாலை செல்வதற்குத் தம்மைத் தயார் செய்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

அத்துடன் பாடசாலை ஆரம்பிக்கின்ற நேரத்துக்குக் கணிசமான நேரத்துக்கு முன்பாகவே பாடசாலையில் இறக்கி விடப்படுவதால், அவர்கள் தேவையற்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவும் நேர்கிறது.

பாடசாலைச் சேவைகளில்ஈடுபடுகின்ற வாகன உரிமையாளர்கள் தமது வருமானத்தை மட்டுமே கருத்தில் கொள்ளாது, மாணவர்களின் நலனையும் ஒரு கணம் எண்ணிப் பார்ப்பது சிறப்பாகும்.

*பா.தவபாலன், கொக்குவில்.*

# மண்புழுப்பசளை

## உற்பத்தியும் பயன்பாடும்



மண்புழு எனப்படுவது விவசாயிகளின் தோழனாக விவசாய உலகத்தால் போற்றப்படுகிறது. அந்த அளவுக்கு மண்புழு மண்ணை செம்மையாக வளப்படுத்துவதில் மிக முக்கிய பங்களிப்புச் செய்யும் ஓர் அங்கியாகும்.

மதுசூதன்

இன்றைய நவீன உலகில் அனைத்துத் துறைகளுமேஇரசாயன மயமாகிவிட்டமை அப்பட்டமான உண்மையே. உலகமயமாக்கலின் விளைவில் ஒன்றாக இரசாயனமயமாக்கலின் பாதக விளைவுகள் இன்று எல்லாத் துறைகளிலும் விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது.

எந்தத்துறை இரசாயனத்துக்கு உட்படக்கூடாதோ அந்தத்துறை இரசாயனத்தில் மூழ்கியுள்ளது. அது தான் விவசாயத்துறை. உலக மக்களுக்கு சிறந்த ஆரோக்கிய உணவுகளை உற்பத்தி செய்யும் மேன்மை மிக்க விவசாயத் துறையில் அதிகரித்த இரசாயனப் பாவனைகளால் உணவுகள் என்ற போர்வைக்குள் விசங்களை வாங்கி உண்டு கொண்டிருக்கின்றோம்.

இந்த இரசாயனத்தின் பாதிப்புக்களால் இருதயநோய்கள், இழைய அழிவுகள், கருக்கட்டல் பிரச்சினைகள், புற்று நோய்கள், நோய் எதிர்ப்புப் பிரச்சினைகள் சிறுநீரக நோய்கள் எனபல நோய்கள் எம் சமூகத்திலேயே ஏற்பட்டு பெரும் ஒரு நோயியல் சமூகம் எம்மிடையே உருவாகியுள்ளது.

இதனைத்தடுப்பதற்காக உலகமுழுவதும் அரசுகளும் அரசார்பற்ற நிறுவனங்களும், விவசாயத் திணைக் களங்களும், உலக சுகாதார நிறுவனர்களும் இன்று சேதன பயிர்ச்செய்கைமுறைகளைஊக்குவிக்க கோடான கோடி பணத்தை செலவு செய்கின்றன.

சேதனப் பயிர்ச்செய்கையென்பது சூழலுக்கும், நுகர்வோருக்கும் பாதிப்பில்லாத இயற்கை வளமாக்கிகளைக்கொண்டு ஆரோக்கியமான உணவுகளை உற்பத்திசெய்யும் முறையாகும்.

இவ்வாறான சேதனப்பயிர்ச் செய்கை முறைக்கான சேதனப்பசளை உற்பத்தியாக்க முறையே மண்புழுப் பசளை" உற்பத்தி முறையாகும்.

மண்புழுப்பசளை எனப்படுவது மண்புழுவைப் பயன்படுத்தி சேதனத் தன்மை நிறைந்த பசளைளை உற்பத்தி செய்யும் முறையாகும்.

உங்களுக்கே தெரியும்! முன்னர் நாம் மண்வெட்டியால் மண்ணை வெட்டினால் பல மண்புழுக்கள் மண்ணுக்குள் இருந்து வெளிப்படும். ஆனால் இன்றோ நிலைமை தலைகீழ். மண்வெட்டுவதற்கு வீட்டில் இடமுமில்லை, மண்வெட்டிக்கான தேவையுமில்லை, மண்ணைத் தோண்டினால் மண்புழுவைக் காண்பதே அரிதாக இருக்கிறது.

மண்புழு எனப்படுவது விவசாயிகளின் தோழனாக விவசாய உலகத்தால் போற்றப்படுகிறது. அந்த அளவுக்கு மண்புழு மண்ணை செம்மையாக வளப்படுத்துவதில் மிக முக்கிய பங்களிப்புச் செய்யும் ஓர் அங்கியாகுல்.

மண்புழுவைக்கொண்டு விவசாய நிலங்களிலுள்ள விவசாயக்கழிவுகள் மற்றும் ஏனைய விலங்குக்கழிவுகளை பிரிகையாக்கத்துக்கு உட்படுத்தி உயிர்ச்சேதனப் பசளை தயாரிக்கும் முறை உலகளவில் முக்கியத்துவம் பெற்று நிற்கிறது. மண்புழுப்பசளையானது கறுப்புத்தங்கம்' என சிறப்புப் பெயரினால் அழைக்கப்ப்டும் விவசாயத்தின் பெறுமதிமிக்க தங்கமாகும். மண்புழுப்பசளையானது மண்ணின் வளத்தை அதிகரிக்கின்ற ஓர் உயிர்ப் பொருளாகும், இது நாற்றுக்களை உற்பத்திசெய்யும், பயன்தருமரங்களின் வளர்ச்சி, விருத்தி, உற்பத்தி எண்பவற்றுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றது.

**மண்புழுப் பசளைக்கான மூலப் பொருள்கள்**

01 உக்கக் கூடிய சேதனக் கழிவுகள் - மண்புழுக்கள்
02.தாவரக் கழிவுகள்
03.விலங்குக் கழிவுகள்
04.வீட்டுக்கழிவுகள்
05.பண்ணைக் கழிவுகள்
06.மாநகரசபைக் கழிவுகள் என பல உக்கக்கூடிய கழிவுகள் முதலாகப் பயன்படுத்தப்படும்.

இதைவிட அவரைக்குடும்பத் தாவரங்கள் கழிவுகள் (கிளி சரையா சணல்) போன்றன சேர்க்கப்படுகின்றன.



மண்புழுப் பசளை தயாரிப்பில் பின்வரும் இன மண்புழுக்கள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன

01.சிவப்பு மண்புழு வகை Eisenia foetida
02.Night Crawler (Eudrilus Eugeniae)
03.Perianyx excavatus எஸ்கவேற்ரஸ்வகை மண்புழு

இந்த வகை மண்புழுக்களில் பெரும்பாலும் விரும்பிப் பயன்படுத்தப்படும் மண்புழு சிவப்பு மண்புழு வகையாகும் ஏனெனில் இது அதிக இனப்பெருக்க விதத்தையும் சேதனக் கழிவுகளை விரைவாக பிரிகையாக்கும் திறனுமுள்ளவை. சராசரியாக 45 தொடக்கம் 50 நாள்களில் சிவப்பு மண்புழுக்கள் சிறந்த மண்புழுப்பசளையை தேற்றுவிக்கக் கூடியன.

**சிவப்பு மண்புழுவின் முக்கிய தகவல்கள்**

01.உடலின் நீளம் - 3-10Cm
02.உடல் நிறை - 0.4-0.6g
03.முதிர்ச்சிக் காலம் - 50.55-ays
04பிரிகைக்குள்ளாகும் திறன் - 2.0/g 1500 மண்புழு / 2மாதம்



**மண்புழுப் பசளையின் தயாரிப்பு வகைகள்**

**சிறிய அளவிலான தயாரிப்பு**

இந்த முறை சிறிய அளவு விவசாயிகளினால் அவர்களின் தேவைக்கேற்றால் போல் உற்பத்தி செய்யப்படும், இந்த முறையினால் வருடத்துக்கு 5-10 தொன்கள் மண்புழுப் பசளையை உற்பத்தி செய்யலாம்

**பெரிய அளவிலான தயாரிப்பு**

பெரிய அளவிலான தயாரிப்பானது பெரிய விவசாயத் தேவைகளுக்காக அல்லது விநியோகத்துக்காக கைத்தொழில் ரீதியில் தயாரிக்கப்படும் இந்தமுறை மூலம் வருடத்துக்கு 50 - 100 தொன் மண்புழுப் பசைளையை உற்பத்திசெய்யலாம்.

**மண்புழுப் பசளை தயாரிப்பு முறைகள்**

01.குவியல்முறை
02.குழிமுறை

**குவியல் முறை தயாரிப்பு**

இந்த முறையில் பரிந்துரைக்கப்பட்டஅளவுகளில் உக்கக் கூடிய சேதனக்குழிவுகளை கொட்டி மண்புழுகளுடன் கலந்து உக்கவிட்டும் இது பராமரிப்புக்கும் உகந்த, செலவு குறைந்த இலகு முறையாகும்

**குழிமுறை**

இந்த முறையில், குழிகள் அமைக்கப்பட்டு அதற்கு உக்கும் சேதனக்கழிவுகளும் மண்புழுக்களும்குறித்த விகிதத்தில் இடப்பட்டு உக்க அனுமதிக்கப்படும் சில நாள் இடைவெளிகளில் புரட்டிவிடுதல் அத்தியாவசியமாகும்.

**மண்புழுப் பசளை தயாரிப்பின் படிமுறைகள்**

01.மண்புழுப் பசளை தயாரிப்புக்கு ஈரலிப்பான இடம் அவசியமாகும் ஏனெனில் அது மண்புழுவின் வளர்ச்சிக்கும் உக்கும் தன்மைக்கும் ஏதுவாக அமையும்.
02.மாட்டெரு மற்றும் வேறு வகை எருக்களுடன் உலர்ந்த தாவர இலைகள் 3:1 எனும் விகிதத்தில் கலக்கப்பட்டு 15-20நாள்களில்பகுதிஉக்கலுக்காகஅனுமதிக்கப்படும்.இதனுடன் சிவப்பு மண்புழுக்களும் குறித்த விகிதத்தில் கலக்கப்படும்
03.பகுதியாக உக்கலடைந்த கலவை கலக்கப்பட்டு குறித்த நீள அகலமுள்ள குவியல் ஒன்று உருவாக்கப்படும்.
04.ஈரலிப்பைப் பேணி சிறு நாள் இடைவெளிகளில் கலவை நன்றாக உக்கலுக்கு ஏற்ற சூழ்நிலையை வழங்க வேண்டும். இதனால் வளியோட்டமும் அதிகமாக சிறந்த உக்கும் நிலைமை உருவாக்கப்படும். 05.45-50 நாள்களின் பின் சிறந்த மண்புழுப் பசளை உருவாகியிருக்கும். மண்புழுப்பசளையின் கனியுப்புக்கள் உள்ளடக்கமானது மிக முக்கியமாகும்.

**மண்புழுப் பசளையிலுள்ள கனியுப்பு உள்ளடக்கம்**

இந்துப்பசளை முறையை வீட்டிலும் விவசாயிகள் தோட்டத்திலும் உருவாக்கி சிறந்த பயனைப்பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு உருவாக்கப்படும் மண்புழுப்பசளையானது வீட்டுத்தோட்டம், விவசாய நிலங்களில் பயன்படுத்தப்படுமாயின் இரசாயனக் கலப்பற்ற தரமான உணவுகளை உற்பத்தி செய்யலாம், இதனால் நோயற்ற சமுதாய மொன்றைக் கட்டியெழுப்ப முடியுமென்பது மறுக்கப்படாத உண்மை.

*கட்டுரையாளர்: யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாயப் பட்டதாரி.*

# சிந்திப்பதில் இருந்தல்ல சந்திப்பதில் இருந்தே படைப்புக்கள் மலர்கின்றன



## கூறுகின்றார் அருட்திரு யோசுவா

எஸ்.மல்லிகா

காலம் தனக்குத் தந்திருக்கின்ற பொறுப்புக்ளையும் எதிர்பார்ப்புக்களையும் நிறைவேற்றுவதற்காக எவன் தன்னுடைய திறமைகளைப் பயன்படுத்து கின்றானோ- அவனே மானிட சமூகத்தின் சிறந்த படைப்பாளி என்று கூறுகிறார்- எழுத்தாளரும் காவேரிக்கலாமன்றத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரு மான அருட்திரு. ரி.எஸ்.யோசுவா.

உதயன் பொங்கல் சிறப்பிதழுக்கு அளித்த செவ்வியின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். சமூக மாற்றத்துக்கான ஒரு தேடலை இலட்சியமாகக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கும் ஓர் இயக்க மான காவேரிக்கலாமன்றத்தின் நிறைவேற்று இயக்குநராகக் கடமையாற்றிக் கொண்டிருக் கும் அருட்திரு ரி.எஸ்.யோசுவா, அந்த உயரிய இலட்சியத் துக்காகத் தன்னை அர்ப்பணித்துச் செயற்படுகிறார். நடிகராக, கவிஞராக, புனைகதை எழுத் தாளராகத் தன்னை வெளிப்படுத்திய இவர், சமய- சமூகப் பணிகளிலும் முனைப் புடன் செயற்பட்டு வருகிறார். இனி அவரது செவ்வியிலிருந்து.

**கலையுலகச் செயற்பாடுகள்**

**கே :** தங்கள் கலையுலகச் செயற்பாடுகள் எப்படியிருக் கின்றன ?

**ப :** மனித சிந்தனையே அனைத்து நன்மை தீமைகளுக்கும் ஆணிவேராக இருக்கிறது. நேர்மறைச் (Positive Attitu de) சிந்தனை ரீதியான மாற்றமே சிறந்த வாழ்வியல் பண்பாகப் பரிணாமம் பெறுகிறது. அந்தப் பண்பே கலாசாரமாகப் பரிணாமம் பெறுகிறது. கலாசார ரீதியான புத்துருவாக்கத் துக்கான ஒரு காலகட்டத்தில் தமிழ்ச் சமூகம் வாழ்ந்து வரு கிறது. பழைமையில் இருந்து எமது காலத்துக்குத் தேவை யானதை எடுத்துக்கொள்ளவும், நம் காலத்தின் முன் னேற்றத்துக்குத் தக்கதான விழுமியங்களை உள்வாங்கிக் கொள்ளவும் எதிர்காலத்தின் தேவைகளுக்கேற்ப ஒழுங்கு முறைகளை வகுத்துக்கொள்வதற்குமான கலைமுயற்சி களுக்குத்தான் எனது பங்களிப்பை வழங்கி வருகிறேன்.

**கே :** கிராமியக் கலைகளின் மீதும் அதி அக்கறை கொண்டு உழைத்து வருகிறீர்கள். அந்தக் கலையின் எதிர்காலம் எப் படியிருக்கும் என்று நினைக்கின்றீர்கள் ?

**ப :** பாரம்பரியம் என்பது ஒரு காலத்தில் வடிவமைக்கப்பட்ட ஒன்றல்ல. அது கால நீரோட்டத்தில் புதிய வடிவங்களைப் பெற் றுக் கொண்டு தன் பயணத்தைத் தொடர்கிறது. அந்தவகை யில், கிராமியக் கலைகள் எமது காலத்தின் தேவைகளுக்கும் தேடல்களுக்குமான ஒரு தன்னுருவாக்கத்தைப் பெற்றுக் கொள்ளவில்லையானால், அது தனிமைப்படுத்தப்பட்டு விடும். கிராமியக் கலைகளைப் பொறுத்தவரையில் வழி பாடுசார் கலை கள், தொழில்சார் கலைகள், பொழுது போக்குச்சார் கலைகள் என மூன்று களங்களில் அவை நிகழ்த்தப்பட்டுள்ளன.

இன்றைய நவீன (Digital) எண்மான உலகத்துக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம், பாரம்பரியக் கலைகளை நம் காலத்துக்கு ஏற்ற வகையில் தேவைக்குட்படுத்துவது அத்தியாவசியமானது. குறிப்பாக, தற்பொழுது தமிழர் பிரதேசங்களில் வளர்ந்து வருகின்ற உல்லாசத்துறை விருத்தி செய்யப்படுகின்ற நிலையில் தொழில்சார் கலை களும், பொழுதுபோக்குச்சார் கலைகளும் உல்லாசப் பயணிகளுக்கு நல்விருந்தாகப் படைக்கப்படுமேயானால்- அது நீடித்து நிலைப்பதற்கு ஒரு வாய்ப்பாக அமையும்.

மேலும், வழிபாடுசார் கலைகளை மனித மனங்களின் இறுக்கத்தைத் தளர்த்தும்- ஆற்றுப்படுத்தும் கருவியாகப் பயன்படுத்த முடியும். உதாரணமாக- உடுக்கடிக் கலை என் பது அருள்வாக்குப் பெறும் கிராமிய வழிபாடுகளில் இன்றும் பயன்படுத்தப்படுகிறது. இப்படிப்பட்ட வழிபாடுகளின் ஊடா கப் பல்வேறு உளம்சார் பாதிப்புக்கு உட்பட்டவர்கள் நலம் பெறுவதாக நம்பப்படுகிறது. ஆனால், அவை தெய் வீகத் தன்மைக்குள் கொடுக்கப்படுகின்ற சக்திப்படுத்தல் நிலைக்கு அப்பால் இசை இதயத்தை ஆற்றும் சக்திமிக்கது என்பது தான் அதிக முக்கியத்துவம் பெறக்கூடும். ஆதலால், இசை மற்றும் தெய்வீகம் இணைந்து வழங்கும் ஒரு சுகப் படுத்தும் கருவியாக உடுக்கு இருக்கிறது. ஏனைய கிராமிய வழிபாடு சார் கலைகளும் தற்காலத் தேவைக்கு ஏற்ற வகையில் பயன்படுத்தப்படுமேயானால், அவை நிலைத்து நிற்கும்.

**கே :** சமீபத்திய இலக்கியப் போக்குக்கள் ஆரோக்கியமாக இருக்கின்றனவா ?

**ப :** என்னைப் பொறுத்தவரையில், நம் காலத்தில் படைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் படைப்பு இலக்கியங்களில் காணப்படும் யதார்த் தபூர்வமான அம்சங்களில் மனித மேம்பாடுகளுக்கும் அபி விருத்திகளுக்குமான ஊக்கப்படுத்தல் கூர்மைப்படுத்தப் படா மல் இருப்பது மிக முக்கியமான ஒரு சவாலாகும். வரலாறுகள் சார்ந்த காயங்களிலிருந்து மீட்சி பெறும் ஒரு சமூகம், தன் கடந்தகாலங்களின் நினைவுகளில் மூழ்கிவிடாத படிக்கு எதிர் காலத்தின் கனவுகளுக்கான சிறகு கொடுக்கும் சிந்தனைகள் இலக்கியப் படைப்புக்களாக வெளிவருவது அபிவிருத்தி அடைந்துவரும் அந்தச் சமூகத்தின் அச்சாணியாக இருக்கப் பட வேண்டியது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக அநேக படைப்புக் கள் எமது கடந்தகாலச் சுமைகளை மாத்திரமே வெளிப்படுத்தி நிற்பதும் எதிர்கால இலட்சியங்களுக்கு ஊக்கப் படுத்தல்களாக அமையாமல் இருப்பதும் ஓர் ஆரோக்கியமான சமூக உரு வாக்கத்துக்குப் பொருத்தமான தல்ல என்பது எனது கருத்து.

**சமூகப் பணிகளுக்கு மத்தியில் எழுத்துப் பணி**

**கே :** சமூகப் பணிகளுக்கு மத்தியிலும், எப்படித் தங்களால் எழுத முடிகிறது ?

**ப :** எழுதுவது என்பது சிந்திப்பதில் இருந்து பிறப்பதல்ல, சந் திப்புதில் இருந்து பிறக்கின்றது. இந்த மனித சமுதாயத்தின் தொடர்ச்சியான தேவைக்கான போராட்டத்தில் அன்புக்காக, உறவுக்காக, தன்னிறைவான வாழ்வுக்காகச் சதா போராடிக் கொண்டிருக்கும் மனித இதயங்களுக்கு நடுவேதான் நான் நாள்தோறும் பயணித்துக்கொண்டிருக்கிறேன். என் பய ணத்தில் நான் சந்தித்தவைகள்தான் என் படைப்புக்களுக் கான திறவுகோல்களாக இருக்கின்றன. எழுதுவதற்கான நேரத்தை ஒதுக்குவது என்பதை விட, மனதில் இருக்கும் பாரங்களை இறக்கி வைக்கும் கருவியாக எழுது கருவிகள் இருப்பதனால்தான் சுகமான பயணம் தொடர்கிறது.

**கே :** தங்களுக்கு மிகவும் பிடித்த படைப்பு, படைப்பாளி பற் றிக் கூறுங்கள் ?

**ப :** வளர்ந்து வருகின்ற இளம் பெண் ஓவியரான சிரோனியின் ஓவியப் படைப்புக்கள் என்னை மிகவும் கவர்ந்துள்ளன. சிரோனியின் ஓவியங்கள் போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் நம்பிக்கைக்கு ஒளியூட்டுவதாக இருக்கின்றன. போரில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பெண்ணும், தமது கடந்தகால கசப்பான நினைவுகளையே சுமந்து வாழ்ந்து வருகின்றாள். அவை சிலநேரங்களில் தற்கொலையையும் தகாத முடிவுகளையும் பிரசவித்து விடுகின்றன. ஆனால்,- சிரோனியின் ஓவிய முயற்சிகள் இப்படிப்பட்ட பெண்களின் கசப்பான கடந்தகாலக் கதைகளுக்கு நடுவில் மெல்லியதாய் சுடர்விட்டுக்கொண்டிருக்கும் எதிர்காலக் கனவுகளை மெது வாகத் தட்டியெழுப்பித் தூண்டிவிட்டு- சுடர்வீசச் செய்யும் நம் பிக்கைக் கதைகளை வெளிப்படுத்தி, சமூகத்தில் மாற் றத்தை ஏற்படுத்தி வரும் சிரோனியின் ஓவிய முயற்சி என் சமூகத் தைக் குறித்த ஏக்கத்துக்குச் சற்று நம்பிக்கையைத் தருகிறது.

**கே :** தாங்கள் இதுவரை வெளியிட்ட நூல்கள் குறித்துக் கூறுங் கள் ?

**ப :** இறையியல் சார் எட்டு நூல்களும், ஒரு கவிதை நூலும் என்னால் படைக்கப்பட்டுள்ளன. அண்மைக்காலங்களில் பல நூல்களுக்குத் தொகுப்பாசிரியராக இருந்திருக்கின்ற போதிலும், தற்போது புதிய எழுத்தாளர்களை அறிமுகப் படுத்தும் வெளியீட்டுப் பணியில் அதிக கவனம் செலுத்தி வரு கிறேன். அந்தவகையில், பேராயர் ஜெபநேசனின்-கண்டதும் கேட்டதும், ஏழுமலைப்பிள்ளையின் வீரகாவியம், திரு நகர் நடாசாவின்- ஓய்வு (சிறுகதைத் தொகுப்பு), அருட்திரு. ராஜ் குமார் அடிகளாரின் - விடிவெள்ளி, க.பே.முத்தை யாவின் வாழ்க்கை வரலாறு; புத்திசிகாமணியின்- உடுத்துறையின் வேர்கள், அருட்சந்திரனின்- யாழ்ப்பாணப் பெட்டகம் (வழிபாட்டுத் தலங்கள்), செல்வி சிரோனியின்-அகினதூரிகை போன்ற நூல்கள் மிக அண்மைக் காலத்தில் எனது ஊக்குவிப்பால் வெளியிடப்பட்டுள்ளன.

ஓர் எழுத்தாளனின் தலையாய கடமை, தன் சிந்தனை களையும் எழுத்துக்களையும் வெளியிடுவதற்கு அப் பால்- தன்னைச் சுற்றிலும் வாழும் படைப்பாளிகளை ஊக்கப் படுத்தி அவர்களின் நூல்களை வெளியிட ஊக்கப்படுத்துவது. அதனை இயன்றவரை நான் செய்து வருகிறேன்.

**கே :** தங்களுக்குத்திருப்தி தந்த படைப்புக்கள் பற்றிக் கூறுங்கள் ?

**ப :** 'அழகான காலங்கள்' என்பது என்னால் எழுத்துருப் பெற்ற நூல். என் படைப்புக்களில் அதனையே மிகச்சிறந்த படைப் பாக நான் கருதுகிறேன். அந்த நூலில், கிறிஸ்தவ திருச்சபை கள் போருக்குப் பிந்திய சமூகத்தை எவ்வகையில் புரிந்து கொள்ள வேண்டும் என்பதையும், அந்தப் புரிதலுக்கூடாக அபிவிருத்தி, மனித உரிமைகள் குறித்த நிலைப்பாடுகள், தேசிய இனநல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புதல் போன்ற என்பார் வைகளுக்கும், என் நிலைப்பாடுகளுக்கும் தற்காலத்தின் கிறிஸ்தவ சமுதாயப் பார்வைகளில் ஆழமான தாக்கங்களை ஏற்படுத்திய சக்திப்படுத்தல்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளேன். குறிப்பாக, திருச்சபையின் சுய தன்னிறைவுப்படுதலுக்கான முன்மாதிரியை எல்லாவற்றுக்கும் பிறரில் தங்கி வாழும் ஒரு சமூகத்துக்குப் பேரொளியாக முன்வைத்திருக்கின்றேன்.

**கே :** எழுத்துலகில் தாங்கள் சாதித்தது என்று எதனை நினைக்கின்றீர்கள்?

**ப :** என் சிந்தனைகளை எழுத்துருவாக்கத்துக்குள் உட்படுத்தி யது என்ற நிலைக்கு அப்பால், தங்களுக்குள் எரிமலை யாய்ப் பொங்கிக்கொண்டிருந்த பேரலைகளை நூல்களாகப் பிரசவிக்கப் பல எழுத்தாளர்களுக்குச் சிறந்த வழியாகவும் ஊக்கப்படுத்தலாகவும் களம் அமைத்துக் கொடுத்தமையை என் சாதனையாகக் கருதுகிறேன். ஓர் எழுத்தாளன் இன்னுமோர் எழுத்தாளருக்கான வழியாக, வாசலாக இருப்பானானால்- இந்த உலகத்தில் மிகச்சிறந்த படைப் பாளிகள் முளையிலே கருகாமல் பூத்து, காயாகி, கனியாகிப் பலருக்குச் சுவை கொடுக்கும் மெய்ஞானப் பழமாய் வெளி வருவார்கள்.

**காவேரிக் கலாமன்றத்தின் செயற்பாடு**

**கே :** காவேரிக்கலாமன்றத்தின் செயற்பாடுகள் பற்றிக் கூறுங் கள் ?

**ப :** காவேரிக்கலாமன்றம் பசுமையான தேசம், ஆரோக்கிய மான வாழ்வு, ஒளிமயமான எதிர்காலம் என்ற மானிட சமூ கத்துக் கான இலட்சியங்களைச் சுமந்து இந்த உலகத்துக்குள் ஓரங் கட்டப்படுபவர்களின் தோழனாக, கைவிடப்படு பவர் களின் உறுதுணையாக, இலட்சிய மனிதர்களின் ஊக்கப் படுத்துநராக, சோர்ந்து போனவர்களின் இலட்சிய உரு வாக்கியாகச் செயற் பட்டு வருகிறது. இது ஒரு கலாசார நிறு வனம் என்றவகையில், கலாசார மாற்றத்துக்கான ஆணி வேராகத் திகழ்கின்ற சிந் தனை மாற்றத்தை கலை, இலக்கிய, ஆன்மீக வழிமுறை களில் ஏற்படுத்த முயற்சி செய்து வருகிறது . தேசிய மற்றும் பன்னாட்டுத் தளங்களில் செயற் பட்டுவரும் இந்த இயக்கமானது, தன்னிறைவுள்ள ஒரு சமூகத்தின் சக்திப்படுத்தலாகத் திகழ் கின்றது. இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சமூக மாற் றத்துக்கான அதிகமான செல்வாக்கைச் செலுத்திவரும் இந்த இயக்கம்- தேசிய இனநல்லிணக்கத்துக்கான சமூகங் களைஊக்கப்படுத்தலில்காத்திரமானபணிகளைச்செய்துவருகிறது.

**கே :** படைப்புலகில் தாங்கள் சந்தித்த சவால்கள் குறித்துக் கூறுங்கள் ?

**ப :** சுவாரசியம் மிக்க எழுத்துக்களுக்குக் கொடுக்கப்படுகின்ற வரவேற்பு தத்துவார்த்தமான, யதார்த்தமான சமூக மறு வளர்ச் சிக்கான ஊக்கிகளாகப் பயன்படுத்தப்படுகின்ற படைப்புக் களைச் சமூகம் இரசிப்பதற்கும், ருசிப்பதற்கும் ஆயத்தம் இல்லை. அந்த வகையில், என்னைப் போன்ற படைப் பாளி களின் சிந்தனைகள் இந்தச் சமூகத்தில் ஏற்படுத்தப்போகின்ற தாக்கங்கள் எல்லைகளுக்கு உட்படுத்தப்பட்டதல்ல என்பதே நான் சந்திக்கும் சவால்.

**கே:** தங்களுக்கு விருதுகள் பெற்றுத்தந்த படைப்புக்கள் பற்றிக் கூறுங்கள் ?

**ப :** அண்மைக்காலங்களில் என்னால் உருவாக்கப்பட்டு நடை முறைப்படுத்தப்பட்டுவரும் கனவு அரங்கு (Dream Theater), போருக்குப் பின்னரான சமூகத்தில் ஆற்றுப் படுத்தும் அதீத சக்தி மிக்க ஓர் அரங்க வடிவமாக என்னால் பயன்படுத்தப்படுகிறது. இந்த அரங்க நெறிமுறைகள், வடிவங்கள் என இவற்றுக்குக் கொடுக்கப்படுகின்ற முக்கியத் துவங்களுக்கு அப்பால் சொல்லப்படுகின்ற அல்லது ஆற்றுகை செய்யப்படுகின்ற கதை- சக்திமிக்க எதிர் காலக் கனவுகளுக்கான கதையாகப் படைக்கப்படுகிறது. போருக் குப் பிந்திய சமூகத்தின் ஆற்றுப்படுத்தலும் அபிவிருத்திக் குமான என் அரங்கப் பார்வைகள், அமெரிக்காவின் கலிபோர் னிய மாநிலத்தில் இருக்கும் குளோபல் பல்கலைக்கழகத்தின் பாராட்டுக்கு உட்படுத்தப்பட்டுக் கௌரவம் அளிக்கப்பட்ட மையை இவ்விடத்தில் மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கிறேன்.













## சோதிட நூல் வெளியீடு

பண்டிதர் வெளியீட்டக வெளியீடான 'வேதியன் எழுதிய மனிதனும் மாற்றங்களும்' எனும் சோதிட நூல், வவுனியா நகர சபை மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் இலங்கை கிளையின் தலைவர் சிவ.கஜேந்திரகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாக வடக்கு மாகாண பிரதி செயலர் அம்பலவாணர் சிவபாத சுந்தரமும், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பரந்தாமன், வவுனியா நகர சபைச் செயலர் ஆர்.தயாபரன் மற்றும் தமிழருவி த. சிவகுமாரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.கௌரவ விருந்தினர்களாக வவுனியா வடக்கு உதவிப் பிரதேச செயலர் கே.நிவேதிகா, வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் நித்தியானந்தம் மற்றும் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் குகனேஸ்வரசர்மா, கோவில்குளம் மகாவிஷ்ணு ஆலய பிரதமகுரு இ.வைத்தியநாதக் குருக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் வரவேற்புரையை வவுனியா மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் வழங்கினார். அதனைத் தொடர்ந்து ஆசியுரையை சமஸ்கிருதப் பண்டிதர் சதாசிவக்குருக்களும், வாழ்த்து உரையை வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றிய செயலாளர் பிரபாகரக்குருக்களும் நிகழ்த்த, நூல் வெளியீட்டு உரையை மேழிக்குமரன், நூல் ஆய்வு உரையை வவுனியா பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் வீ.பிரதீபன் ஆகியோர் நிகழ்த்தினர். நூலின் முதற் பிரதியை முதன்மை விருந்தினர் வெளியிட மருத்துவர் த.முத்துலிங்கம் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடந்து சட்டத்தரணி சுதர்சினியும் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து விசேட பிரதிகள் வழங் கப்பட்டது. ஏற்புரையை ஜெ.மயூரக்குருக்களும், நன்றியுரையை வவுனியா வடக்கு பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் மா.செந்தில்குமரனும் நிகழ்த்தினர். நிகழ்வுகளின் தொகுப்பை முல்லை மாவட்ட மேலதிக மாவட்டப் பதிவாளர் கோபிநாத் வழங்கினார். பல சிவாச்சாரியர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர். (402)

# தீராத பக்தியோடு ஆராத இன்பம் பெருக காரைநகரில் நடைபெற்ற இசை ஆராதனை

கே.எஸ்.சிவஞானராஜா

2017 ஆம் ஆண்டு பிறந்த பின்னர் இலங்கையில் நடைபெற்ற முதலாவது இசை ஆராதனை அண்மையில் காரைநகர் கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் மிகவும் பக்திபூர்வமாகக் கொண்டாடப்பட்டது. காலம் கருதிய கர்நாடக சங்கீத ஆராதனை இலங்கையின் சிகரமெனப் போற்றப்படும் ஈழத்துச் சிதம்பரப்பகுதியில் அரங்கேறியிருப்பது நாட்டுக்கு நன்மை பயப்பதாகும்.

புராதன காலம் தொடக்கம் கலை, கலாசாரம், பண்பாடு, பொருளாதாரம், நல்லுறவு, அன்னியோன்னியம், கடின உழைப்பு, யாவற்றுக்கும் பெயர்போன இடம் காரைநகர். இத்தகு மண்ணில் இந்தியாவில் இருந்து வருகை தரும் சைவ சமய ஆசார சீலர்களும் தவில், நாதஸ்வர இசை, நடன, சிற்ப விற்பன்னர்களும் தங்கி, எம்நாட்டு விழுமியங்களுக்கு எம் நாட்டுக் கலைஞர்களுடன் சேர்ந்து பேறளித்தவர்கள் என்று சொல்லலாம். இந்த மண்ணில் பிறந்தவர்கள், இலங்கையை வாழ வைப்பவர்கள் என்று சொன்னால் கூடத் தவறொன்றும் இல்லை என்று கூறலாம். செல்வம் கொழிக்கும் பூமி காரைநகராகும். இத்தகு ஊரில் செழித்தவர் தான் அமரர் கலாநிதி வைத்தீஸ்வரக்குருக்களாவோர். இவரது அறிவுக்கும், முதிர்வுக்கும், ஆராய்ச்சிக்கும் பதிப்புக்கும், பன்மொழிப்புலமைக்கும் சிவமான்மியத்துக்கும், சைவ அனுகூலத்துக்கும், தமிழ் வளர்ச்சிக்கும், சக வாழ்வுக்கும், களமும் தளமும் அமைத்துக் கொடுத்த இடம் காரைநகரேயாம். மூர்த்தி, தலம், தீர்த்தம் நிறைந்து விளங்கும் இடமும் காரைநகரேயாகும். இத்தகு சிறப்பு வாய்ந்த பதியில் சற்குரு.ஸ்ரீதியாகராஜ சுவாமிகளின் இசை ஆராதனை 29.01.2017 ஞாயிற்றுக்கிழமை பி.ப.தொடக்கம் சிறப்பாக நடைபெற்றது. ஈழத்தின் பிரபல்யமான தவில் நாதஸ்வரக் கலைஞர்களும் பிரபல்யமான இசைக் கலைஞர்களும் மண்டபம் நிறைந்த சுவைஞர்களுமாகப் பலர் கலந்து ஆராத இன்பம் பெற்றனர்.

### ஆராதனை

சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 170ஆவது இசையாராதனை மங்கள வாத்தியங்களின் பிரவாகிப்புடன் ஆரம்பமானது.

முன்னதாக மன்றக் கொடியும், மன்றக் கீதமும், மங்கள விளக்கேற்றலும் பாரம்பரிய முறைப்படி நடைபெற்றது.

தவில் மேதை, லயஞான குபேர பூபதி அமரர் தெட்சணாமூர்த்தியின் மகன் தவில் சக்கரவர்த்தி உதயசங்கர் குழுவினரும், நாதஸ்வர மோகன ஞானசுரபி ரஜீந்திரன் குழுவினரும் ஆராதனைக்கு வரம் கொடுத்து சுவைஞர்களின் கரங்களில் மிளிர்ந்தனர். கணீரென்ற நாதத்தால் காரைநகர் களைகட்டியது. கலைஞர்கள் சுருதி லயமுடன் வாலாயம் பெற்றனர்.

### நளின காந்தி

மனோன்மணி மண்டபத்துக்கும் மனோலயமான கலைஞர்களுக்கும் மருவிய காரைநகர் மண்ணுக்கும் பொலிவு தரக் கூடிய இராகம் நளின காந்தி இராகம் ஆகும். அதானாலோ என்னவோ ரஜீந்திரன் குழுவினர் நளின காந்தி இராக உருப்படியை நாதஸ்வரத்தில் முதல் கீர்த்தனையாக வாசித்து ஆராதனைக்கு இரம் மியம் சேர்த்தார்கள். அதனைத் தொடர்ந்து பஞ்சரத்தினங்களில் மனதில் இடம் பிடித்த ஸ்ரீராகப் பஞ்சரத்தினம் ஆறாய்ப் பாய்ந்தது. மண் டபம் ஆற்றில் நனைந்தது.



ஒலியமைப்பும் மேடைப்பரப்பும் ஆராதனையை காரைநகரில் மட்டுமல்ல இலங்கையிலும் பதிவு செய்தது. கிழவன் காடு கலாமன்றம் ஒரு உருப்படியான கைங்கரியத்தை வருடந்தோறும் செய்வதனால் இந்த மண் சுபீட்சமடைகிறது.

### கீர்த்தனைகள்

நாட்டை, கௌளை, ஆரபி, ஸ்ரீராகம், வராளி ஆகிய ஐந்து இராகங்களிலமைந்த பஞ்சரத்தினக் கீர்த்தனைகளை மிகவும் லாவண்யமாகவும் லலிதரம்மியமாகவும் பரீட்சயமானதாகவும் பாடியது மாத்திரமல்ல பலிதகரமாகவும் பாடி பக்திரசம் சொட்ட வைத்தவர்கள் இலங்கையில் புகழ்பூத்த பாடகியான செல்வி பரமா கணேசன் குழுவினராவார்கள். அவர்களுடன் இசைவித்தகிகளான யசோ, சந்திரிக்கா, றஞ்சனி, ஆகியோரும் இன்னும் பலரும் இசைந்து பாட வீணை வயலின், மிருதங்கம், கெஞ்சிரா, வாத்திய அணி செய் கலைஞர்களும் பஞ்சரத்தினத்துக்குப் பேறளித்துப் பெருமை சேர்த்தனர் நல்லதோர் உபகாரம்! அச்சாவே!

### பொறுப்பு

2018 ஆம் ஆண்டில் தியாகராஜ சுவாமிகளைக் காரைநகரில் ஊர்வலமாகப் பவனிவரச் செய்து ஓர் எழுச்சியைஏற்படுத்தி, அடுத்த சந்ததிக்கு முதலீடாக்கவேண்டும். இதனைகிழவன் காடு கலா மன்றம் நிறைவேற்றும் என்று எதிர் பார்க்கலாம்.

# இலக்கியத்தில் பெண்களின் நடையழகு

இரா.நிஷாந்தன்



தமிழ் இலக்கியங்களில் உயர்வுக்கும், சிறப்புக்கும் பெருமை சேர்ப்பவர்கள் பெண்களே. எனவே தான் இலக்கியங்கள் அனைத்திலும் பெரும்பாலும் பெண்கள் முதன்மைப்படுத்தப்படுகின்றனர்.

அவ்வாறு குறிப்பிட்ட சில இலக்கியங்களில் பேசப்படும் மங்கையர்களது அழகு சிறப்புக்கள் அந்த இலக்கிய உயர்ச்சிக்கே அழகு சேர்ப்பனவாகும்.

மங்கையர் கண், முகம், இடை, கூந்தல், தனம், பாதம் என அவர்களின் அழகு பற்றி பாடாத புலவர்களே இல்லை. இவற்றில் பெண்களின் நடை அழகை எம் தமிழ் இலக்கியங்கள் எவ்வாறு வர்ணித்துள்ளது என நோக்குவோம்.

ஒரு பெண்ணுக்கு நடை என்பது இயல்பாகவே அழகானதே. குறிப்பாக பெண்களின் நடையை அன்ன நடை எனக் குறிப்பிடுவர். அதாவது அன்னம் ஆடி அசைந்து மெது மெதுவாக நடந்து வரும் இயல்புடையது. ஆக அன்னநடையை பெண்கள் நடைக்கு இலக்கியப் புலவர்கள் உவமை காட்டியுள்ளனர். மேலும் மயில், மான் என்பவற்றையும் பெண்களின் நடைக்கு உதாரணம் காட்டுவர் தமிழ்ப் புலவர்கள்.

உமாதேவியின் நடை அழகை வர்ணிக்கின்றார் சம்பந்தர். மலைமகளாம் உமையின் நடைக்கு அழகிய பெண் யானையும், மென்மையான அன்னமும் நிகராக மாட்டாது என பாடுகின்றார்.

மாதர் மடப்பிடியும் மட அன்னமும் அன்னது
ஓர் நடை உடை மலைமகள்...

இதே கருத்தை ஒத்ததாக சரஸ்வதிதேவியின் நடையழகை குமரகுருபரர் பாடுகிறார்.

நிலம்தோய் புழக்கை நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரச அன்னம் நான் நடை கற்கும் பதாம்புயத்தாளே

அதாவது நிலத்தைத் தொடும்படியான துதிக்கையையுடைய நல்ல பெண் யானையும் அரச அன்னமும் நாணமடையும் படியாக நடை பயிலுகின்ற தாமரை போன்ற திருவடிகளை உடையவள் கலைவாணி என குமாரகுருபரர் வர்ணிக்கிறார்.



மேலும் நளவெண்பாவில் தமயந்தியின் நடையழகைக் காட்டுகிறார். புகழேந்தி நளனிடத்தில் தமயந்தி பற்றி அன்னமானது உரைக்கின்றபோது நளன் அன்னத்திடம் உனக்கு எவ்வாறு தமயந்தியுடன் பழக்கம் வந்தது என வினவுகின்றான். அதற்கு அன்னம் நாம் வசிக்கின்ற நீர்ப்பொய்கைக்கு ஒரு நாள் தமயந்தி வருகை தந்தாள். அவள் நடந்து வரும் அழகைக் கண்டு நாம் அசந்து விட்டோம். இத்தனை நாளுமே நாமே நடை அழகில் முதலிடம் பெற்றவர்கள் என்று கர்வம் கொண்டிருந்தோம். ஆனால் தமயந்தியின் நடையழகைக் கண்ட பின் நாம் நாணமடைந்து விட்டோம். அவளைப் போன்று நடக்க வேண்டும் எனக் கருதி, கொஞ்சம் கொஞ்சமாக அவளுடன் பழக்கம் கொண்டு அவளிடத்தில் நடை பயின்று வருகின்றோம் என உரைத்தது அன்னம்.

இது மட்டுமன்றி கம்பராமாயணத்தில் சீதையின் நடையழகை கம்பர் பல இடங்களில் காட்டுகின்றார். இராமன் வில்லை முறித்ததும் வசிட்டரின் ஆணைப்படி சீதை அரச சபையின் மணி மண்டபம் நோக்கி நடந்து வருகின்றாள். அதனை கம்பர் காட்டும் வழியில் நாமும் சுவைப்போம்.

அன்னமும் அரம்பையரும் ஆர் அமிழ்தும் நாண
மன் அவை இருந்த மணி மண்டபம் அடைந்தான்.

அவளின் நடைக்கு தோற்று அன்னப்பறவையும், தேவலோகத்து அழகிய ரம்பை முதலிய பெண்களும் பெறுவதற்கரிய தேவ அமிர்தமும் வெட்கமடைந்து கவலை கொள்ளும், சீதை அரச சபையின் மணி மண்டபத்தை அடைந்தாள்.

மற்றுமொரு பாடலில், சீதை நடந்து வரும் போது அவளது நடைக்கு சமமாக தாமும் நடந்து வர வேண்டும் என நினைத்து களிப்புடன் அன்னங்கள் யாவராலும் தொழத்தக்க சீதையின் மென்மையான நடையழகுக்கு தோற்றுப் போய் இடையிடையே கீழே விழுந்து பின் மீண்டும் முயற்சித்து எழுந்து நடந்து வருவதைப் போல ஓர் அழகிய மயில் போல சீதை மண்டபத்தை நோக்கி நடந்து வந்தாள்.

களி அன்னம் தொழும் தகைய மென் அன்னம் தொலைந்து
எழுந்து இடை விழுந்து அயர்வது என்ன
நிழல்மின்னவரும்மஞ்ஞை என வந்தாள்...

மேலும் பஞ்சவடியில் இராமனும், சீதையும் தனித்து இருக்கின்ற சமயம் ஒன்றில், ஒரு மாலைப் பொழுதில் சீதை நடந்து வருவதைக் கண்ட ஓர் அன்னம் ஒதுங்கிச் சென்றதாம். இங்கு ஓதிமம் என்பது அன்னம். சீதையின் நடைக்குத்தான் ஒப்பாகமாட்டேன். எனக் கருதிய அவ் வன்னம் ஒதுங்கிச் சென்றதாம். அந்தக் காட்சியை கண்ட இராமனும் சீதையின் நடையழகை இரசித்து புன்னகை செய்தான் என்றார்- கம்பர்.

ஓதிமம் ஒதுங்கக்கண்ட உத்தமன் உழையளாகும்.
சீதை தன் நடையை நோக்கிச் சிறிய தோர் முறுவல் செய்தான்.

இவ்வாறு கம்பர் சீதையின் நடையழகை மட்டும் வர்ணிக்கவில்லை. மாறாக இராவணன் தங்கை சூர்ப்பனகையின் அழகையும் அழகுற வர்ணிக்கின்றார். இராமனைக் கண்டு அவன் மீது இச்சை கொண்டு அவனை அடைவதற்கு விரும்புகின்றாள்.

அதற்காக தன் அசுர உருவம் மறைத்து தன் மாயையினால் அழகிய பெண் உருவம் எடுத்து இராமனை நோக்கி நடந்து வருகின்றாள். அவ்வாறு அவளது நடையழகை கம்பர் மூன்று பாடல்களில் அழகுற வெளிப்படுத்துகிறார்.

பஞ்சி ஒளிர் விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க
செஞ் செவிய கஞ்சம் நிகர் சீறடியள் ஆகி
அம்சொல் இள மஞ்ஞை என அன்னம்
என மின்னும்
வஞ்சி என நஞ்சும் என வஞ்ச மகள் வந்தாள்

பஞ்சு போன்ற மென்மையான பாதங்கள் பட்டு குளிர்ச்சியான தளிர்கள் வருந்தும்படியாக, செக்கச் சிவந்த செந்தாமரை நிகர்த்த சிறிய அடிகளை வைத்து, இனிமையாக அகவும், மயில் போலவும், அழகிய நடை உடைய அன்னம் போல மின்னும் வஞ்சிக் கொடி போல கொடும் விசம் கொண்ட வஞ்சனையோடு நடந்து வந்தாள்.

மேலும் இணையில்லாத ஒரு மான் பார்வையைப் பெற்று அழகிய மயில் நடந்து வருவதைப் போல, அழகாக நடந்து வந்தாள் சூர்ப்பனகை. அதாவது மானின் விழிகள் அழகுடையவை. அதே மானின் கண்களை ஓர் அழகிய மயில் பெற்று நடந்து வருவதைப்போல சூர்ப்பனகையும் நடந்து வந்தாள் என்கிறார் கம்பர்.

தேனின் மொழி உற்று இனிய செவ்வி
நனி பெற்று
ஓர் மானின் விழி பெற்று மயில் வந்தது
என வந்தாள்

கம்பராமாயணத்தில் மற்றுமொரு பாடல்
பால காண்டம் பூங்கொய் படலத்தில்

திண் சிலை புருவம் ஆக சேயரிக்கருங்
கண் அம்பால்
புண் சிலை செய்வர் என்று போவன
போன்ற மஞ்ஞை
புண் சிலம்பு அணி வாய் ஆர்ப்ப நாணினால்
பறந்த கிள்ளை
ஒண் சிலம்பு அரற்ற மாதர் ஒதுங்குதோறு
ஒதுங்கும் அன்னம்

அழகு நிறைந்த அந்தப் பெண்கள் தங்களது புருவங்கள் எனும் வில்லால் கரிய கண்களாகிய அம்புகளைக் கொண்டு தம்மை புண்படுத்தக் கூடும் எனக் கருதி மயில்கள் அச்சம் கொண்டு அங்கிருந்து வெளியேறினவாம். அது மட்டுமன்றி அந்தப் பெண்கள் ஒலி மிக்க தம் சிலம்புகள் ஒலிக்க அடிபெயர்த்து நடந்து வரும்போது அவர்களின் அவ அழகிய நடைக்கு ஈடுகொடுக்க முடியாது தோற்றுப் போய் நடைக்கு புகழ் பெற்ற அன்னப்பறவைகள் ஒதுங்கி நின்றனவாம்.

இவ்வாறு கம்பராமாயணத்தில் கம்பர் பல இடத்தில் பெண்ணின் நடையழகை அழகுற வெளிப்படுத்துகின்றார்.

துடிக்குள் அடங்கிய தொரு பிடிக்குள் அடங்குஞ்சின்ன இடையினாள்
காமத் துட்டன் அரண்மனைக்குக் கட்டும் கதலி வாழைத்தொடையினாள்
அடுக்குவண்ணச்சேலை எடுத்து நெறிபிடித்த உடையினாள்
மட அன்ன நடையிலொரு சின்ன நடைபயிலும் நடையினாள்.

இந்தப் பாடல் திருக்குற்றாலம் குறவஞ்சியில் வசந்தவள்ளி எனும் மங்கையின் நடையழகை வெளிப்படுத்தும் பாடலாகும்.

(22 ஆம் பக்கம் பார்க்க)

மங்கை ஒருத்தி வீதி வழியே நடந்து வருகின்றாள். அதைக் கண்ட இளைஞர் ஒருவன் தன் உள்ளத்தை அவளிடத்தில் பறிகொடுக்கிறான். அப்போது அவன் அந்தப் பெண்ணைப் பார்த்து நீ இவ்வாறு நடந்து வருவது உன் தவறு இல்லை. உன்னை இவ்வாறு வீதியில் நடமாட விட்ட உன் பெற்றோர் மீதும் தவறில்லை. தெருவில் மதம் கொண்ட யானை நீர்நிலைக்கு செல்லும் போது மதம்கொண்ட யானை வருகிறது. அனைவரும் விலகிச் செல்லுங்கள் என முரசறைந்து அறிவிப்பதைப் போல உன்னுடைய வருகையையும் முரசறைந்து அறிவிப்புச் செய்யாத அரசனே தவறு செய்தவன்

# இலக்கியத்தில்...

19 ஆம் பக்கத் தொடர்ச்சி

அதாவது உடுக்கு போன்று இடுக்கி ஒரு கைப்பிடிக் குள் அடங்கும் சிறு இடையைக் கொண்டவள். கொடியவள் அரண்மனை வாயில்கட்டும் வாழைமரம் போன்ற தொடை கொண்டவள். அன்னத்தின் நடையிலும் ஒரு சின்ன நடை போட்டு அவள் நடந்து வந்தாள். அன்னம் நாணும் படி நடை பழகி வருகின்றாள் அவள்.

பிரபுலிங்கலீலை எனும் இலக்கியத்தில் சிவப்பிரகாச சுவாமிகள் மாயை எனும் மங்கையின் அழகை பின்வருமாறு வர்ணிக்கின்றார்.

அன்னநடையும் அன்னமிலா ஐயர்நடையும்
தளர்வெய்தக் கன்னி நடக்கும் நடை கற்குள்
கரும்பு கசக்கும் மொழிபெற்ருள்...

இங்கு அன்னமிலா ஐயர் நடை என்பது உணவு உண்ணாது நோன்பு நோற்கும் தவசிகளைக் குறிப்பது. அவர்களது நடை ஒழுக்கம் உடையது. ஆக அத்தகைய தவசிகளும், அழகு நடை கொண்ட அன்னமும் அம் மாயையின் நடையழகைக் கண்டு தம் நடை தளர்ந்தனவாம்.

சித்தர் கு.அழகிரி சுவாமிகள் ஒரு மங்கையின் நடையை அழகுற வர்ணிக்கின்றார். இராஜகேசரி எனும் மன்னனுடைய தலைநகர் வழியே மங்கையொருத்தி நடந்து சென்றாள். அவளுடைய அழகான உடல் அங்கங்கள் எல்லாம் அவள் நடந்து செல்லும் போது குலுங்கின. அவள் நடையிலே ஒரு தன்மை, நளினம் என்பன வெளிப்பட்டன. அந்த அழகிய நடையழகைப் பார்த்து மன்னரும், தொடர்ந்து நடக்கத் தொடங்கினார். இதற்கு மேலாக உலக பாசங்களையும் வெறுத்துத் தள்ளிய துறவிகளும் அம் மங்கையைக் கண்டதும் தமது தவ யோகங்களைக் கைவிட்டு, அவள் பின்னே புறப்பட்டு விட்டார்களாம். ஆக மன்னரும் மகிழ்ந்து மெச்சும் நடையழகு என புலவர் அம் மங்கையின் நடையழகை போற்றுகிறார்.

நடந்தாள் ஒரு கன்னி மாராச கேசரி
நாட்டில் கொங்கைக் குடத்தான் அசைய
ஒயிலாள் அது கண்டு கொற்றவரும் தொடர்ந்தார்
சந்நியாசிகள் யோகம் விட்டார்
சுத்த சைவரெல்லாம் மடந்தாள் அடைத்துச்
சிவபூசையும் கட்டி வைத்தனரே

இதுவே அந்தப் பாடலாகும்.

மேலும் கலித்தொகையில் ஓர் அழகிய காட்சி. கண்டவர் மயங்கும் படியான அழகு கொண்ட மங்கை ஒருத்தி வீதி வழியே நடந்து வருகின்றாள். அதைக் கண்ட இளைஞர் ஒருவன் தன் உள்ளத்தை அவளிடத்தில் பறிகொடுக்கிறான். அப்போது அவன் அந்தப் பெண்ணைப் பார்த்து, நீ இவ்வாறு நடந்து வருவது உன் தவறு இல்லை. உன்னை இவ்வாறு வீதியில் நடமாட விட்ட உன் பெற்றோர் மீதும் தவறில்லை. தெருவில் மதம் கொண்ட யானை நீர் நிலைக்கு செல்லும் போது மதம் கொண்ட யானை வருகிறது அனைவரும் விலகிச் செல்லுங்கள் என முரசறைந்து அறிவிப்பதைப்போல உன்னுடைய வருகையையும் முரசறைந்து அறிவிப்புச் செய்யாத அரசனே தவறு செய்தவன் என அவ் இளைஞன் புலம்புகிறான். ஆக அவளது நடை யானையின் நடைக்கு ஒப்பிடப்பட்டுள்ளமையை மறைமுகமாகக் காணலாம்.

நீயும் தவறு இலை நின்னைப்புறங்கடைப்
போதரவிட்ட நுமரும் தவறு இலர்
நிறையழி கொல்யானை நீர்க்கு விட்டாங்குப்
பறையறைந்து அல்லது சொல்லற்க என்னா
இறையே தவறு உடையான்

என்பது அந்த அழகிய காட்சியைக் காட்டும் பாடலாகும்.

இவை மட்டுமா சினிமா திரைப்படப் பாடல்களில் கூட பெண்களின் நடையழகு வர்ணிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். முழுமதி அவளது முகமாகும் எனும் பாடலில்

மகரந்தக் காட்டின் மான் குட்டி அவளது நடையாகும் எனும் பாடல் வரியாகும் அது.

பொதுவாக அன்னத்தையே பெண்களின் நடைக்கு உதாரணம் காட்டுவர். ஆனால் இந்தப் பாடலில் சற்று வித்தியாசமாக மானை ஒரு பெண்ணின் நடைக்கு உதாரணம் காட்டுகிறார் பாடலாசிரியர். அதுவும் மகரந்தக்காட்டின் மான் குட்டியின் நடை அழகு என்பது நயக்கத்தக்கது.

மேலும் மூக்குத்தி முத்தழகு மூனாம்பிறை பொட்டழகு எனும் பாடலில்

மருதாணிக் கொடிபோல மவுசாக அவ நடப்பா

மருதாணிக் கொடியைப் போன்று அழகாக, நடக்கும் ஒரு மங்கையின் நடையழகு இந்தப் பாடல் வரியில் வெளிப்படுகிறது.



# தமிழின் பெருமையை உணர்த்தியது வவுனியா முத்தமிழ் விழா

■ சு.வரதகுமார்

முத்தமிழை நாம் வளர்க்கப் பாடுபடவேண்டும் என்பதை உணர்த்தியது வவுனியா தேசியற் கல்வியியற் கல்லூரி நடத்திய முத்தமிழ் விழா வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி நடத்திய முத்தமிழ் விழா. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தொனிப்பொருளில் கடந்த 04ஆம் திகதி சிறப்புற இடம்பெற்றது வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கு.சிதம்பரநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழா, முத்தமிழை நாம் வளர்க்க வேண்டியதன் முக்கியத்துவத்தை எடுத்தியம்பியது.

இறை வழிபாட்டையடுத்து அரங்கம் திறக்கப்பட்டது. அரங்கத் திறப்பில் தமிழ் மொழி வாழ்த்துப் பாடல் இசைக்கப்பட, தமிழை வளர்த்த பெரியார்கள் போன்று வேடம்புனையப்பட்டு பாத்திரங்களாக அறிமுகப்படுத்தப்பட்டனர். இதனையடுத்து முத்தமிழ் கீதம் இசைக்கப்பட்டது. கீதத்தை விரிவுரையாளர் சத்தியநாதன் இயற்றியிருந்தார். இந்த நிகழ்வை அடுத்து விருந்தினர்களை வரவேற்று அழகான நடனம் ஒன்று ஆசிரிய மாணவர்களால் காட்சிப்படுத்தப்பட்டது.

தொடர்ந்து வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கு.சிதம்பரநாதன் தலைமையுரையில்;

நாம் மொழியை பற்றிப்பிடிக்கவேண்டும். மொழியை நாம் பற்றிபிடிக்காவிட்டால், நாங்கள் எங்களை இழந்துவிடுவோம். அதைப் பேசுகின்ற மக்களின் பெருமையை எடுத்துக்கூறுகின்றது. மொழி காலத்தின் கண்ணாடி, கடந்தகாலத்தில் ஏற்பட்ட போர்ப் பாதிப்பை அண்மைக்காலப் படைப்புக்களில் பார்க்க முடிந்தது- என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து உபபீடாதிபதி கா.சுவர்ணராஜாவின் உரை இடம்பெற்றது. அவர் தனது உரையில் தமிழர்களாகிய நாம் தமிழ் உணர்வைப் பறை சாற்றவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார். தொடர்ந்து தமிழ்மணி மேழிக்குமரன் உரையாற்றினார். அவர் உரையில் மொழிகளில் மூத்தமொழி தமிழ் மொழிதான். திருக் குறள் எல்லோருக்கும் வழிகாட்டியாக இருக்கக் கூடிய ஒரு பொது மொழியாகும். எல்லா மதத்தவர்களும் கடைப்பிடிக்க கூடிய வகையில் திறக்குறள் அமைந்துள்ளது. திருக்குறள் 80 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இன்றைய இந்த முத்தமிழ் விழாவின் கருப்பொருளாக யாதும் ஊரே யாவரும் கேளிர் காணப்படுகிறது; எனக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து தமிழ்மணி அகளங்கன் உரையாற்றுகையில் தமிழ் மொழியில் ஆங்கில கலப்புக்கள் இடம்பெற்றுள்ளன. இதை நாம் பேசும் பேச்சு வழக்குச் சொற்களில் காண்கிறோம்- என்றார்.

தொடர்ந்து மாணவ ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட பாரி என்ற இலக்கிய நாடகத்தில் மூவேந்தர்கள் பாத்திரங்கள் ஊடாக நாம் ஒற்றுமையாக வாழவேண்டும். தமிழர்கள் ஆகிய நாம் துணிவுடன் எமது தமிழையும் தமிழ் மண்ணையும் பாதுகாக்கவேண்டும். உடல் மண்ணுக்கும் உயிர் தமிழுக்கு என்ற விடயத்தை நாடகம் உணர்த்தியது. அடுத்து மனமாற்றம் என்ற நாடகம் இடம்பெற்றது. இரண்டு குடும்பங்களை வைத்து இந்நாடக்காட்சிகள் அமைந்திருந்தன. அதில் ஒரு குடும்பம் வறுமையில் வாடுகிறது. மறுகுடும்பம் பணத்தினால் அவர்களின் பிள்ளைகள் நாகரிக மோகத்திற்குள் சிக்குண்டு போகிறார்கள். குறிப்பாக தொலைபேசிப் பாவனை மற்றும் மோட்டார் சைக்கிள் பாவனையை அதிகரித்துக் கொள்கிறார்கள். அக்குடும்பத்தில் மகன் மோட்டார் சைக்கிள் வேகமாக ஓட்டி அவர் விபத்துக்குள்ளாகின்றார். அவரை எழைக் குடும்பத்தின் தலைவர் காப்பாற்றுகிறார். அவரது எளிமையான தன்மையை உணர்ந்த பணக்கார குடும்பத் தலைவர் மனமாற்றத்துக்குள்ளாகின்றார். பிள்ளைகளை நாகரிக மோகத்துக்குள் சிக்குண்டு போகவிடாது காப்பாற்றவேண்டும் என்பதும்- ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணக்கருவும் - நாடகத்தின் இறுதிக் காட்சிகளில் புலப்பட்டன. ஓரங்க நாடகத்தில் பௌசானா மாணவ ஆசிரியை தமிழ் மெல்லச்சாகிறது அதற்கு உயிரூட்ட அனைவரும் அணிதிரள வேண்டும் என்றவிடயத்தை அருமையான நடிப்பின் மூலம் வெளிப்படுத்தியிருந்தார்.

இசை நிகழ்வுகள் வரிசையில் இசையால் உனைபாட இனிக்கும் ஐயா என்ற பாடலை தேசியற் கல்லூரி விரிவுரையாளர் அருந்ததி சிறப்பாகப் பாடினார். அடுத்து நிற்பதுவோ நடப்பதுவோ என்ற பாரதியாரின் பாடலை ஆசிரியை மாணவி ஜெயச்சித்திரா பாடி அசத்தினார். தொடர்ந்து இடம்பெற்ற உழவர் நடனம் நாட்டார் இசை பாடல்கள கோலாட்டபாடல் இசை நாடகப்பாடல் நாட்டுக்கூத்துபாடல் என்பன எமது பண்பாட்டு விழுமியங்களை தெளிவாக வெளிப்படுத்தியது.

கவியரங்கம் இந்தக் காலத்தில் தமிழ் வளர்ச்சிக்குத் தேவையான விடயங்களைத் தொட்டு சொல்லி, அக்காலத்துக்கும் இக்காலத்துக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டி இனி வரும் காலங்களில் தமிழை வளர்க்க நாம் பாடுபட வேண்டும் என்ற விடயம் எடுத்துக்காட்டப்பட்டது. இக்கவியரங்கில் மேடைக் கூச்சத்தால் கவிபாடமறுத்து கதிகலங்கி கண்ணீர்வடித்த மாணவி அருகே விரிவுரையாளர் திருமதி பத்மாவதி ஜெயச்சந்திரன் அருகே சென்று உற்சாகமளித்து கவிபாட வைத்தார். அவர் கவிவரிகைள் வியக்கத்தக்கதாக இருந்தது. இவ்விடயம் பார்வையாளர் எல்லோரையும் கவர்ந்த விடயமாக இடம்பெற்றிருந்தது.

ஒட்டு மொத்தத்தில் இவ் முத்தமிழ் விழா இயல், இசை, நாடகங்கள் ஊடாக நாம் எமது தமிழை வளர்த்து, நல்ல பண்பாட்டு விழுமியங்களை இன்றை சமூகத்தின் ஊடாக எதிர்காலச் சமூகத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டிய முக்கியத்துவத்தை உணர்த்தியது.

# பண்டாரவன்னியனை கண்முன்னே கொண்டு வந்த ‘முல்லைமணி’

கந்தையா ஸ்ரீகணேசன்





நல்ல தலைவர்களை மக்கள் இனங்கண்டுகொள்ளவும், நல்ல தலைவர்கள். தோன்றவும் பண்டாரவன்னியன் போன்ற நாடகங்கள் உதவும். நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும், கலாசாரப் பற்றும் வளர இவ்வாறான வரலாற்று நாடகங்கள் உதவும். வன்னிப் பிரதேச மக்களுக்கு மட்டுமன்றி நம்பிக்கை குலைந்து தளர்ந்து போயிருக்கும். இலங்கைத் தமிழர் எவருக்கும் நம்பிக்கையும், தேசப் பற்றும், உரிமைக்குரலும் ஓங்க இந்த நாடகம் பயன்படும்' எனப் பேராசிரியர் சு.வித்தியானந்தனால் புகழாரம் சூடப் பெற்ற எழுத்தாளன் தான் ‘முல்லைமணி’ என அழைக்கப்படும் திரு வே. சுப்பிரமணியம். இப்போது அவரை இந்த இலக்கிய உலகம் இழந்து நிற்கிறது.

**முல்லையில் முகிழ்ப்பு**

வன்னிமண்ணின் அடையாளமாக - பண்பாட்டின், அரசியலின், இலக்கியத்தின் அடையாளமாகக் கொள்ளக்கூடிய பண்டாரவன்னியன் நாடகத்தை எழுதிப் புகழ்க்கொடி நாட்டிய ‘முல்லைமணி’ முல்லைத்தீவைப் பூர்வீகமாகக் கொண்டவர். அங்கு முள்ளியவளைக் கிராமத்தில் சபாபதி வேலுப்பிள்ளை மற்றும் கோணப்பர் மகள் பொன்னம்மா தம்பதியினருக்கு மூன்றாவது பிள்ளையாக 03.05.1933 இல் பிறந்த ‘முல்லைமணி’ வே.சுப்பிரமணியம் முல்லைத்தீவு மண்ணின், வன்னி மண்ணின், ஏன்ஈழத்தமிழரின் பண்பாட்டு, இலக்கிய அரசியல் அடையாளமாக பரிணமித்தமை எமது மண்ணின் தவப்பயன் ஆகும்.

மண்ணின் வளங்களை ஏற்று- அதன் மீது தமது உழைப்பை ஏற்றி வாழும் விவசாயக்குடும்பத்தில் பிறந்து, உழவு, கலப்பை, விதைப்பு, காவல், நீர்ப்பாசனம், அறுவடை, மாடு வளர்ப்பு, மேய்ப்புஎன வளர்ந்து; காட்டு வளங்களுடனான பிணைப்பும் வாழ்வு முறையுடனும் பின்னி பிணைந்து; கிராமியத் தெய்வ வழிபாடும் - காட்டா விநாயகர், வற்றாப் பளை அம்மன் தரிசனம் - என்கிற பண்பாட்டுச் சூழலில் வளர்ந்து கொண்டே தமிழ் சைவக்கல்வியும், நவீன விஞ்ஞான ஆங்கில, இலக்கிய கல்வியும் ஒருங்கு சேரப் பெற்றுக் கொண்டு, ஒரு இலக்கியகர்த்தாவாக மிளிர்ந்தவர் முல்லைமணி.

**கல்விப்புலத்தின் ஆரம்பம்...**

முள்ளியவளை சைவப்பாடசாலையில் ஆரம்பக்கல்வியைத் தொடங்கி மூத்த கல்வித்தராதரப்பத்திரப் பரீட்சையில் (தமிழ்)1948இல் சித்தி பெற்றார். 1949இல் திருநெல்வேலி பண்டித கலாசாலையில் படிக்கும் வேளையில், இலக்கியகலாநிதிபண்டிதமணிகணபதிப்பிள்ளையின் தொடர்பும்- தரிசனமும் வாய்க்கின்றது. இயற்கையாகவே முல்லைமண்ணின் மக்கள் மத்தியில் காணப்பட்ட நாட்டார் கதைகள் முதல் கந்தபுராணம், கம்பராமாயாணம், பாரதக்கதைகள் என்பன முல்லைமணியின் உள்ளத்தை ஈர்த்திருந்த நிலையில், பண்டித கலாசாலை தமிழ்க்கல்வி அவரின் சிந்தையைக் கொள்ளை கொண்டது.

தொடர்ந்து சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் மூத்த தராதரப் பத்திரப் பரீட்சையில் (ஆங்கிலம்) சித்தியெய்தி மருத்துவக்கல்லூரியில் உதவி வைத்தியர் ஆகும் கல்வியை 1954இல் தொடங்கினார். 1955 முதல் 1956 வரை மகரகம ஆங்கில ஆசிரிய கலாசாலையில் விஞ்ஞானத்துடன்கூடிய பயிற்சிக் கல்வியைப் பெற்று 03.01.1957 ஆசிரியராகப் பதவி ஏற்றார். வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் தொடங்கி, பின்னர் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் தொடர்ந்து ஆறு வருடங்கள் கற்பித்து, 1973 முதல் 1977 வரை மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகச் சேவையாற்றினார்.

இதனால் பண்பாட்டு அடையாளமாக மிளிரும், எழுத்தாளராகப் பரிணமிக்கும் சூழலும், கல்வி, கலைபோன்றனவும் உருவாக்கம் பெறுகின்றன.

**பல துறைகளில் புகுதல்**

ஆரம்பத்தில் மட்டக்களப்பில் தனது தமிழ் சார்ந்த பணியைத் தொடங்கினார். அங்கு பல்வேறு தமிழ் விழாக்களை ஒழுங்கு செய்து நடத்திய அனுபவம் பின்னாளில் கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையில் தமது பணியை பிரபல கல்வி கலை இலக்கிய கர்த்தாக்களுடன் மேற்கொள்ள வழி சமைத்தது.

1968இல் பண்டாரவன்னியன் நாடகம் தயாரிக்கப்படுகின்றது. 1970இல் முதல் பிரசுரமும், 1972இல் மறு பிரசுரமும் செய்யப்படுகின்றது. இன்னும் அது பல பதிப்புக்களைத் தொடர்ந்தும் பெறுகின்றது. இன்று வரை அது 5 பதிப்புக்களைக் கண்டுள்ளது. 1977இல் ‘அரசிகள் அழுவதில்லை’ என்ற சிறுகதைத் தொகுப்பு இலங்கை அரசின் தேசிய சாகித்திய மண்டலப் பரிசை வென்றுகொள்கிறது.

ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரன்பாமாலை, நெடுங்கேணி வில்லையடிப்பிள்ளையார் பாமாலை என எழுத்துப்பணி தொடர்கிறது. 1998இல் ‘வன்னியர் திலகம்’ நாவலை வவுனியா முத்தமிழ்க்கலாமன்றம் வெளியிட்டது. அந்நூல் இலங்கை அரச தேசிய சாகித்திய மண்டலப் பரிசைப்பெற்றது. ஏற்கனவே ‘மல்லிகை வனம்’ எனும் அவரது நாவலை சென்னை சோமு புத்தக நிலையம் 1985இல் வெளியிட்டியிருந்தது. நாட்டின் அரசியல் சூழல் முல்லைமணியின் வாழ்விலும் தாக்கத்தை ஏற் படுத்துகிறது. இலக்கிய நாடகம், காத்தவராயன் நாடகம், கோவலன் கூத்து என ஆசிரிய மாணவர்களை ஆற்றுப்படுத்தி நின்றவர் அந்நியப்படைகளின் இருப்பின் காரணமாக முல்லைத்தீவு மண்ணை நோக்கித் தனது கவனத்தைத் திருப்பினார். 1987 முதல் முல்லைத்தீவு மகா வித்தியாலய அதிபராகவும் 1990 முதல் கல்வி திணைக்கள தலைமை கல்வி அதிகாரி ஆகவும் 01.01.1991 முதல் பிரதேச கல்விப் பணிப்பாளர் ஆகவும் கடமையாற்றினார்.

**சமூகத்திலும் கலை, இலக்கியத்திலும்**

முள்ளியவளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராக 10 ஆண்டுகளும், முள்ளியவளை வித்தியானந்தாக்கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்கச் செயலாளராக 4 ஆண்டுகளும், பழைய மாணவர் சங்க கௌரவ தலைவராக 3 ஆண்டுகளும், முள்ளியவளை சனசமூக நிலையத் தலைவராக 5 ஆண்டுகளும், முல்லை இலக்கியவட்டத் தலைவராகவும் பணியாற்றியமை அவரது பன்முகப்பட்ட பரந்த சமூகசேவையைச் சுட்டி நிற்கின்றது. படித்தல், படிப்பித்தல், எழுதுதல், சமூகவேலை செய்தல் எனப் பணி செய்து நின்ற முல்லைமணி -, தொடர்ந்து பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை வன்னி வளநாடு மீது கொண்ட பற்றினால் மேற்கொண்டார்.

1999இல் இலக்கியப் பார்வை நூலும், 2000 ஆண்டளவில் 'கமுகஞ்சோலை' எனும் நாவலும் வெளி வந்தன. 2001இல் ‘வன்னியியற் சிந்தனை’ நூலும், 2003இல் ‘மழைக்கோலம்’ நாவலும், 2005இல் ‘கொண்டு வந்த சீதனம்’ என்ற சிறுகதைத்தொகுதியும் 2005இல் ‘நினைவுச்சரங்கள்’ என்ற நூலும் வெளியிடப்பட்டன.

அப்பச்சி மகாலிங்கம், முருகையன், எஸ். பொன்னுத் துரை ஆகியோரின் நாடகங்களையும் தனது நாடக எழுத்துருக்களையும் பல்வேறு களங்களில் மேடையேற்றிய முல்லைமணி- ஆங்கிலத்திலும் முல்லைத்தீவு பற்றியும் பண்டாரவன்னியன் பற்றியும் கட்டுரை கள் எழுதினார். அவருடைய ‘வன்னியின் கதை’ பலராலும் பாராட்டுப் பெற்றது ஒன்று.



■ கருடன்

# மலடாகிப்போன மண்ணுக்கு மழையாய் அமைந்த முத்துமாரியே

## பேராசிரியர் ரேவதி மாரிமுத்து

நிலத்து இயல்பான் நீர்திரிந்து
அற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்பது ஆகும் அறிவு"
(குறள் : 452)

பூமிக்குத் தகுந்தவாறு "நீர்" தன்னை மனிதகுலத்துக்குத் தன்னாலியன்றவகையில் மிகுந்த சௌகரியத்தோடும், சௌபாக்கியமாகவும், பாக்கியமாகவும், வரமோடும் வாழவைக்கின்ற பேறு தனைப் பூமாதேவியவள் - அனுக்கிரகம் செய்வதை நாம் தினந்தினம், கணம் கணம் அனுபவிக்கின்றோம். கோடிக் கணக்கான மனித வரலாற்றுப் பொக்கி சங்களையும், மனித சாம்ராஜ்ஜிய அற் புதங்களையும், வானுயர்ந்த பசுமைக் காடுகளின் சுவட்டுக்களையும் மிருக வம்ச வியாபகங்களையும் உள்ளீர்க்கப்பட்டு உயிரோடு வியாபித்திருப்பதனால் பூமி யானது தங்கம் விளையும் தரணியெனப் போற்றப் படுகிறது. பூமியில் என்னதான் இல்லை?
பணம் வேண்டுமா? பால் வேண்டுமா?
பயிர் வேண்டுமா? பறவைவேண்டுமா?
பசுமைவேண்டுமா? பத்திரம் வேண்டுமா?
படிப்பு வேண்டுமா? பட்டம் வேண்டுமா?
பதவி வேண்டுமா? பறக்க வேண்டுமா?
எல்லாமே பாருக்குள் பார்த்தால் விளைந்து கிடக்கிறது. எடுங்கள். அவை ஒருபோதும் குறையாது! ஆனால் நாமோ இந்தப் பெண்ணாகிய பூமாதேவியைப் படாத பாடுபடுத்தி வைத்திருக்கின்றோம்! எப்படி எப்படியெல்லாம் நோதல் படுத்தாலாமோ அப்படி அப்படியெல்லாம் நொந்து போகச் செய்திருக்கின்றோம். இயற்கையை மண்ணோடு உறவாடவைத்த நாம் செயற்கையை அதன் மீது திணித்து உறவாட வைத்து, மண்ணை மலடாக்கி மாற்றி கலாட்டா செய்துவிட்டோம். செய்கிறோம்-செய்வோம் என்று- கங்கணங் கட்டி நிற்கின்றோம். முடியுமா? வெற்றி பெறுவோமா? பணத்துக்கு எம்மால் எதுவும் செய்ய முடியும்! அடேயப்பா! பணத்துக்கு ஒரு தீவையே வாங்கலாம். பத்துப் புசல் நெல்லையே வாங்கலாம். பட்டத்தையும் வாங்கலாம், பதவியையும் வாங்கலாம். ஆனால் பதங்கெடாத ஒரு பூமியை வாங்கமுடியுமா? என்றால் முடியவே முடியாது. காலம் காலமாகப் புனிதமாகப் பேணியும்-போற்றியும் -புகழ்ந்தும் வணங்கிய இந்த மண்ணை வேறு யாருமல்ல நாமே தான் புண்படுத்திவிட்டோம் எப்படி?
அதீத உரப்பாவனை;
அதியுச்ச மருந்துப் பாவனை;
சூழலை மாசுபடுத்தியமை;
மரங்களை வெட்டிச் சாய்த்தமை;
பூச்சிகளை அறவே ஒழித்தமை;
மண்புழுக்களை மரணிக்கச் செய்தமை;
பறவைகளை விரட்டியமை;
காடுகளை வேரோடு அழித்தமை;
பிளாஸ்ரிக்' பொருள்களின் பாவனை;
மழை நீரைத் தேக்காமல் கடலுக்குள் பாய்ந்தோட விட்டமை.
மந்தைகளை இறைச்சிக்காக்கியமை
இயற்கைத் தாவரப் பசளைகளைக் கைவிட்டமை;
மண்ணை இதம் பதம் செய்யாமை;
மண்ணை வர்த்தகமாக்கியமை,
மண்ணுக்கு இறைவரம் சேர்க்காமை
போன்ற இன்னோரன்ன உதாசீனங்களினால் நாம் தோற்றுப் போனவர்களாக வருந்துகின்றோம். இத்தகு பாதிப்புக்களினால், ஏற்பட்ட மண்ணையும், மக்களையும் மீட்டெடுக்க வந்த ஒரு மீட்பரே பேராசிரியர் ரேவதி மாரி முத்து. ரேவதி போல பல ரேவதிகளை யாழ். மண் வேண்டி நிற்கிறது.



### ஆளுமை

25.01.2017 புதனன்று, யாழ் பல்கலைக் கழக கைலாசபதி அரங்கிலே ரேவதி அம்மையாரின் ஒவ்வொரு சொல்லும் விதைகளாகி முளைகொண்டது. அசேதன உரப்பாவனையால் மலடாகிப்போன விவசாய விளை நிலங்களை இயற்கைமுறை உள்ளீடுகள் மூலம் - பசுமைப்புரட்சியையும், சூழல் நேய விவசாய அறுவடைகளையும் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை அனுகூலமாக்கி நம்பிக்கையூட்டினார். நேரத்துக்கு முக்கியத்துவம் அளித்து, பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமான, தாய் மண் எழுச்சிப்பேருரை" சுமார் மூன்று மணித்தியாலங்கள் நீடித்தது. இவ்வாறான ஒரு பேச்சு இதுவரை நடைபெறவில்லை. ஆணித்தரமான பேச்சு!! அபாரம். அற்புதம்!! பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும், பொதுமக்கள் சிலரும் கலந்து பேறுபெற்றார்கள். ஆனால், இந்த மண்ணில் மாற்றம் வராது என்பது என்கருத்து. அமெரிக்கா, கியூபா, இந்தோனேசியா, வியட்நாம், பென்சில்வேனியா, மொறிசீசியஸ், இந்தியா, இலங்கை, ஜப்பான், ஆஸ்திரேலியா, தாய்லாந்து, கனடா ஆகிய நாடுகளில் மேற்கொள்ளப்படும் விவசாய நடவடிக்கைகளை ஆராயப்புகுமிடத்து -
01.கியூபா நாடானது முற்று முழுதாகச் சேதனப் பசளைகளையே மண்ணில் முதலீடு செய்து, விவசாயப் புரட்சி செய்தவர்கள் கியூபா மக்கள். இந்த விவசாயப் புரட்சிக்கு வித்திட்டவர் அந்த நாட்டு அதிபர் பிடல் காஸ்ட்ரோ ஆவார். இயற்கைப் பசளையால் விளைந்த உணவுப் பொருள்களை மக்கள் உண்பதன் பயனாக கியூபா வாசிகள், ஆரோக்கியம், ஆயுள், நோய் எதிர்ப்புச் சக்தி, ஆற்றல், கண்டு பிடிப்புக்கள், மண் வாசனை, சுயபாதுகாப்பு, உயர்ந்த மனித மாண்பு, தன்னம்பிக்கை, சகவாழ்வு போன்ற இன்னோரன்ன பேறுகளை என்றும் பெற்றவண்ணம் உள்ளனர். உலகத்தில் கியூபாவை ஒரு முன் உதாரணமாக நாம் பின்பற்ற முடியும் என்று எடுத்தியம்பியமை யாழ். மண்ணுக்கு வரம் சேர்த்ததெனலாம். யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் சமூகத்தால் வாழ்த்தப்படுகிறது சமூகமே படிப்பு.

### மாற்றம்

பெரும் பகுதி கடலாகவும் நான்கில் ஒரு பகுதி நிலமாகவும் இருப்பதனால், உலகின் சனத்தொகையான (கிட்டத்தட்ட) எண்ணூறு கோடி மக்களுக்கு இந்த நான்கில் ஒரு பகுதி நிலந்தான் மூன்றுநேர உணவையும் வழங்கப் போகிறது. பெரும்பாலும் எல்லா உணவுகளும் அசேதன உரப் பயன்பாட்டினாலேயே அழகாகக் காட்சிப் படுத்தப் பட்டுள்ளன. மண், பண்படுத்தல், களை, பூச்சிகள் யாவற்றுக்கும் இரசாயனக் கலவைகள் நன்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. யாழ்ப் பாணத்தை இறைவன்தான் காப் பாற்றவேண்டும்! இரசாயனப் பதார்த் தங்களையும், செயற்கைப் பசளைகளையும் பயிர்கள் கிரகித்துக் கொள்வதனால், தானியங்களும் உணவுகளும் நஞ்சாகி உண்ணும் அனைவரையும் பையப் பையக் கொன்றொழிக்கின்றது. எனவே இதிலிருந்து நாம் ஒவ்வொருவரும் மீள வேண்டுமாயின், இயற்கைப் பசளை களைக் குறிப்பாக, ஆட்டெரு, மாட்டெரு, குப்பைகள், குழைவகைகள், சருகுகள், கூட்டெரு, பனை ஓலைகள் (காய்ந்த, வேய்ந்த ஓலைகள்), பழுதடைந்த தானிய உடையற் கலவைகள் ஆகியவற்றை மண்ணுடன் சேரும் படியாகப் பண்படுத்தி விடுதல். வீட்டுக்கொரு பசு, வீட்டுக்கு ஒரு ஆடுவளர்த்து வருவோமாக இருந்தால், விவசாயம் நல்ல அறுவடையைப் பெற்றுத்தரும். பாலுமாகுது, பசளையுமாகுது. பயிர்களுமாகுது. பயனுமாகுது.

### தாய் மண்

நாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்து அனுபவித்து முடித்த இடம் தான் இந்த மண். இந்தப் பிரபஞ்சத்தில் அவரவர் வாழும் இடம் அவரவர்க்குச் சொந்தமான மண்ணேயாகும். அந்தந்த மண் அவரவர்க்குச் சுவர்க்கம் தான். கண்கண்ட மண்ணும் கடவுளும் அதுவேதான். சந்திரனுக்கோ செவ்வாய்க்கோ போனால் கூட அங்கேயும் எமது கைவரிசையைக் காட்டியே தீருவோம். இக்கரைக்கு அக்கரை பச்சை யாகத்தான் இருக்கும். அப்படிப் பச்சையாக இருந்த அத்தனையையும் நாம் நாசமாக்கி விட்டோம்.
வீதியைப் பெருப்பித்தோம்
வெட்டினோம் மரங்களை
வீட்டைக் கட்டினோம்
வெட்டினோம் பனைகளை
சாதியைக் கூறி மகிழ்ந்தோம்
சாய்த்தோம் மனிதங்களை
சந்ததியைச் சுருக்கினோம்
சரிக்கட்டினோம் தாய் மண்ணை!

### இழப்பு

இன்று நாம் எம் சொந்த மண்ணை இழந்து வருகின்றோம்.
விவசாய நிலங்களை நாமே நஞ்சூட்டி வருகின்றோம்.
காய்கறிகள் அத்தனையும் நஞ்சினால் விசிறப்பட்டு, விற்பதற்காகவே பளபளக்கின்றன. அதற்கும் நாமே இரசாயனக் கலவைகளைத் தெளிக்கிறோம்.
தானியங்கள் பதங்கெடாமல்
இருப்பதற்கும் இரசாயனக் கலவை விசிறப்படுகின்றன.
எந்தத்தானியத்திலும் வண்டுகளோ, பூச்சிகளோ, புழுக்களோ எதுவுமே கிடையாதென்றால் அதிலே நஞ்சுண்டு. பசுவின் பாலை அதிகம் சுரக்கப்பண்ணுவதற்கும் செயற்கை உணவுகள் வந்துவிட்டன. இனியென்ன ஒரு உலகப்போர் வந்து விட்டால் பட்டினியும், பசயும் குறிப்பாக வடக்கு மாகாணத்தை வாட்டுவது மட்டு மல்ல வதைத்தே தீரும்! இந்தியாவில் ஒரு கரும்புத் தோட்டமானது, எந்தவிதமான செலவுகளுமில்லாமல் இயற்கைப் பசளை யோடு அமோகமான விளைச்சலையும், அபரிதமான வருவாயையும் ஈட்டித் தருகிறது.
நிலத்திற் கிடந்தமை கால்காட்டும்! காட்டும் குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்!
விதையின் முளையே நிலத்தின் ஜாதகம்
ஜாதகம் இந்த மண்ணின் வரம்! இயற்கையே அதன் உரம்!

## மரண அறிவித்தல்



பிறப்பு
21 . 09 . 1938

இறப்பு
06 . 02 . 2017

திருமதி மேரிலூர்து (இராசம்மா)
அந்தோனிப்பிள்ளை

யாழ்.சவரியோடை, மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், மன்னார் மடு,பெரிய பண்டிவிரிச்சான் மற்றும் செட்டிகுளம், வீரபுரம், இல. 217 ஆகிய இடங்களைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி மேரிலூர்து (இராசம்மா) அந்தோனிப்பிள்ளை 06.02.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், மரியகொறற்றி (கொழும்பு), மேரி எமல்டா றோஸ் (வீரபுரம்), அன்ரன் ஜெயராசா (வீரபுரம்), ஜோசப்பீற்றர் பண்டிவிரிச்சான் ( முன் னாள் பிரதேசசபை உறுப்பினர் - மாந்தை மேற்கு), மேரிரெஜீனா (சுவிஸ்), ஜேசுதாஸ் (ஜேர்மனி), மரியராணி (பெரிய பண்டிவிரிச்சான்), காலஞ்சென்றவர்களான ஜஸ்ரின் அமலதாஸ், ஸ்ரீபன், மரியதாஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், பற்றிக், பேரம்பலம் (துரைமணி), பவானி, மணிமாலா, காலஞ் சென்ற திருச்செல்வக்குமார், நிர்மினி, அன்ரன் உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், டயானா (கனடா), கஸ்ரன் (சுவிஸ்), றொய்ஸ்ரன் (சுவிஸ்), லின்ரன் (சுவிஸ்), கரோலினா (கனடா), வித்ஸன், லிவின்சி, டிலூசன் ஜெனிபர்(சுவிஸ்), சுஜீனா (சுவிஸ்), ஜெவின், திகாசன், அனோஜன், டினோஜன், சபினா, வர்ஸா, ஸ்ரெபான் ஆகியோரின் பேர்த்தியும், கிலைக்சன், பியூமி, சாரா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி நாளை (09.02.2017) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் செட்டிகுளம் வீரபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று நொச்சிக்குளம் புனித கப்பலேந்தி மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நொச்சிக்குளம் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(J/7969)(11,17,18)



# காதல் என்பது எதுவோ?

பா.பாலாஜினி

கம்பன் முதல் கண்ணதாசன் வரை காதல் பற்றிப் பாடாத புலவர்களே இல்லை. அந்த அளவுக்குக் காதல் உலகம் முழுவதையுமே கட்டி ஆள் கின்றது. இந்த காதல் ஒரு மாபெரும் சக்தி என்று அனைத்து இலக் கியங் களிலும் சொல்லப்படுகின்றது. அனைவராலும் அது நம்பப்படுகின்றது. ஆனாலும், இதனால் ஒரு சில சங்க டங்களும் எழுகின்றன என்பதை ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும். இரு உள் ளங்களுக்கிடையில் தோன்றுகின்ற மென்மை யான ஒரு உணர்வு தான் இந்தக் காதல். ஆனா லும் இந்த மென்மையான உணர்வு ஒரு சில வன்மையான நிகழ்வுகளுக்கும் காரணமாக அமைந்து விடுகின்றது.

**காதலில் சோதிடம்**

என்ன தான் இருந்தாலும் இந்தக் காதல் என் பது சிறப்பாகவும் உண்மையானதாகவும் அமைவதற்கு அவர்களின் எண், பெயர், பிறந்த திகதி என்பனவும் பங்களிப் புச் செய்கின்றன. இதை நீங்கள் மூட நம் பிக்கை என நினைக் கலாம், அது தவறு. ஜோதிடங்களும், சாஸ்திரங் களும் உண்மை என விஞ்ஞான ஆய் வலர்கள் கூட இப்போது நம்பு கின்றனர். எது நடந்தாலும் விதி என்று சொல்வது போல இந்தக் காதலும் சிலருக்கு மட்டுமே வாய்க்கின்றது. சிலருக்கு வாழ்க் கையை அழிக்கின்றது. எல்லோ ருக்குமே காதல் என்றால் பிடிக்கும் இரசனையும் கூட. சிலர் தங்களை யாரும் காதலிக்க மாட்டார்களா? என ஏங்குகின்றார்கள். இன்னும் சிலரோ காதல் தரும் துன் பத்தில் இருந்து எவ்வாறு தப்புவது என்று கலங்குகின் றார்கள். மிக மிகக் குறை வானவர்களே காதல் தரும் இன் பத்தில் நனைந்து கொண்டிருக் கின்றார்கள் இப்படியாக ஒவ் வொருவருக்கும் காதல் ஒவ்வொரு உணர்வுகளைத் தருகின்றது. நன் மையோ தீமையோ அந்த உணர்வு களையும் அதன் விளைவுகளையும் நாம் சந்திக்க வேண்டி ஏற்படுகின்றது. அது தருகின்ற துன்பமான உணர்வுகளில் இருந்து தங்களைத் தப்புவித்துக் கொள்ள முடியாதவர்கள் தான், இன்று தற்கொலை செய்து தமது வாழ்க்கையை முடித்துக் கொள்கின்றார்கள். அவ்வாறு செய்து கொள்பவர்கள் தமது வாழ்வின் இன்ப மான பல பொழுதுகளை வெறு மனே ஒரு காதலுக்காக இழந்துவிடு கின்றார்கள் என்பது தான் உண்மை.

**காதலால் ஏற்படும் துன்பம்**

இந்தக் காதலால் ஏற்படுகின்ற துன்பங்கள் எமக்கு ஒன்றும் புதிதல்ல. இது எல்லாம் அம்பிகாவதி, அமராவதி காலத்தில் இருந்து நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன. வரலாறுகளிலும் புராணங்களிலும் நாம் கேள்விப்பட்ட கதைகளில் காதல் தோல்வியில் தான் முடிவடைந் திருக் கின்றது. ஆனால், அவை காலம் கடந்த பின்னும் நிலைத்து நிற்கின்றனவே. அதற்குக் காரணம் என்ன தெரியுமா? அவை உண்மைக் காதலாக இருந்திருக் கின் றன. இரண்டு இதயங்கள் மனப்பூர்வமாக அங்கு இணைந் திருந்தன. அன்பைப் பரிமாறிக்கொண்டன. அதனால் அந்த இதயங்கள் இறந்தும் வாழ்கின்றன.

இன்றைய காதல்களோ தொடங்குவதற்கு முன்பே இறந்து விடுகின்றன. முழுமையாக நிலைப்பதில்லை. சிலரிடம் இதைப்பற்றிக் கேட்டால் இன்றைய காதல் என்பது ஒரு காதலே இல்லை என்று சொல்லி விடுவார்கள். இன்றைய காலகட்டத்தில் காதல் என்பது ஒரு ஏளனத்துக்குரிய விடயமென்றாகி விட்டது. அதற்குக் காரணம் அதைப் பொருத்தமற்ற விதத்தில் கையாள்வதுதான். அதற்கு முதலில் காதல் என்றால் என்ன என்பதைத் தெளிவாக யாவரும் புரிந்து கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு காதல் செய்ய வேண்டும். மனித உணர்வுகள் உடலின் ஓமோன் சுரப்பினால் தான் தூண்டப்படுகின்றன. அதனைச் சரியான முறையில் பயன்படுத்தினால் தான் காதல். இல்லையோ அது பிரிவினைகளையும் சமூக பொருளாதார அத்து மீறல்களையும், கலாசாரப் பிரச்சினைகளையும் ஏற் படுத்திவிடும். இப்போதைய காதல்கள் எல்லாம் பெரும் பாலும் இப் படித்தான் நிகழ் கின்றன். ஏமாற்று வித்தை யாகவும் ஒருபொழுதுபோக்கு



நிகழ்ச்சியாகவும் மாறிவிட்டன. கண் ட்தும் காதலாகி விடுகின்றது. சிந் திப்பதற்கோ கதைப் பதற்கோ தீர்மானம் எடுப்பதற்கோ அது நேரம் கொடுப் பதில்லை. முதல் நாள் காதல் மறு நாள் திருமணமாகி அதற்கு அடுத்த நாள் பிரிவிலும் முடிந்து விடுகின் றது. அதனால் பல ரின் வாழ்வு சீர ழிந்து போகிறது.

சிலருக்கு உண்மைக் காதலை அடையாளம் காணத் தெரிவதில்லை. அதனால் ஏமாந்து போகின்றார்கள். இவர்கள் தான் அந்த வலையில் தப்ப வேண்டியவர்கள். நான் உன்னைக் காதலிக்கிறேன்" என்று யாராவது சொல்லிவிட்டால் போதும் உடனே அதை நம்பிவிடு வார்கள் கற்பனை உலகிலே மிதக்கத் தொடங்கியும் விடுவார்கள். சரியா? தவறா? என்பதைச் சிந்தித்துக் கூடப் பார்ப்பது இல்லை. ஒரு சில மணி நேரங்களில் எடுக்கின்ற தவறான முடிவும் காரணமாக பிற் காலத் தையே இழந்துவிடுகின்றார்கள். இந்தக் காதல் விட யத்தில் பெரிதும் பிரச்சினையாக இருக்கின்ற- பிரச்சி னையை தருகின்ற விடயம் சாதி வேறுபாடு தான்.

**காதலில் சாதிப் பாகுபாடு**

“சாதி இரண்டொழிய சாற்றுங்கால் வேறில்லை”.. என்றும் “ஓடும் குருதியிலும் வடிந்தொழுகும் கண் ணீரிலும் தேடிப் பார்த்தாலும் சாதி தெரிவதுண்டோ” என்றும் எத்தனை பேர் தான் பாடிச் சென்றாலும் இன் னும் மாறவில்லை இந்த வேறுபாடு.

இந்த வேறுபாடு எத்தனையோ காதல்களைப் பிரித்தி ருக்கின்றது. சாவைத் தேட வைத்திருக்கின்றது. இரண்டு மனங்கள் ஒன்றுபட்டால் இந்த வேறுபாட்டை எல்லாம் பார்க்கத் தான் முடியுமா? கவனத்தில் எடுக்கத் தான் முடியுமா? ஆனாலும் பெற்றோர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை ஒன்று இருக்கின்றதே. அதை எவ் வாறு மறக்க முடியும். பத்துமாதம் வயிற் றிலே சுமந்து பெற்று வளர்த்தவர்களால், பொருத்தம் பார்த்து திரு மணம் செய்து வைக்க மட்டும் முடியாதா? இப்படியான கேள்விகளும் மனதில் எழத்தான் செய்கின்றன.

ஆனால், இதையெல்லாம் சிந்திப்பதற்கு நாம் நேரம் கொடுப்பதில்லையே. அதுதான் தவறு. காதல் உணர்வு ஏற்பட்டால் அது உண்மையா அல்லது வெறும் கவர்ச்சி தானா என்பதை முதலில் உறுதி செய்து கொள் ளுங் கள். உண்மை என்றால் அதை நிறைவேற்ற வழி உள் ளதா அதற்கு உங்களைச் சுற்றி இருப்பவர்கள் சம்மதிப் பார்களா? என்பதை அறிந்து கொள்ளுங்கள்.எதனையும் சரியான முறையில் அணுகினால் மட்டுமே சிறந்த தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும். எந்த ஒரு விடயத்தை யும் அணு குவதில் தான் இருக்கிறது அதனுடைய வெற்றி.

நீங்கள் சரியான முறையில் காதலைச் செய்வீர்க ளேயானால் பிறருக்கு அஞ்சவேண்டிய அவசியமே இல்லை. காதல் கொள்கின்ற இரு மனங்களுமே உண் மையாக இணைந்திருந்தால் யாராலும் அவர்களைப் பிரிக்க முடியாது. இறந்த பின்னாவது ஒன்று சேரமுடியும் அவர்களால். வரலாற்றுக் கதைகளைப் பொறுத்த வரைக்கும் உண்மையான இதயங்களும் உண்மை யான காதலும் ஒரு போதும் பிரிவதே இல்லை, அவை இறந்த பின் சேருகின்றன. உண்மையான காதல் உடம்பைப் பார்க்காது உள்ளத்தை மட்டுமே தேடும். காதலிக்க விரும்புகின்றவர்கள் அதை நேசியுங்கள் வாழ்க்கை சிறப்பாக அமையும்.

**உண்மையான காதல் அழியாது**

இது ஒருபுறமிருக்க காதலே எனக்கு வேண்டாம் என்று சிலர் இருப்பார்கள். காதலை வெறுப்பார்கள். ஆனால் அப்படியானவர்களை தேடித் தான் இந்தக் காதலும் வந்து சேரும். இவர்கள் இந்தக் காதல் வலையில் இருந்து தப்புவதற்கும் வழிகள் இருக்கத்தான் செய் கின்றன. எந்த ஆண்பாலாரிடமும் நெருங்கிப் பழ காதீர்கள் (குறிப்பாக தந்தை, தாய், உடன் பிறந் தவர்களை தவிர) குடும்பத்தில் உள்ளவர்களை தவிர மற்றவர்களிடம் அன்புக்காக ஏங்காதீர்கள். எப்போதும் தன்னம்பிக்கையுடன் இருங்கள். மற்றக் காதல் ஜோடிகளைக் கண்டு பெருமூச்சு விடாதீர்கள்.

யாரும் உங்களுக்கு காதல் பற்றிச் சொன்னால் உடனே அவர்களை ஏசி விடாதீர்கள். ஏனென்றால் ஏசியதற்காக மன்னிப்புக் கேட்கச் செல்லும்போது நீங்கள் காதலில் விழுந்துவிட வாய்ப்புகள் நிறைய உண்டு. எனவே யாரும் உங்களுக்கு காதல் பற்றிச் சொன்னால் அதனை எதிர்க் காது பேசி உங்கள் நிலையை புரியவையுங்கள். பிறகு அவர்களை உங்களின் நண்பர்களாகவே மாற்றிக் கொள் ளுங்கள். அவ்வாறு செய்தீர்களேயானால் உங்களால் அவர்களுக்கு காதல் பற்றிச் சொல்ல முடியாது போய்விடும். வாழ்வதும் ஒரு முறைதான். சாவதும் ஒரு முறைதான். உண்மைக் காதலும் அப்படித்தான், ஒரே ஒரு முறை தான். எனவே காதலையும் தவறவிடாதீர்கள் நீங்கள் உங்கள் குடும்பத்தவர்கள் பெற்றோர்களுக்கு செய்ய வேண்டிய கடமையையும் மறந்து விடாதீர்கள். இரண் டையுமே நிறைவேற்றுகின்ற போது தான் அது ஒரு உண்மைக் காதலாக உருவாகும்-நிறைவேறும்.

# ஆப்கான் குண்டு வெடிப்பில் 20 பேர் சாவு



காபூல் ஆப்கானிஸ்தான் உச்ச நீதிமன்றுக்கு அருகே நேற்று செவ்வாய்கிழமை குண்டுவெடித்தது. இந்தப் பயங்கரவாத சம்பவத்தில் 20 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 40 பேர் காயம் அடைந்தனர். முன்னதாக, கடந்த மாதம் ஆப்கானிஸ்தான் நாடாளுமன்றுக்கு அருகே த்லிபான் பயங்கரவாதிகள் நடத்திய இரட்டைக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 30 பேர் உயிரிழந்தனர். 80 பேர் காயம் அடைந்தனர். (வ)

## (முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்)

### பொய்...

விலையிலேயே விற்பனை செய்யப்படுகின்றது. பொய்யான தகவல்களை வழங்குவதுதான் கூட்டு அரசின் வேலை. இவ் வாறு மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.
பொரளையில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப் பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவு தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றது. அரசு அரிசியின் விலையையும் அதிகரித் துள்ளது. உலகளாவிய ரீதியில் உணவுத் தட்டுப்பாடு இருந்த காலப் பகுதியில் கூட இலங்கையில் இவ்வாறு அரிசியின் விலை அதிகரிக்கப்படவில்லை.
ஆனால், அரசோ நேற்றைய தினம் (நேற்றுமுன்தினம்) சிறப்பு அறிவித்தலொன்றை விடுத்தது. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் நாட்டரிசி மற்றும் சம்பா அரிசியின் அதிக பட்ச விற்பனை விலை நிர்ணயிக்கப்பட்டு நடைமுறைக்கு கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. இது முற்றிலும் பொய்யான செய்தியாகும். இன்று காலையில் (நேற்றுக் காலை) கூட நான் விற்பனை நிலையங்களுக்கு சென்று அரிசியின் விலையினை விசாரித்தேன். ஆனால் அரசு கூறுவதைப் போல எந்தவொரு விலைக் குறைப்பும் இடம்பெறவில்லை.
பொருளொன்றுக்கு அதிக பட்ச விற்பனை விலை நிர்ண யிக்கபட வேண்டுமாயின் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்டங்களைப் பின்பற்ற வேண்டும். அரிசியின் இந்த விலை விவகாரம் தொடர்பில் நிதியமைச்சின் உபகுழுக் கூட்டத்திலேயே தீர்மானிக்கப்பட்டுள்ளது.
பொருளொன்றுக்கு அதிகபட்ச விற்பனை விலை நிர்ணயிக் கப்படுமாயின் அதனை வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டும். குறித்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படாத நிலையில் அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவரவும் முடியாது. இப்படியிருக் கும்போது அரிசியை அதிகவிலைக்கு விற் கும் விற்பனையாளருக்கு எதிராக எந்தவித சட்ட நடவடிக் கையும் அரசினால் மேற்கொள்ள முடியாது. மக்களின் எதிர்ப்புக்களிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவே அரசு இவ்வாறான பொய்யானக் கருத்துக்களை பரப்பி வருகின்றது - என்றார். (வ-5)

### பிலக்குடியிருப்பு...

போர் முடிவுற்றதன் பின்னர் அரச படையினர் பலவந்தமாக ஆக்கிரமித்துள்ளனர்.
இராணுவத்தினர் இவ்வாறு சட்ட விரோதமான முறை யில் அத்துமீறித் தங்கியுள்ளதால், காணிகளின் உரிமையாளர்களினால் தமது பூர்வீக இடங்களில் மீளக்குடி யேற முடியாத நிலை உருவாகியுள்ளது. இவ்வாறான காணிகளை அதன் பூர்வீக குடியிருப்பாளர்களிடம் மீளப் பெற்றுக்கொடுப்பதற்காக பல்வேறு போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.
அரச தலைவருக்கான தேர்தலில் பொது வேட்பாளராக போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேன, வடக்கு கிழக்கில் பாதுகாப்புத் தரப்பினரிடம் காணப்படுகின்ற காணிகளில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகக் கூறியமையால் தமிழ் மக்கள் அவருக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்தனர். புதிய அரசு ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், குறிப்பிடத்தக்க சிறியளவு காணிகளே இது வரையில் விடுவிக்கப்பட்டு மக்கள் மீளக்குடியமர்த் தப்பட்டுள்ளனர். இன்னமும் பெருமளவான காணிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழே காணப்படுகின்றன.
2012ஆம் ஆண்டிலே அப்போதைய அரசு, சட்டவிரோத தடுப்பு முகாம் மற்றும் மெனிக் பாம் முகாம் என்பவற்றை மூடிவிட்டு முல்லைத்தீவு கேப்பாப் பிலவு பிரதேசத்தை பூர் வீகமாகக் கொண்ட மக்களை சீனிமோட்டைப் பிரதேசத்தில் குடியமர்த்தியது.
கேப்பாப்பிலவு மக்களின் காணி களை விடுவிப்பதாக அரசு முன்னர் வாக்குறுதியளித்திருந்தது. எனினும் இது வரையில் அந்த வாக்குறுதியை நிறைவேற்றாமையினால் மக் கள் தமது சொந்த நிலங்களை மீளப் பெற்றுத் தருமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். மக்களது காணிகளை விடுவிப் பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-5)


## மரண அறிவித்தல்கள்

### சுப்பையா பேரம்பலம்

(ஓய்வு பெற்ற கிராம அலுவலர், வட்டக்கச்சி)



தோற்றம் 21.08.1927 மறைவு 07.02.2017

பூநகரி மட்டுவில் நாட்டைப் பிறப்பிடமாகவும், இல. 718, சிவிக்சென்றர் வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா பேரம்பலம் (07.02.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - நாகமுத்து தம்பதியரின் ஏகபுத்திரனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஏகேஸ்வரன், திருக்கேதீஸ்வரன் (அதிபர்), சாரதாம்பாள் (ஆசிரியர்), கோமளேஸ்வரி (ஆசிரியர்), கோமதி அம்பாள் (இத்தாலி), தனேஸ்வரி (அமெரிக்கா), பிரியாசக்தி (ஆசிரியர்) ஆகியோரின் அன்புத்தந்தையும் யசோதா (ஆசிரியர்), இரவிச்சந்திரன் (SPHID), வசந்தகுமார் (பூநகரி, பிரதேசசபை), புவனேந்திரன் (இத்தாலி), சதீஸ்குமார் (அமெரிக்கா), கிருபாலன் (பிரதிஅதிபர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2017) புதன்கிழமை பி.ப. 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பன்னங்கண்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 718, சிவிக்சென்றர், வட்டக்கச்சி.**

**தகவல்: குடும்பத்தினர். 077 5788 998**

### திருமதி தியடோறா கிளாடிஸ் இராசமலர் யோசேப்



கொக்குவில் மேற்கைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தியடோறா கிளாடிஸ் இராசமலர் யோசேப் 07.02.2017 செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான எட்வேட் குணரட்ணம் சுகிர்த ரட்ணம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற R.A. யோசேப் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ் சென்றவர்களான திரு.திருமதி. P.A.யோசேப் தம்பதியரின் மருமகளும் செல்வி பிறிம்றோஸ் குணரட்ணம் அவர்களின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கஆராதனை கொக்குவில் மேற்கு திருமதி கிறிஸ்ரா இராசதுரை அவர்களின் இல்லத்தில் இன்று (08.02.2017) புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு நடைபெற்று தாவடி சேமக்காலை யில் நல்லடக்கம் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

**தகவல்: திருமதி.C.T.இராசதுரை (பெறாமகள்)**

**021 205 2125**

### திருமதி பொன்னம்மா இராசையா



கேசரி வீதி தையிட்டி காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் நாமகள் வீதி கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா இராசையா நேற்று (07.02.2017) செவ்வாய்க் கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை- சேதுப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான இலட்சுமிப்பிள்ளை, சின்னம்மா மற்றும் கந்தவனம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2017) புதன்கிழமை பி.ப ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நாமகள் வீதி, கொக்குவில் கிழக்கு.**

**தகவல்: சகோதரம்,பெறாமக்கள்**

## மரண அறிவித்தல்



### கந்தையா இராசரத்தினம்

(முதலாம் குறுக்கு வீதி, இணுவில் வீதி, மானிப்பாய்)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசரத்தினம் நேற்று (07.02.2017) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி கௌரியாம்பிகை சாம்பசதாசிவக்குருக்கள்



காரைநகர், தன்னைப்பிள்ளையார் கோயிலடியை பிறப்பிடமாகவும், நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார், கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கௌரியாம்பிகை சாம்பசதாசிவக்குருக்கள் நேற்று (07.02.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சாம்பசதாசிவக்குருக்களின் பிரியபத்தினியும் காலஞ்சென்ற பாலச்சந்திரசர்மா மற்றும் சோமதேவக்குருக்கள் (பிரதம குரு, அரசகேசரிப்பிள்ளையார் கோயில்), கோபாலசர்மா (ப.நோ.கூ.சங்கம் நீர்வேலி), பவாணிஅம்மா கார்த்தியாயினி (நியூசிலாந்து), சிவபாலசர்மா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயும் மாலினி, ஜெயமதி, பவாணி, உமா காலஞ்சென்ற ஹரிஹரசர்மா மற்றும் ஜெகதீஸ்வரசர்மா ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற திருமதி ஞானாம்பிகையம்மா (சுழிபுரம்) மற்றும் விவேகானந்தசர்மா (மாவநெல்லை), சிதம்பரநாதக்குருக்கள் (கொழும்பு), கணேசக்குருக்கள் (வவுனியா), தியாகராஜக்குருக்கள் (நீர்வை மணி) காலஞ்சென்ற இரத்தினசர்மா ஆகியோரின் அன்புச்சகோதரியும் வரப்பிரதன், சிவஜெயக்குருக்கள், நிதர்சன், சிந்துகேயன், மனுப்பிரியா, சாருகேசினி, ஹம்ஷத்வனி, ரகுவரன், ஸ்ரீகரன், கிருஷ்ணவேணி, ஹரிநிவாசினி, சாம்பவி, கார்த்திக், வாசுமதி, கணேசவாணி, செந்தூரன், அஜித்காந் ஆகியோரின் பேர்த்தியும் வேதாஸ், ஹரி சாகித்தியன், ஸ்ரீஹரி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.02.2017) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி வடக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**அரசகேசரிப்பிள்ளையார் கோயில், நீர்வேலி.**

**தகவல்: குடும்பத்தினர் 077 138 2924, 021 223 0578**

**காணி விற்பனைக்கு**

மீசாலை மேற்கு, பங்களா றோட்டில் 04 பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு - 077 4722 789, 077 3258 661

**வீடு வளவு விற்பனைக்கு**

A9 வீதிக்கு அண்மையில் எல்லா வசதிகளும் கூடிய இடத்தில் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் பழைய பொலிஸ் நிலைய ஒழுங்கையில் நல்லமாடி " மாளிகை வீடு " 10 அறைகள், 2குளியலறை, வற்றாத கிணறு ஆகியவற்றுடன் விற்பனைக் குண்டு. மிகவும் பாதுகாப்பான உறுதியான குளிர்மையான வீடு. பயன்தருமரங்கள் நிறைந்தவை. International School, Hotel மற்றும் நிறுவனங்கள் நடத்தக்கூடிய நல்லராசியான வீடு. Lawyers, Doctors களுக்கு உகந்தது. இதற்கு அண்மையில் 50 பரப்பு குடியிருப்புக் காணி சுற்றிவர Carpet Road, மின்சார வசதியுடன் கூடிய காணியும் விற்பனைக்கு உண்டு. பலவிதமான தொழிற்சாலைகள், பண்ணைகள் வைப்பதற்கு உகந்தது.

077 559 6054/ 077 809 7740/ 076 378 3408/ 077 356 5345

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
08.04.1949

மறைவு
09.01.2017



கடந்த 09.01.2017 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர்

அமரர்
**நல்லமாப்பாணர் மாணிக்கவாசகர் (தேவர்)**

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் 06.02.2017 திங்கட்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலைத் தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (08.02.2017) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மருதடி அருகில்.
தாவளை இயற்றாலை. கொடிகாமம். **குடும்பத்தினர்.**

## கண்ணீர்க்காணிக்கை

**பொன்னம்பலம் அமிர்தலிங்கம்**
(அதிபர்,யா/நடேஸ்வராக்கல்லூரி-காங்கேசன்துறை)



அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப் பதோடு. அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


யா/நடேஸ்வராக்கல்லூரி,
காங்கேசன்துறை.

பிரதி அதிபர்
ஆசிரியர்கள்,மாணவர்கள்
கல்விசாரா ஊழியர்.

## துயர் பகிர்கின்றோம்

**பொன்னம்பலம் அமிர்தலிங்கம்**
(அதிபர்,யா/நடேஸ்வராக்கல்லூரி-காங்கேசன்துறை)

பிறப்பு
18 . 04 . 1958



இறப்பு
05 . 02 . 2017

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தின் வளர்ச்சியில் அதீத அக்கறை கொண்டவரும் வருகைதரு விரிவுரை யாளராகவும் கடமையாற்றிய பொ.அமிர்தலிங்கத்தின் இழப்பு எமக்கு ஆழ்ந்த துயரை ஏற்படுத்தியுள்ளது .

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**மீளாத் துயருடன்.........**

இலங்கைதிறந்த பல்கலைக்கழக
யாழ்ப்பாணப் பிராந்திய நிலையசமூகத்தினர்.

**வேலைவாய்ப்பு**

கொழும்பு, ஹொரணை பகுதியில் உள்ள பிரபல்யமான தனியார் நிறுவனத்தின் ISO 9001-2008 நற்சான்றிதழ் பெற்ற தொழிற்சாலைக்கு machine operators/ அனுபவமுள்ள மற்றும் பழக விரும்பும் வேலையாள்கள் தேவை. தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும். மாத சராசரி சம்பளம் - 17500+ ஊக்குவிப்பு பணம் (Allowance)

**நேர்முகத்தேர்வு**

இடம் - யாழ்ப்பாணம் நகர்
காலம் - 08.02.2017
வயதெல்லை - 18 - 35
நேரம் - முற்பகல் 10 மணி முதல் ஒரு மணிவரை
மேலதிக தொடர்புகளுக்கு - 072 226 6232










### முல்லைத்தீவு...

அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற அரச நாடாளு மன்றக் குழுக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கே அரச தலைவர் மேற்கண்ட வாறு பதிலளித்தாக அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, சுதந்திர தினத் தன்று கேப்பாபிலவுப் பிரதேசத்துக்கு நான் சென்றேன். அங்கு ஆண்கள், பெண்கள், குழந் தைகள் எனப் பலரும் கேப்பாபிலவு வான் படை முகாமுக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட் டிருந்தனர். தமக்குரித்தான காணிகளைக் கையளிப்பதாக படையினர் பல தடவைகள் உறுதிமொழிகள் வழங்கியும் இன்னும் அது நடைபெறவில்லை என்று அவர்கள் தெரிவித் தனர்.

மக்களின் 500 ஏக்கர் காணிகளை படையினர் கையகப்படுத்தியுள்ளதாக அவர்கள் கூறுகின்ற போதும் படையினரும், அதிகாரிகளும் வேறு விதமான புள்ளி விவரங்களைத் தெரி விக்கின் றனர். இந்தப் பிரச்சினைக்கு முடிவு காணும் வகையில் சுதந்திரமான ஆணைக் குழு வொன்றை அமைத்து அதனைத் தீர விசாரித்து நியாயமான தீர்வை மேற்கொள்ள வேண்டியது அரசின் கடமையாகும்.

2012 ஆம் ஆண்டில் வன பரிபாலனத் திணைக் களம் வர்த்த மானி அறிவித்தலின் மூலம் மக் களின் காணிகளைச் சுவீ கரித்ததாக இவர்கள் தெரிவிக்கின்றனர். 2012 ஆம் ஆண்டு வன பரிபாலனத் திணைக்களத்தினால் மேற்கொள் ளப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பிலும் ஒரு நடுநிலையான விசாரணையை மேற் கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் – என்றார்.

தான் இவ்வாறு தெரிவித்ததைத் தொடர்ந்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எழுத்து மூலம் இந்த மக்களின் பிரச்சினையை தனக்கு அறிக்கையிடுமாறும் நடவடிக்கை எடுப்பதாக வும் தெரிவித்தாக ரிசாத் குறிப்பிட்டார். (வ-5)

### மக்கள்...

காணி விடுவிப்புப் போராட்டத்துக்குப் முழு ஆத ரவை வழங்கும் பொருட்டு போராட்டங்கள் இடம்பெறும் புதுக்குடி யிருப்பு மற்றும் பிலக் குடியிருப்பு ஆகிய இடங்களுக்கு யாழ்ப் பாணப் பல்கலைக் கழக சமூகத்தினர் நேற்று சென்றிருந்த னர். அங்கு வைத்து இந்தக்கோரிக்கையை அவர்கள் முன்வைத் தனர்.

யாழ்ப்பாணப் பல் கலைக்கழக அனைத் துப் பீட மாணவர் ஒன் றியம் மற்றும் மாண வர்கள், யாழ்ப் பாணப் பல்கலைக்கழக ஆசிரிய சங்கத்தினர், யாழ்ப்பாணப் பல் கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் அனைவரும் இந்தப் போராட்டத்துக்கு முழு ஆதரவை வழங்கி யதாக அனைத்துப் பீட மாணவர் ஒன்றியத் தலைவர் அனுஜன் தெரிவித்தார்.

இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட் டுள்ள நிலங்கள் அனைத்தும் விடுவிக் கப்பட வேண்டும். கேப் பாபிலவு மக்களின் சொந்தநிலங்களை மீட்பதற்கான போராட்டம் நியாயமா னது என்று தெரிவிக் கும் மனு ஒன்றையும் மாணவர் ஒன்றியத்தி னர் அங்கு வாசித்த னர்.

(வ-4)

**நயினையில் தைப்பூஷ விழா**





**ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபியில் அடியார்களுக்கு சிறப்பு அன்னதானம்**

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நாளை (09.02.2017) வியாழக்கிழமை தைப்பூஷ விழா மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது. விசேட அபிஷேகங்களை தொடர்ந்து அம்பாள் திருமஞ்சத்தில் வீதியுலா வந்து அன்பர்களுக்கு அருள்பாலிப்பாள். அன்றைய தினம் நயினாதீவுக்கு வரும் அனைத்து மெய்யடியார்கள் அனைவருக்கும் பிரதான சாலையில் அமைந்துள்ள நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையில் வழமைபோல் சிறப்பு அன்னதான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

நயினாதீவு - 02 அமுதசுரபி நிர்வாகம்.

## சைட்டம்...

உயர் கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல.

நாடாளுமன்றத்தில் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மருத்துவர் சங்கத்தைக் கருத்தில் கொள்ளாது செயற்படும் சைட்டம் நிறுவனத்துக்கு எதிராக மாணவர்களுக்குப் போராடுவதற்கு உரிமையில்லையா? அரச மருத்துவ சேவை சங்கத்தினர், தொழிற் சங்கங்கள், சிவில் அமைப்புக்கள், மாணவர் அமைப்புக்கள், பெற்றோர்கள் என்று பலரும் இந்த சைட்டத்துக்கு எதிராகக் குரல் கொடுப்பதை அரசினால் ஏன் செவிமடுக்க முடியாதுள்ளது? அதற்கான காரணம் தான் என்ன?, சைட்டத்துக்கு எதிராகப் போராடிய மாணவர்கள் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களை விடுவிக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா? என்று தினேஸ் குணவர்த்தன கேள்வி எழுப்பினார்.
இதற்குப் பதிலளித்த அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, சைட்டம் தொடர்பில் நாம் பல தடவைகள் பதிலளித்து விட்டோம். இதனை ஆரம்பித்ததே மகிந்ததான். சைட்டம் வைத்திய சாலையை ஆரம்பிப்பதற்காக அதன் தலைவர் நெவில் பெர்ணான்டோவுக்கு 600 மில்லியனையும் இவர் தான் வழங்கி வைத்தார். இப்படியிருக்கும்போது தற்போது இதற்கு எதிராக குரல் கொடுப்பது சிறுபிள்ளைத் தனமானது.
உயர்நீதிமன்றினால் தீர்ப்பொன்று வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அதனை மாற்றியமைக்க நாடாளுமன்றுக்கு எந்தவொரு அதிகாரமும் கிடையாது. இங்கு வந்து கூச்சலிடுவதால் அந்தத் தீர்ப்பை மாற்றியமைக்கவும் முடியாது.
மாணவர்கள் இதற்கெதிராக போராடும் முன்னரே நீதிமன்றினால், போராட்டத்தின் ஈடுபட வேண்டாம் என்று கட்டளைப் பிறப்பிக்கப்பட்டது. அதனையும் மீறி போராட்டத்தில் ஈடுபட்டோர் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளார்கள். இந்த விவகாரத்தை போராட்டங்கள் மூலம் எதிர்கொள்ளாது, உயர்நீதிமன்றத் தீர்ப்பினை எதிர்த்து மேன் முறையீடு செய்ய முடியும் - என்றார்.
இதன்போது ஒழுங்குப் பிரச்சினையை மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல எழுப்பினார். சைட்டம் வைத்திய சாலையை ஆரம்பிப்பதற்காக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவினால் 600 மில்லியன் வழங்கப்பட்டதாக அமைச்சர் கூறிய கருத்துக்கு நாம் முற்றாக எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கிறோம். அந்தப் பணம் மக்கள் வங்கியிடமிருந்தே பெற்றுக் கொள்ளப்பட்டது - என்றார். (த-5)

## சீன...

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
முன்னர் இலங்கை முதலீட்டாளர்களைச் சீனாவுக்கு அனுப்பியது. ஆனால் இப்போது சீன முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வர விரும்புகின்றனர். சீனா முன்னர் முதலீட்டாளர்களுக்குச் சலுகைகளை வழங்கித் தனது நாட்டுக்கு அழைத்திருந்தது. அதன் மூலம் சீனா துரித வளர்ச்சியை அடைந்தது.
வெளிநாட்டு முதலீடுகளின் மூலமே இந்தியா, வியட்னாம் போன்ற நாடுகளும் அபிவிருத்தியடைந்துள்ளன.
இலங்கையில் சில வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்களுக்கு எதிரணியினர் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். அத்தகைய திட்டங்கள், இலங்கையின் இளையோருக்குத் தொழில் வாய்ப்புகளை வழங்கும்.
அரசியல் உறுதிப்பாடு இருப்பதால் முதலீட்டாளர்கள் இங்கு வர விரும்புகின்றனர்.
மேலும் வெளிநாட்டு முதலீடுகளைப் பெறும் அரசின் திட்டங்களுக்கு இலங்கையர்கள் ஆதரவளிக்கவேண்டும் - என்றார். (த-5)

## ஜெனிவா...

றொரு தீர்மானம் ஜெனிவாவில் கொண்டுவரப்பட இருப்பதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அதனைப் பிற்போடச்செய்வதற்கான முயற்சியில் அயலுறவுத் துறை அமைச்சு ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. இவை முற்றிலும் பொய்யான தகவல்களாகும். இலங்கைக்கு எதிராக எந்தத் தீர்மானமும் கொண்டுவர பன்னாட்டுச் சமூகம் முயற்சிக்கவில்லை. மார்ச் மாத அமர்வில் இலங்கைக்குப் பாதகமான எந்த விடயமும் இடம்பெறாது. அதனை உறுதியாகக் கூற முடியும்.
அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வில் பங்கேற்று, அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பான முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றுவார். ஜெனிவாத் தீர்மானத்தில் அதிகமானவற்றை இலங்கை நிறைவேற்றியுள்ளது. நல்லிணக்கத்தை ஏற்படுத்த இதய சுத்தியுடன் நாம் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்குப் பன்னாட்டுச் சமூகம் முழு ஆதரவை வழங்கி வருகிறது.
நாம் மேற்கொண்டு வரும் இந்த நடவடிக்கைகள் காரணமாக பன்னாட்டு மட்டத்தில் நற்பெயர் கிடைத்துள்ளது. இவ்வாறானதொரு நிலையில் இலங்கைக்கு எதிராக வேறு பிரேரணைகள் கொண்டு வரப்படுமென நம்பமுடியாது - என்றார். (த-5)

## சைட்டம் அதிகாரி...

போகின்றேன் என்று தனக்கு மர்ம நபர் அலைபேசியூடாகக் கொலை அச்சுறுத்தல் விடுத்தார். அதற்கு, எமனைப் பார்க்க எனக்கும் ஆசையாக உள்ளது என்று பதிலளித்தேன்.
இவ்வாறு துப்பாக்கிச் சூட்டில் உயிர் தப்பிய மாலபே (சைட்டம்) தனியார் பல்கலைக்கழகத் தலைமை நிறைவேற்று அதிகாரி மருத்துவர் சமீர சேனாரத்ன தெரிவித்தார்.
சைட்டம் நிறுவனத்தில் இருந்து சமீர சேனாரத்ன நேற்றுமுன்தினமிரவு வீடு திரும்பும்போது, கல்லூரியில் இருந்து சுமார் 750 மீற்றர் தூரத்தில் உள்ள சந்திரிகா குமாரதுங்க மாவத்தைக்கு அருகில் வைத்து அவரது கார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இரண்டு நபர்கள் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டிருந்தனர் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.
இந்தச் சம்பவம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
சைட்டம் நிறுவனத்தில் இருந்து விலகுமாறும் இல்லாவிட்டால் கொலை செய்யப்படுவேன் என்றும் எனக்குத் தொடர்ந்து அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. வழக்குத் தீர்ப்பின் பின்னர் எனக்கு எதிரான அச்சுறுத்தல் மேலும் அதிகரிக்கப்பட்டது.
கொலை அச்சுறுத்தல் விடுத்த அலைபேசி இலக்கத்தைப் பொலிஸாருக்கு வழங்கியுள்ளேன். பல்கலையில் இருந்து வீடு திரும்பும்போது, முகத்தை முழுமையாக மூடும் வகையிலான தலைக்கவசம் அணிந்து மோட்டார் சைக்கிளில் சென்ற 2 பேரே துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றனர்.
எனக்கு காயம் ஏற்படவில்லை. துப்பாக்கிச் சூடு காரணமாக எனது காருக்குச் சிறிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன-என்றார்.
சம்பவத்தில் அதிர்ச்சியடைந்த அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-4)

## சுமந்திரன்...

தொடர்பில் அரசு விளக்கமளிக்க வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் நாடாளுமன்றில் நேற்று வலியுறுத்தினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் முப்படைகள் நிலை நிறுத்தப்பட்டுள்ளன. பொலிஸ் கண்காணிப்பும் இடம்பெற்று வருகின்றது. இராணுவத் துணைப் படைகளும் இருக்கின்றன. புலனாய்வாளர்களும் பின்தொடர்கின்றனர். இவ்வாறானதொரு பின்புலத்தில் எவ்வாறு கிளைமோர் கொண்டு வரப்பட்டது? சுமந்திரன் எதற்காக இலக்கு வைக்கப்பட்டார்? இவை பற்றி அரசு விளக்கமளிக்க வேண்டும்.
இந்த விடயத்தை மையப்படுத்திப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தவும், இராணுவப் பிரசன்னத்தை நியாயப்படுத்துவதற்கும் உரிய நாடகத்தை அரங்கேற்றப் பார்க்கின்றனரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.
ஜெனிவா மாநாடும் நடைபெறவுள்ளது. வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாததால் இந்த மாநாட்டின்போது இலங்கை அரசுக்கு அழுத்தங்கள் வரும். தலைமை அமைச்சர் ரணிலைச் சந்தித்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இதற்குரிய முன்னெச்சரிக்கையை விடுத்திருந்தார்.
மாநாட்டின்போது வரும் அழுத்தங்களைக் குறைத்து விடுதலைப் புலிகள் மீண்டும் வந்துவிட்டனர் அவர்களிடம் ஆயுதம் இருக்கின்றது எனக் கூறி ஜெனிவா மாநாட்டைத் திசை திருப்புவதற்கான நடவடிக்கையாக இது இருக்குமா என்ற சந்தேகமும் எழுகின்றது.
மகிந்த ஆட்சியின்போது எனது வாகனம் மீது அநுராதபுரத்தில் வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதன் பின்னர் பல இடங்களில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. கோத்தபாயவின் குழுவினரே இதைச் செய்திருந்தனர். இந்த கிளைமோர் நாடகத்தைப் புலனாய்வாளர்கள் அரங்கேற்றிருப்பார்களா என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் மோதலை ஏற்படுத்திவிட்டு அதன் கட்டமைப்பைச் சிதைப்பதற்குரிய முயற்சியாகவும் இது இருக்கலாம். எனவே, உண்மைகள் வெளிக் கொணரப்பட வேண்டும் - என்றார். (வ-5)

## வடக்கிலிருந்து...

நடத்தினர். மக்களின் கோரிக்கை தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கேப்பாபிலவில் நாம் ஏற்கனவே பல காணிகளை மக்களிடம் ஒப்படைத்து விட்டோம். இராணுவத்தின் தேவைக்கு உரிய காணிகள் மட்டுமே தற்போது உள்ளன. அவற்றை எவ்வாறு விடுவிக்க முடியும். இவ்வாறான போராட்டங்களுக்கு அஞ்சி நாம் காணிகளை ஒப்படைக்க முடியாது.
அங்கு வழங்கக் கூடிய காணிகள் இருந்தால் அவற்றை வழங்குவோம். இது தொடர்பில் அரசு ஆராய்ந்து வருகின்றது. இங்கு மக்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்துவரும் போராட்டத்தின் பின்புலத்தில் அரசியலே உள்ளது. தேசிய பாதுகாப்புக் கருதியே வடக்கில் இராணுவம் உள்ளது. இராணுவத்தை வெளியேற்றுவதற்கான சதித்திட்டத்தை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.
வடக்கில் இருந்து இராணுவத்தை எவ்வாறு அகற்றுவது. அப்போது தெற்கில் இருந்தும் இராணுவத்தை அகற்றுமாறு மக்கள் கோரிக்கை விடுப்பார்களே. அவர்களுக்கு என்ன பதில் கூறுவது. கேப்பாபிலவு மக்களுக்கு வழங்கக் கூடிய காணிகள் இருக்குமாயின் அதனை ஆராய்ந்து நாம் கையளிப்போம் - என்றார். (வ-5)

## 759 இடங்கள்...

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்விச் சுற்றின் போது மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக் கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
தொல்பொருளியல் பெறுமதிமிக்க இடங்கள் பல வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இனங்காணப்பட்டுள்ளன.
வடக்கில் கிளிநொச்சி மாவட்டத்தில் 14 இடங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 136 இடங்களும், யாழ்ப்பாணத்தில் 48 இடங்களும், வவுனியாவில் 50 இடங்களும், மன்னாரில் 60 இடங்களும் இனங்காணப்பட்டுள்ளன.
கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் 423 இடங்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 3 இடங்களும், திருகோணமலை மாவட்டத்தில் 25 இடங்களும் உள்ளடங்கலாக மொத்தம் 759 இடங்கள் இனங் காணப்பட்டுள்ளன.
திருகோணமலை மாவட்டத்தில் மேலும் தொல்பொருள் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதுடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலதிக ஆய்வுகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன.
குறித்த இடங்களில் தொல்பொருள் திணைக்களத்தால் 23 இடங்கள் மாத்திரமே பாதுகாக்கப்படுகின்றன. எதிர்காலத்தில் ஏனைய இடங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு சிறப்பு நிதி ஒதுக்கீடும் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது, 3 மில்லியன் ரூபா மாத்திரமே தொல்பொருள் வேலைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது- என்றார். (வ-5)

## ராணுவ...

குடியிருப்புப் பிரதேச செயலகத்துக்கு முன்னால் தகரக் கொட்டகை அமைத்து போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இராணுவம் பிடித்து வைத்துள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி புதுக்குடியிருப்பில் மக்கள் நடத்தும் போராட்டம் ஐந்தாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.
புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்தின் அருகே உள்ள பொதுமக்களின் 19 ஏக்கர் காணிகளை இராணுவம் கையகப்படுத்தி வைத்துள்ளது. இந்தக் காணிகளின் உரிமையாளர்கள் கடந்த ஐந்து நாள்களாகத் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.
போரட்டதில் ஈடுபட்டுள்ள காணி உரிமையாளர்களை நேற்று வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் ப.டெனீஸ்வரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் நேரில் சென்று சந்தித்துத் தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.
போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்ததாவது:
மக்கள் அதிகமாக வந்து செல்லும் பிரதேச செயலகத்துக்கு முன்னால் இந்தப் படை முகாம் அமைந்துள்ளதை யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாது. எங்கள் காணிகளைப் பெற்றுக்கொள்ளவதற்காக இன்று ஐந்தாவது நாளாகப் போராடுகின்றோம். புதுக்குடியிருப்புமக்கள் அனைவரும் இந்தப்படை முகாமை அகற்றுவதற்கு எங்களுடன் இணைந்து போராடவேண்டும்-என்றனர். (த-7)

## அரசிடம்...

அரசிடம் இருந்து சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இதனால் அவர்களது போராட்டம் 8ஆவது நாளைக் கடந்தும் தொடர்கிறது.
விமானப்படை முகாம் அமைந்துள்ள பகுதியில் இருக்கும் பொதுமக்களின் 42 ஏக்கர் காணிகளை விடுவிப்பது தொடர்பில் எந்த விதமான நடவடிக்கைகளும் இல்லாமையால் தாம் போராட்டத்தைத் தொடர்வதாக அந்த மக்கள் கூறினர்.
இன்றுடன் எட்டு நாள்கள் ஆகிவிட்டது. இன்று நாங்கள் மனவிரக்தி அடைந்துள்ளோம். தொடர்ந்தும் இதே நிலை நீடித்தால் நாம் தவறான முடிவெடுப்பதற்கு இந்த அரசே காரணம் என அந்த மக்கள் மேலும் கூறினர்.
போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பொதுமக்களை நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழ மாணவர்கள் சென்று சந்தித்து ஆதரவைத் தெரிவித்தனர். வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் ப. டெனீஸ்வரனும் மக்களுடன் கலந்துரையாடினார்.
அத்துடன் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை நேற்று மாலை 5 மணியளவில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கப் பிரதிநிதிகள் சந்தித்து பிரச்சினைகளைக் கேட்டறிந்தனர்.
பெற்றோர் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதால் பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களுக்கு நேற்றும் முல்லை வலய பாடசாலை ஆசிரியர்களால் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. (த-7)

## 10 இந்திய...

படகுகளில் புறப்பட்டுள்ளனர். நெடுந்தீவுக்கு அண்மையில் இரு படகு மீனவர்களும் இணைந்து ஒரே வலையைப் போட்டு தொழிலில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது கடற்படையினர் கைது செய்தனர். கடற்படையினர் கைது செய்தபோது ஒரு படகு தப்பிச் சென்றபோதும் மற்றைய படகும் 10 மீனவர்களும் கைது செய்யப்பட்டனர்.
கைது செய்யப்பட்ட தமிழ்நாட்டு மீனவர்கள் காங்கேசன்துறை துறைமுகத்திற்குக் கொண்டுவரப்பட்டு அங்கு மலேரியா தொற்று தொடர்பில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் 10 மீனவர்களும் யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். இவர்களை எதிர்வரும் 21 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-5-101-106)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உங்கள் செயல்களில் திறமை வெளிப்படும். நண்பர்களின் மத்தியில் செல்வாக்கு உயரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். வருமானம் அதிகரிக்கும்.

**இடபம்:** சூழ்நிலை உணர்ந்து செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ற முன்னேற்றம் உண்டாகும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மிதுனம்:** நேர்மையுடன் செயற்பட்டு வருவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். குடும்பத்துடன் சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.

**கடகம்:** நிதானத்துடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடும். உறவினர் வகையில் திடீர் செலவு ஏற்படலாம்.

**சிங்கம்:** குடும்பத்தினர் பாச பந்தத்துடன் நடப்பர். தடைகளைத் தகர்த்தெறிந்து முன்னேறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் புதிய சாதனை உருவாகும். வருமானம் பன்மடங்கு அதிகரிக்கும்.

**கன்னி:** பேச்சிலும் செயலிலும் மதிநுட்பம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத் தொடர்பு பலம் பெறும். வருமானம் பன்மடங்கு உயரும். பெண்கள் வெகுநாள் வாங்க நினைத்த பொருள் வாங்குவீர்கள்.

**துலாம்:** பொதுநலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெற்று மகிழ்வர். ஒவ்வாத உணவுகளைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** நிதானத்துடன் பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க, வாங்கக் கூடாது.

**தனுசு:** பெற்றோரின் ஆலோசனை நல்வழி காட்டும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவில் பணவரவு கிடைக்கும். பெண்கள் இஷ்டதெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**மகரம்:** குடும்பத்தினரின் அன்பைக் கண்டு நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். பெண்கள் வீட்டு உபயோக பொருள் வாங்குவர். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர்.

**கும்பம்:** பேச்சு, செயலில் தடுமாற்றம் ஏற்படலாம். நண்பரின் ஆலோசனை நம்பிக்கை அளிக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். திடீர் பயணம் மேற்கொள்ள நேரிடலாம்.

**மீனம்:** மற்றவர் நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். புத்திரரைக் கண்டிப்பதில் இதமான அணுகுமுறை தேவை. பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.



# காதலர் தினத்தில் தனுஷின் இசை விருந்து

'கொடி' படத்தைத் தொடர்ந்து தனுஷ் நடிப்பில் 3 படங்கள் வெளியீட்டுக்குத் தயாராகி வருகின்றன. இதனிடையில் எதிர் வரும் 14 ஆம் திகதி தான் பாடிய பாடலை தன் வொண்டர்பார் ஸ்ரூடியோஸ் மூலம் வெளியிடவுள்ளார். பிரபல நடிகையும் நடன ஆசிரியையுமான காயத்திரி ரகுராம் 'யாதுமாகி நின்றாய்' என்ற படத்தை இயக்கியுள்ளார். இதில் வசந்த் என்பவர் நாயகனாக நடிக்க, காயத்திரி நாயகியாக நடித்துள்ளார்.
அச்சு ராஜமணி இசையமைத்துள்ள இந்தப் படத்தில் தனுஷ் ஒரு பாடலைப் பாடியுள்ளார். இந்த நிலையில் இதன் ஓடியோ உரிமையைக் கைப்பற்றியுள்ள தனுஷ் இந்தப் படத்தின் பாடல்களை காதலர் தினத்தில் வெளியிடவிருக்கிறாராம். இதனை தன் வொண்டர்பார் ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்திருக்கிறார்.

இந்த போராட்டத்துக்கு பிறகு பெப்சி, கோக் குடிக்கிறவனை தமிழ் நாட்டில இப்படித் தான் பார்க்குறானுங்க...



அட வெக்கங்கெட்டவங்களா இதுக்கு தெருவில போற நாலுபேரு...





யோன் மாமா நான் உன் சின்னப் பொண்ண காதல் பண்றேன். அவளைத் தான் கல்யாணம் பண்ணிப்பேன். உன் மூஞ்சிக்கு நேராவே சொல்லிட்டேன் முடிஞ்சத பார்த்துக்கோ...!

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 3 | | 5 | | | |
| | 5 | 2 | | 7 | | 4 | 3 | |
| 7 | | | | | | | | 1 |
| | | 6 | 4 | | 7 | 9 | | |
| | | | 9 | | 3 | | | |
| | | 4 | 8 | | 1 | 7 | | |
| 4 | | | | | | | | 2 |
| | 8 | 3 | | 1 | | 6 | 9 | |
| | | | 5 | | 8 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 4 | 1 | 3 | 9 | 8 | 5 | 2 |
| 5 | 9 | 8 | 7 | 6 | 2 | 3 | 1 | 4 |
| 1 | 3 | 2 | 8 | 5 | 4 | 9 | 6 | 7 |
| 3 | 2 | 5 | 6 | 4 | 8 | 1 | 7 | 9 |
| 8 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 | 4 | 3 |
| 7 | 4 | 9 | 5 | 1 | 3 | 6 | 2 | 8 |
| 9 | 5 | 3 | 4 | 7 | 6 | 2 | 8 | 1 |
| 4 | 8 | 6 | 3 | 2 | 1 | 7 | 9 | 5 |
| 2 | 1 | 7 | 9 | 8 | 5 | 4 | 3 | 6 |





சுடோக்கு

ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப் பானிய நிறு வனமான நிகோலி இதனை அறி முகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக் கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.

## தரணிதீபம் வி.க. நேர்செற் வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 8
வவுனியா பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் தரணி தீபம் அணி வெற்றிபெற்றது.
யுனிபைட்டின் கரப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், தரணி தீபம் அணியை எதிர்த்து சுப்பர் ஸ்ரார் அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் இரு செற்களையும் முறையே, 25:22, 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி நேர் செற்றில் வெற்றிபெற்றது தரணி தீபம் அணி. (ம-23)

## அல்ஹிஜிரா வி.க. இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், பெப். 8
எவ்.ஏ. கிண்ணத் தொடரில் அல்ஹிஜிரா அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி இறுதிக்குத் தகுதி பெற்றது.
இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தேசிய ரீதியில் எவ்.ஏ. கிண்ணத் தொடரை நடத்தி வருகிறது. வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் சிறுவர் பூங்கா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில், யங்ஸ்ரார் அணியை எதிர்த்து அல்ஹிஜிரா அணி மோதியது. இதில் அல்ஹிஜிரா அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



## மன்னார் பிரதேச துடுப்பாட்டம் சித்திவிநாயகர் சம்பியனானது

யாழ்ப்பாணம், பெப். 8
மன்னார் பிரதேச செயலகத்தில் பதிவுசெய்துள்ள விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில், ஆண்கள் பிரிவில் சித்தி விநாயகர் அணி சம்பியனானது.
மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மன்னார் சித்திவிநாயகர் அணியை எதிர்த்து தாழ்வுப்பாடு சென். அன்ரனிஸ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய சித்திவிநாயகர் அணி 7 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஆறு இலக்குகளை இழந்து 64 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அனேஸ் 26 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஜெறோன், பிறின்ஸ் இருவரும் தலா 3 இலக்குகளை வீழத்தினர்.
65 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு, பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தாழ்வுப்பாடு சென். அன்ரனிஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 7 பந்துப் பரிமாற் றங்கள் நிறைவில் 6 இலக்கை இழந்து 50 ஓட்டங்களை மட்டும் பெற்றது.
14 ஓட்டங்களால் வெற்றிபெற்றுச் சம்பியனானது சித்திவிநாயகர் அணி. (ம-23)

## இன்றைய மோதல்

யாழ்ப்பாணம், பெப். 8
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல் இக்பால் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து வடதாரகை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)



## சென். தோமஸ் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், பெப். 8
பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பெண்களுக்கான துடுப்பாட்டத்தில் பருத்தித்துறை சென். தோமஸ் அணி சம்பியனானது.
திக்கம்முனை மைதானத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை சென். தோமஸ் அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை ஐக்கிய அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சிந்துஜா 18 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் விஜிதா, நிதர்சினி, ரோசனா ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை சென். தோமஸ் அணி 3.1 பந்துப் பரிமாற்றங்களில் ஓர் இலக்கை மாத்திரம் இழந்து இலக்கை அடைந்து சம்பியனானது. அதிகபட்சமாக நிதர்சினி 29 ஓட்டங்களைப் பெற்றார். (ம-422)

## இனிவரும் தொடர்களிலும் அஸ்வின் சாதிப்பார்

### சச்சின் நம்பிக்கை




பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்திலும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்திலும் அஸ்வின் சிறப்பாகச் செயற்படுவார் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினார் சச்சின்.
அஸ்வினின் பந்துவீச்சு அனைவரையும் மெய் சிலிர்க்க வைக்கிறது.
அவரது பந்துவீச்சு மிகுந்த மேம்பாடு அடைந்து காணப்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளாக அவர் மிகவும் நேர்த்தியாக பந்து வீசி வருகிறார். அவர் முழுமையான பந்துவீச்சாளராக ஜொலிக்கிறார். ஆட்டத்தை எப்படி தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும் என்பதை நன்கு அறிந்து வைத்திருக்கிறார்.
இந்திய அணி சகலதுறைகளிலும் பலம்பெற்றுள்ளது. இதேநிலை தொடர்ந்தால் வெளிநாட்டு ஆடுகளங்களிலும் வெற்றியைக் குவிக்கலாம் என்று சச்சின் மேலும் தெரிவித்தார். (ம)

## சாகிராவை வீழ்த்தியது யாழ். மத்தி

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 19 வயதுப் பிரிவினருக்கான தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டமொன்றில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.
யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில், யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கண்டி அக்குறன சாகிராக் கல்லூரி மோதியது.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி களத் தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சாகிராக் கல்லூரி 121 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக மொகமட் 37 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் துசாந்தன், இயலரசன், தசோபன் மூவரும் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர். பதிலுக்கு களமிறங்கிய மத்தி. 261 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக தசோபன் ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களையும், பிரியலக்சன் 43 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அகமட், சகீர் இருவரும் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர்.
இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 140 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நெருக்கடியில் களமிறங்கிய சாகிராக் கல்லூரி அணி 110 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. இதனையடுத்து இன்னிங்ஸாலும் 30 ஓட்டங்களாலும் வெற்றிபெற்றது யாழ். மத்திய கல்லூரி அணி. (ம-23)



## மருதநிலா வென்றது

யாழ்ப்பாணம், பெப். 8
யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மருதநிலா அணி வெற்றிபெற்றது.
சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காகவே இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது.
யங்ஸ்ராரின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில், மருதநிலா 'ஏ' அணியை எதிர்த்து கோல்டன் பிரதர்ஸ் அணி மோதியது. இதில் மருதநிலா 'ஏ' அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## பிற்போடப்பட்டது


யாழ்ப்பாணம், பெப். 8
மானிப்பாய் சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று நடைபெறுவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டது என்று வித்தியாலயத்தின் அதிபர் அறிவித்தார். (ம)

## இம்ரூல் கைய்ஸ் திடீர் விலகல்

பங்களாதேஷ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான இம்ரூல் கைய்ஸ், காயம் காரணமாக இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் இருந்து விலகினார்.
இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி, நாளை அந்த அணிக்கு எதிரான டெஸ்ட் ஆட்டதத்தில் களமிறங்குகிறது. இந்த ஆட்டத்துக்கான பயிற்சியில் ஈடுபட்ட போது தொடைப் பகுதியில் காயமடைந்தார் இம்ரூல் கைய்ஸ். இதனால் அவர், நாளை நடைபெறவுள்ள டெஸ்ட் ஆட்டத்தில் இருந்து விலகினார். பங்களாதேஷ் அணியால் ஆரம்ப வீரராகக் களமிறங்கவுள்ளவர் என்று பிறிதொருவர் அடையாளப்படுத்தப்படாவிடினும், சர்கார் ஆரம்ப வீரராகக் களமிறங்க அதிக வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது. (ம)


கைய்ஸ்


சர்கார்



# ஐ.பி.எல். தொடரின் விலை நிர்ணயங்கள்


10 ஆவது ஐ.பி.எல். தொடருக்கான ஏலம் பெங்களூரில் எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், குறித்த ஏலத்தில் விடப்படவுள்ள வீரர்களின் அடிப்படை விலைகள் நிர்ணம் செய்யும் பணிகள் ஆரம்பித்தன. இந்திய அணியின் வேகப் பந்து வீச்சாளர் இசாந் சர்மா உள்ளிட்ட 7 வீரர்களின் அடிப்படை விலையாக 2 கோடி ரூபா நிர்ணயம் செய்யப்பட்டது. இங்கிலாந்து வீரர்கள் பென் ஸ்ரோக்ஸ், கிறிஸ் வோக்ஸ், இயன் மோர்கன், இலங்கை அணியின் தலைவர் மத்தியூஸ், ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர்கள் மிட்செல் ஜோன்சன், கம்மின்ஸ் ஆகியோர் 2 கோடி ரூபா அடிப்படை விலை நிர்ணயிக்கப்பட்ட ஏனைய ஆறுபேராக உள்ளனர்.
இதற்கு அடுத்தபடியாக பரிஸ்ரௌவ், போல்ட், ஹடின், லையன், அப்பொட், கோல்டர் ஆகியோரின் அடிப்படை விலையாக 1 கோடியே 20 லட்சம் ரூபா நிர்ணயம் செய்யப்பட்டது.
பன்னாட்டு போட்டியில் விளையாடிய 24 இந்திய வீரர்களின் அடிப்படை விலையாக ரூ.30 லட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. (ம)

## நாளை டெஸ்ட்

இந்தியா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் ஆட்டம் ஹைதராபாத்தில் நாளை நடைபெறவுள்ளது. இந்திய அணி விவரம் - கோக்லி (தலைவர்), அஸ்வின், ஜடேயா, மிஸ்ரா, நாயர், புஜாரா, ராகுல், இசாந் சர்மா, ஜாதவ், புவனேஸ்வர் குமார், முகுந்த், பாண்டியா, ரகானே, சகா, முரளி விஜய், யாதவ். பங்களாதேஷ் அணி விவரம் - ரகிம் (தலைவர்), லித்தன் டாஸ், மெகடி ஹசன், மொஸ்டாக் கொசைன், சபியுல் இஸ்லாம், சர்கர், தயுல் இஸ்லாம், தஸ்கின் அகமட், கமருல் இஸ்லாம், மொகமதுல்லா, கக்கியூ, சபீர் ரகுமான், சகிப் அல் ஹசன், றோய், தமீம் இக்பால். ஆட்டம் இந்தியாவில் நடைபெறுவதால் இந்திய அணியின் ஆதிக்கம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் கூட பங்களாதேஷ் அணியின் தலைவர் ரகிம் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தும் நம்பிக்கையை வெளியிட்டார். (ம)


## புதிய தலைவரை தேடுகிறது இங்கி.

இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவரான அலிஸ்டர் குக், தலைமைப் பதவியில் இருந்து விலகியதை அடுத்து, புதிய தலைவரைத் தேடும் பணியில் இங்கிலாந்து கிரிக்கெட் ஈடுபட்டு வருகிறது என்று அதன் தலைவர் ஸ்ரோர்ஸ் தெரிவித்தார்.
கடந்த 2012ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் டெஸ்ட் அணியின் தலைமைப் பதவியை குக் ஏற்றார். 2013ஆம் ஆண்டு மற்றும் 2015 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான ஆசஸ் தொடரை இவரது தலைமையில் இங்கிலாந்து வென்றது. சமீபத்தில் நடந்து முடிந்த டெஸ்ட் தொடரை 4:0 என்று இந்தியா வென்றதை அடுத்து, குக் தலைமைத்துவத்தில் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இங்கிலாந்து கிரிக்கெட்டின் உயர் மட்டங்களுடன் கலந்தாலோசித்து தனது முடிவை அறிவித்தார். எனினும் ஒரு வீரராக அணியில் தொடரும் நம்பிக்கையை குக் வெளிப்படுத்தினார். குக்கின் தலைமைத்துவத்துக்கு இங்கிலாந்து கிரிக்கெட் சபை தனது பாராட்டைத் தெரிவித்தது. புதிய தலைவரைத் தேடும் பணி முறைப்படி ஆரம்பிக்கப்பட்டது.
ரூட், றோய், பரிஸ்ரௌவ் போன்ற வீரர் களுக்கு வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது. எனினும் ரூட் அடுத்த தலைவராவார் என்று பொதுவான கருத்துக் கணிப்புக்கள் உள்ளன. (ம)



## இல்ல மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், பெப். 8
யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் இல்லமெய்வன்மைப் போட்டி கல்லூரியின் மைதானத்தில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.



கல்லூரி அதிபர் எல். மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் தலைமைக் கணக்காளர் வேலாயுதம் வேல்நிதி கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச கல்வி அலுவலர் எவ்.எக்ஸ்.அன்ரன், கிருபா லேணர்ஸின் முகாமையாளர் ஏ.கிருபாகரன், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளரான புவனேஸ்வரி வேல்நிதி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம)

## பலம்மிக்க இந்திய அணியை எதிர்கொள்ள டுபாய் பயிற்சி முகாம் போதுமானது அல்ல

## ஆஸியை மீண்டும் எச்சரித்தார் சப்பல்

ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சென்று நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. முதலாவது ஆட்டம் புனேயில் 23ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்திய அணியை எதிர்கொள்ள ஆஸ்திரேலிய அணி டுபாயில் பயிற்சி எடுத்து வருகிறது. இந்த நிலையில் டுபாய் பயிற்சி முகாம் இந்திய அணியை எதிர்கொள்ளப் போதுமானது அல்ல என்று கிரிக்கெட் வர்ணனையாளர் இயன் சப்பல் எச்சரித்தார்.
இந்திய ஆடுகளங்கள் சுழலுக்குச் சாதகமானவை. எனவே சுழலுக்குச் சாதகமான டுபாயில் ஆஸ்திரேலிய அணி பயிற்சி மேற்கொள்கிறது. இந்தப் பயிற்சி முகாம் இந்தியாவை எதிர்கொள்வதை இலகுவாக்கும் என்று முன்னாள், இந்நாள் வீரர்கள் பலரும் கருதிய நிலையில் நேர்மாறான கருத்தை வெளிப்படுத்தினார் இயன் சப்பல்.
முன்னாள் இந்திய அணியை விட தற்போதைய இந்திய அணி மிகவும் வலுவானது. குறிப்பாக துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என்று மூன்று துறைகளிலும் அந்த



அணி சீரான வலுநிலையைப் பேணுகிறது. இந்திய ஆடுகளங்கள் சுழலுக்குச் சாதகமானவை. அந்த அணியில் அஸ்வின், ஜடேயா என்று இரு முக்கிய சுழல் வீரர்கள் உள்ளனர். இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் சுழலை எதிர்கொள்வதில் திறமைசாலிகள். இவ்வாறான நிலையில் ஆஸ்திரேலிய அணியால் இந்தியாவில் வைத்து இந்தியாவை வீழ்த்துவதற்கு தற்போது மேற்கொண்டுவரும் டுபாய் பயிற்சி முகாம் போதுமானது என்று கருதவில்லை என்று இயன் சப்பல் தெரிவித்தார். முன்னதாகவும் அவர் இவ்வாறான ஒரு கருத்தை வெளிப்படுத்தியிருந்தார். (ம)

# டேவிஸ் ரென்னிஸ் தொடர் கனடா வீரர் தகுதி நீக்கம்

டேவிஸ் கிண்ணத் தொடரில் கனடா - பிரிட்டன் அணிகள் மோதிய ஆட்டத்தில் மைதானத்தில் அதிருப்தியான செயற்பாட்டை வெளிப்படுத்தியதன் காரணத்தால் கனடா வீரர் சபோவாலே தகுதி நீக்கம் செய்யப்பட்டார்,

சபோவாலே, தோல்வியடைந்த விரக்தியில் கையில் இருந்த பந்தை ரசிகர்களை நோக்கி கோபத்தில் வேகமாக அடித்தார். ஆனால், பந்து எதிர்பாராத விதமாக நடுவரின் இடது பக்க கண்ணைப் பலமாகத் தாக்கியது. இதனையடுத்து சபோவாலே தகுதி நீக்கம் செய்யப்பட்டார். கனடா தோற்றதை அடுத்து பிரிட்டன் காலிறுதிக்குச் சென்றது. (ம)





# ஆபிரிக்க கால்பந்தாட்டத்தில் கமரூன் கிண்ணம் வென்றது

ஆபிரிக்க கிண்ண கால்பந்துத் தொடரில் எகிப்தை வீழ்த்தி கிண்ணம் வென்றது கமரூன் அணி.

லிப்ரேவில்லி நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில எகிப்து அணியை எதிர்த்து கமரூன் விளையாடியது. முதல் பாதியில் எகிப்தின் கையே ஓங்கியிருந்தது. 22 ஆவது நிமிடத்தில் முகமது எல்னெனி அடித்த கோலின் மூலம் முன்னிலை பெற்ற எகிப்து அணி, அதன் பிறகு ஆட்டத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. முதல் பாதியின் முடிவில் 1:0 என்று ஆதிக்கம் செலுத்தியது எகிப்து. இரண்டாம் பாதியில் கமரூன் வீரர்கள் எகிப்தின் எல்லையில் அலையலையான தாக்குதல்களை நடத்தினர். 59 ஆவது நிமிடத்தில் நிகோலோ கொலு கமரூனின் முதல் கோலைப் பதிவு செய்தார். 1:1 என்றானதை அடுத்து ஆட்டத்தில் அனல் பறந்தது. ஆட்டம் முடிவதற்கு 2 நிமிடங்கள் மட்டுமே இருந்த நிலையில் கமரூன் வீர ரான அபுபக்கர் பதிவுசெய்த கோலால் முடிவில் அந்த 2:0 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியனானது. (ம)

# சசிகலாவை சொல்லவில்லையாம் அஸ்வின்

தமிழ்நாட்டின் முதலமைச்சராக சசிகலா பதவியேற்கவுள்ள நிலையில், இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரரான அஸ்வின், தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு 234 வேலைவாய்ப்புக்கள் உள்ளன என்று தனது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டார்.

தமிழ்நாட்டு சட்டமன்றத்தில் 234 உறுப்பினர்கள் உள்ளனர். அதனைக் கருத்தில் கொண்டே அஸ்வின் இவ்வாறு பதிவிட்டார் என்று கருத்துத்



தெரிவிக்கப்பட்டு வந்தநிலையில், தற்போது அவர் அதை மறுத்துள்ளார்.

தமிழ்நாட்டு அரசியலை கருத்தில் கொண்டு எந்தத் தகவலையும் வெளியிடவில்லை என்றும் அஸ்வின் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டார். (ம)

சிறுநீரகம் தேவை

11 வயதுடைய நோயாளி ஒருவருக்கு
O+, B+ இரத்த வகையைச்
சேர்ந்த சிறுநீரகம்
உடன் தேவை.
தொடர்பு: 077 940 6774, 076 830 5722
077 523 7508, 076 671 3897
(ஜே. 7967) (13.18.17)

# முன்னணி ஜாம்பவான்களுடன் ஒப்பிட இன்னும் சாதிக்க வேண்டும் கோக்லி

## பொண்டிங் கருத்து

இந்திய அணியின் தலைவரான கோக்லியை சச்சின், லாரா, கலிஸ், ரிச்சட்ஸ் போன்ற ஜாம்பவான்களுடன் ஒப்பிடுவது தவறு. அதற்கு இன்னும் காலமுள்ளது என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் பொண்டிங்.

ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆம், விராட் கோக்லி சிறந்த துடுப்பாட்ட வீரர்தான். கிட்டத்தட்ட 7 மாதங்களுக்கு முன்பாகவே நான் இவ்வாறு நினைத்தேன். இன்றுவரை அவர் முன்னேற்றப் பாதையிலேயே சென்றுகொண்டிருக்கிறார். சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்துகிறார். நிகழ்கால கிரிக்கெட் உலகில் அவருக்கு நிகர் அவரே. ஆனால், கடந்த கால ஜாம்பவான்கள், மிகப் பெரிய வீரர்கள் பட்டியலில் கோக்லியை அதற்குள் சேர்க்க முடியாது, இன்னும் சிறிது காலம் ஆக வேண்டும்.

ஆஸ்திரேலிய - இந்தியத் தொடரை ஆவலுடன் எதிர்பார்ப்பவர்களில் நானும் ஒருவன். இந்தத் தொடரில் ஆஸ்திரேலிய அணி எவ்வாறு இந்தியாவை அதன் சொந்த மண்ணில் எதிர்த்துப் போராடவுள்ளது என்று பொறுத்திருந்து பார்ப்போம் என பொண்டிங் மேலும் தெரிவித்தார். (ம)

நிரந்தர தொழில் வாய்ப்புக்கள்
பிரசித்திப் பெற்ற தொழிற்சாலைகளின்
லேபல், பொதியிடல், உற்பத்தி, வகைப்படுத்தல
போன்ற பிரிவுகளுக்கு வெற்றிடங்கள்.
மாதாந்தம் 18000 - 35000 வரை சம்பாதிக்கலாம்
உணவு தங்குமிடம் வழங்கப்படும்
18-55
0775561880 / 0774805891
Sakya Palali Rd Jaffna

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், தொழில் தேடுவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
ஆங்கிலத்தில் ஒரெழுத்துத்தெரியாதவர்கள்கூட மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்-11.02.2017
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
1. வாரநாள் பிரிவுகள் : (திங்கள், புதன் ) காலை 8-10 காலை 10-12
2. வாரநாள் பிரிவுகள் : (செவ்வாய், வியாழன்) காலை 8-10 காலை 10-12
SAAMSON
279, ஆஸ்பத்திரி பின்புறம்,
யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

காசி யாத்திரை
ஆரம்பம் 10.04.2017 நாள்கள் – 16, யாத்திரீகர் –20
தரிசிக்குமிடங்கள் **டெல்லி:** அட்ஷயதாம் உட்பட 7 இடங்கள் சுற்றிப்பார்த்தல், **ஆக்ரா:** தாஜ்மகால், செங்கோட்டை பார்த்தல், **மதுரா :** கிருஷ்ணஜென்மபூமி, **அலகாபாத்:** கங்கா, ஜமுனா, சரஸ்வதி (திருவேணி சங்கமம்), தீர்த்தமாடல், சயன ஆஞ்சனேயர் தரிசனம், **சீத்தாமடி** :சீதை பூமியுள் புதையுண்ட இடம் உட்பட 5 இடங்கள், **காசி:** விஸ்வநாதர், விசாலாட்சி காளபைரவர் உட்பட 15 இடங்கள் பார்த்தல் அரிச்சந்திரமகாராஜா சுடலை காத்த இடம் (கங்கைநீராடல்) காசியில் 3 நாள்கள் கங்காபூஜை பார்த்தல், **ஹரித்துவார்:** கங்கை நீராடல், 10 இடங்கள் சுற்றிப்பார்த்தல், **ரிஷிகேஸ்:** சிவானந்த ஆச்சிரமம் உட்பட்ட இடங்கள் தரிசனம், **குருச்சேத்திரம்:** பாண்டவர்கள் யுத்தம் புரிந்த இடம் உட்பட 10 இடங்கள் சுற்றிப்பார்த்தல். அத்துடன் **பிரம்மதீர்த்தம்** நீராடல். **கயா:** உறவினர்களுக்கு சிரார்த்தம் செய்தல். **புத்தகயா:** புத்தாலயங்கள் 5 பார்த்தல் **இராமேஸ்வரம்:** (தீர்த்தமாடல்) 2 கிணறுகளில் உத்திரகோசமங்கை உட்பட 7 இடங்கள் தரிசித்தல் **சென்னை:** வருகை வான்வலம் **திருப்பதி** விஸ்ணு, அலமேலு மங்கா தரிசித்து சென்னை வருகை
**எமது சேவை:** 5 விமான ரிக்கட்.சுத்தமான குடிநீர்.A/C வாகனவசதி.மடப்பள்ளி ஆள்கள் சமைத்த மூன்று வேளை உணவு, காப்பி, ரீ. 2 பேருக்கு தரமான கட்டில், மெத்தை .குளியலறை இணைந்த அறைகள்.எயார் போட் போக வர வாகன வசதி (ரயில் பயணம் கிடையாது) மேலும் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும். ஒரு நாள் சென்னையில் சொப்பிங்.
மேலதிக விவரங்களுக்கு:
கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் - 077 768 0102
மகன் ராஜன் : 077 736 2154




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.